NAVA LAW
Professional Corporation
Real Estate | Corporate
Commercial | Immigration
Family | Wills & Estate
10 Milner Business Ct. Suite 210
416 321 1100 www.navalaw.ca

தாயகத்திலும் கனடாவிலும் வெளிவரும்

# ஏகுருவி

ekuruvi.com

iNFORCE LIFe Financial Services Inc.
WE ARE HIRING
416.909.0400
www.inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough

சிறகு-04 June 2016 இணைய மாத இதழ் பறப்பு-06

## கனடியத் தமிழர் 'லிபரல்' காங்கிரஸ்



- தமிழ் டயஸ்பொறாவை ராஜியச் செல்வாக்கு மிக்க ஒரு சமூகமாக யார் கட்டியெழுப்புவது?
- மீண்டும் திறக்கும் ஜெனீவா அரங்கு
- வழித்தேங்காய்களும் தெருத்தெய்வ
- அமெரிக்காவில் தனிநபர் ஒருவரால் 50 பேர் சுட்டுக்கொலை

COCONUT CARNIVAL
JUNE 25 & 26
11am-11pm
MARKHAM FAIR

GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU. WE HAVE THE Right Mortgage for you!
THE GUARDIAN
Gini Annarasa, Mortgage Broker
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change $24.99 + tax
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21 Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
நாளை நம் கையில் இன்றே செயற்படுங்கள்
Critical Illness | No medical Life | Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances, RRSP | RESP
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

MRI SUPER RENOVATIONS AND PAINTING
www.mrisuperrenovations.com
Raj Munees
General Contractor
Cell: 416-618-4584 | Off: 416-299-3633
Free Estimate | Reasonable Price | Quality & Relible Work
Full Basement Renovation | Kitchen Cabinets
Hardwood & Tiling | Painting | Electrical & Plumbing

Need 2nd Mortgage?
அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
Value of Your Home - Amount Owing on 1st Mortgage = Equity Available for a 2nd Mortgage
647 - 449 - 3994

Tam Sivathasan
Broker of Record
416.804.3443
MEDICAL & PROFESSIONAL CENTRE
AT MARKHAM & FINCH
EXCLUSIVE
800 SQ. FT AND UP
2016 FALL OCCUPANCY
CALL FOR INFORMATION
VEEDU REALTY INC. BROKERAGE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

# நல்லிணக்கத்திற்கு நாம் என்ன செய்தோம்?

ஸ்ரீலங்காவின் ஆட்சிமுறைமை தொடர்பாக ஜனநாயக மற்றும் சமத்துவ ஏற்பாடுகளுடன் நிரந்தரத்தீர்வும் அரசியலமைப்பு திருத்தமும் கிடைக்கும் வரை அரசாங்கத்திற்கு பங்களிப்பு வழங்கமுடியாது என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவருமான இரா. சம்பந்தன் இலங்கை நாடாளுமன்றத்தில் அண்மையில் கூறியிருக்கும் கருத்து சிலரது புருவத்தை உயர்த்தியுள்ளது. இலங்கையின் "நல்லிணக்க"அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறிய கணம் முதல் அவர்களை தாங்கிப்பிடித்த எதிர்க்கட்சி(தமிழ் தேசியக் கூட்டமைப்பு) அண்மைக் காலங்களில் அதே அரசாங்கத்தின் மீது சிறிய அளவிலேனும் விமர்சனங்களை முன்வைக்க முனைகின்றது. அதன் ஒரு அங்கமாகவே இரா.சம்பந்தனின் இந்தக் கூற்றும் நோக்கப்படவேண்டும்.

இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு 2016ஆம் ஆண்டின் இறுதிக்குள் தீர்வு கிடைக்கும் என தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் கூறியதும் அதனை நியாயப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்தும் களத்திலும் புலத்திலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. இந்த "தீர்வுக்கான காலக்கெடு" குறித்து ரொறன்ரோவில் கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் பதிலளித்த நாடாளுன்ற உறுப்பினர் எ.எம்.சுமந்திரன், "இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால் ........" என்ற தோரணையில் வழங்கிய பதில் கவனிக்கப்படாமல் போயிருக்காது.

ஆனாலும் இலங்கைத்தீவில் "நல்லிணக்கம்" என்ற சொல்லாடலுக்கு புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பு என்ன என்பதில் கேள்விகளும் குழப்பங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த விடயத்தில் பங்களிப்பாளராவதா அல்லது பார்வையாளராக இருப்பதா என்ற இருதலைக் கொள்ளி எறும்பாக உள்ளது புலம்பெயர் சமூகம். தாயக மக்கள் தமது அபிலாசைகளை தாங்களே தீர்மானிக்கட்டும். புறமுதுகு காட்டிய புலம்பெயர் சமூகம் அதில் கருத்துச் சொல்ல எதுவும் இல்லை என வகையிலான விமர்சனங்களுக்கு குறைவில்லை. அதேவேளை "தொப்புள்கொடி" உறவுகளில் நலன்களில் ஒரு இனமாக அனைத்து தமிழர்களுக்கு கருத்துரிமை உள்ளது என்ற கருத்தும் ஆணித்தனமாகவே முன்வைக்கப்படுகின்றது.

ஆனாலும் புலம்பெயர் சமூகம் அந்தந்த நாடுகளின் ஆதரவை இலங்கைத் தமிழர்கள் பக்கம் மாற்றும்(அல்லது அதிகரிக்கும்) நகர்வுகளை மேற்கொள்வதே அவசியமானதும் அவசரமானதுமாகும். அதில் புலம்பெயர் சமூகம் எந்த அளவில் வெற்றி கண்டிருக்கின்றது என்பது குறித்து சுயவிசாரணை செய்யப்படவேண்டிது ஒன்றாகும்.

புலம்பெயர் தமிழர்கள் அமைப்புக்கள் நிகழ்வுகளின் அரங்கேற்றங்களிலும் வெற்றிகளிலும் காட்டும் ஆர்வத்தை அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களின் ஆதரவை எமது நலன்கள் சார்ந்த விடயங்களுக்கு பெறுவதில் காட்டுவதில்லை என்பது மேலோட்டமான குற்றச்சாட்டாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளவேண்டிய தொன்றாகும். மே மற்றும் நவம்பர் தவிர புலம்பெயர் சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் மற்றும் விழாக்களின் பட்டியல் ஒன்றை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டால் இதன் உண்மை புரியும்.

ஏட்டிக்கு போட்டியாக நிகழ்வுகளை தேடி தேடி செய்யவேண்டிய நிலையில் எமது அமைப்புக்களும் , சுய விளம்பரத்திக்காகவும் , மேடை ஆசைக்காகவும் புதிய அமைப்புக்கள் நித்தம் தொடங்கிய வண்ணம் உள்ளன.

குளிர்காலம் வந்தால் உள்ளக நிகழ்வுகளிலும் கோடைகாலத்தில் வெளிக்கள நிகழ்வுகளிலும் தமது பலத்தையும், நேரத்தையும், திட்டமிடலையும் செலவுசெய்யும் தமிழர்சார் அமைப்புக்கள் அந்த நாட்டின் அரசாங்கங்களையும், கொள்ளை வகுப்பாளர்களையும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளின் நியாயத்தன்மையின் பக்கள் சாய்ந்திருக்கவேண்டிய நகர்வுகளை மேற்கொள்வதில்லை என்பதே கசப்பான நிதர்சனம்.

இதில் இருந்து மாறவேண்டியதும் எங்களை மாற்றிக்கொள்ளவேண்டியதுமே புலம்பெயர் சமூகத்தின் இன்றைய தேவையாகும்.

இலங்கைத்தீவில் நல்லிணக்கத்திற்கு நாம் செய்யும் கைமாறும் அதுவே.

# உள்ளடக்கம்

நம்பி வாங்க சந்தோசமாக போங்க - க .சிவமணி

வழித்தேங்காய்களும் தெருத் தெய்வங்களும் - இந்திரன் ரவீந்திரன்

செவ்வாற்றுக் கடமை - சிவதாசன்

தேர்தலுக்கு தயாராகும் ஸ்காபுரோ ரூச் ரிவர் - ராகவி

கனடியத் தமிழர் 'லிபரல்' காங்கிரஸ் - ரமணன் சந்திரசேகரமூர்த்தி

தமிழ் டயஸ்பொறாவை ராஜியச் செல்வாக்குமிக்க ஒரு சமூகமாக யார் கட்டியெழுப்புவது? - நிலாந்தன்

கனடா மூர்த்தி எழுதும் இகுருவி ஐயாவும் நானும்

ஈழத் தமிழர்களின் இழந்த கல்வியை மீளப் பெறுவோமா ? - ந அனந்தராஜ்

மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளை மைத்திரியும் , மீண்டும் திறக்கும் ஜெனிவா அரங்கும் - புருசோத்தமன் தங்கமயில்

மீகுருவியின் வெளியீடாக தாயகத்தில் இரு நூல்களின் வெளியீட்டு விழா

தெற்கு ஆசியர்களின் கனடா வருகை - குரு அரவிந்தன்

அமெரிக்கா போல் தமிழ்நாட்டில் அதிமுக திமுக என இரண்டு திராவிடக் கட்சிகளே மிஞ்சப் போகின்றன - நக்கிரன்

ஒரு உண்மையான மன்னிப்பு - ராகினி

கனடிய நாடளுமன்றத்தில் தமிழர்கள் தொடர்பாக இரண்டு அறிக்கைகள் சமர்பித்தார் - ஹரி ஆனந்தசங்கரி

இஸ்லாமியத்தின் உண்மையான அமைதி முகம் குத்துச் சண்டை வீரர் முகமது அலி -எஸ் ஆர் ராஜபாலன்

தொழில் முனைவோர் கடைப் பிடிக்க வேண்டிய சில அடிப்படையான செயல்கள் - சிவராஜ் ராமநாதன்

உலகை அச்சுறுத்தும் உடல் பருமன் - ராஜ்மோகன் செல்லையா

மௌனம் கலைப்பரா கலைஞர் ? - குயின்ரஸ் துரைசிங்கம்

உலகப் பொருளாதாரம் தங்கமே தங்கம் - தெ . ஞாலசீர்த்தி

பல்லிளிக்கும் பயங்கரவாதமும் பலிக்கடாக்களாகும் பொதுமக்களும் - ஏ ,கே ஞாநேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை கலக்கிய 50 பேர் உயிரிழந்த பயங்கரவாதத் தாக்குதல்

அமெரிக்காவிலுள்ள கேளிக்கை விடுதிக்குள் ஆயுதம் தாங்கிய நபர் புகுந்து கண்மூடித்தனமாக சுட்ட சம்பவத்தில் 50 பேர் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய நபர் அதிரடிக் காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த நபர் நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த 53 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்த நாட்டின் புளோரிடா மாகாணம், ஓர்லண்டோ நகரில் உள்ள கேளிக்கை விடுதியில் சனிக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற இந்த சம்பவத்தை "பயங்கரவாதத் தாக்குதல்' என்று காவல் துறையினர் கூறினர்.

அந்த விடுதியில் நள்ளிரவு 2 மணியளவில் ஒரு நபர் திடீரென துப்பாக்கியால் சரமாரியாக சுடத் தொடங்கினார். தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தில், பலர் அங்கிருந்து தப்பி வெளியேறினர்.



முப்பதுக்கும் மேற்பட்டோர் விடுதிக்குள் சிக்கிக் கொண்டனர். சுமார் 3 மணி நேரம் அவர்கள் பிணைக் கைதிகளாக இருந்ததாக போலீஸார் கூறினர்.

துப்பாக்கிச் சூடு விவரத்தை அறிந்து அந்த இடத்துக்கு அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டனர். பிணைக் கைதிகளின் உயிருக்கு ஆபத்தின்றி மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுவது குறித்து திட்டமிட்டு, அதிகாலை 5 மணிக்கு விடுதிக்குள் அவர்கள் நுழைந்தனர்.

அதைத் தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் அந்த நபரை அதிரடிக் காவல் படையினர் சுட்டு வீழ்த்தினர்.

கேளிக்கை விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்திய அந்த நபரின் பெயர் ஒமர் மதீன் என்றும், அவர் ஃபுளோரிடா மாகாணம், போர்ட் செயின்ட் லூசி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் ஊடகங்கள் தெரிவித்தன.

இவர் ஆப்கன் வம்சாவளியினர் என்றும் அத்தகவல்கள் தெரிவித்தன. துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் படுகாயமடைந்த 53 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அந்த நபர் சுட்டதில் காயமடைந்தவர்கள் எத்தனை பேர், அவருக்கும்அதிரடிப்படையினருக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் காயமடைந்தவர்கள் எத்தனை பேர் என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை.

தாக்குதல் நிகழ்த்திய நபர் கைத் துப்பாக்கியும், தானியங்கி ரகத் துப்பாக்கியும் வைத்திருந்ததாகப் போலீஸார் தெரிவித்தனர். மேலும் அவரது உடலில் வெடிபொருள்களைப் பொருத்தியிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

அந்த கேளிக்கை விடுதி ஓரினச் சேர்க்கையாளர்களுக்கானது என்று கூறப்படுகிறது. துப்பாக்கிச் சூடு நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்ட நகர மேயர் ஜான் ஹியூ டையர், நகரத்தில் நெருக்கடி நிலையை அறிவித்தார்.

ஃபுளோரிடா மாகாணம் முழுவதும் நெருக்கடி நிலையை அறிவிக்க வேண்டும் என்று மாகாண ஆளுநருக்கு மேயர் கோரிக்கை விடுத்தார்

இந்த சம்பவத்தில் உயிர் பிழைத்த ஜான் ஆலமோ, சம்பவம் குறித்து விவரிக்கிறார்.

துணிக் கடை விற்பனை பிரதிநிதியாக இருக்கும் 22 வயதான ஜான் ஆலமோ, சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் கேளிக்கை விடுதிக்குச் சென்றுள்ளார். இன்றைய இரவு வெகு சிறப்பான இரவாக இருக்கும் என்று அவர் சென்றார்.

அங்கு தனது நண்பர்களை சந்தித்து, ஒரு மிகப்பெரிய அறையில், சத்தமாக இசைக்கப்பட்ட பாடலுக்கு இளைஞர்கள் கூட்டம் நடனமாடிக் கொண்டிருந்தது. அதில் ஆலமோ இணைந்து கொண்டார்.

மதுபானங்களைக் குடித்துக் கொண்டும், நடனமாடிக் கொண்டும் இரவு கழிந்து கொண்டிருந்தது.

சுமார் 2 மணியிருக்கும்... துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. தொடர்ந்து 3 நிமிடங்கள் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. என்னால் என்ன நடக்கிறது என்பதை உணரவே முடியவில்லை. அதற்குள் எல்லாம் முடிந்தே விட்டது என்றார்.

மேலும், குற்றவாளி, துப்பாக்கியால் சட்டத்தை பார்த்தது பற்றி ஆலமோ கூறுகையில், சினிமாவில் பார்ப்பது போல, இடது பக்கத்தில் இருந்து வலது பக்கம் வரை முழுமையாக தனது துப்பாக்கியை இயக்கிக் கொண்டே திரும்பினான். இன்னும் ஒரு சில நொடிகளில் நான் சாகப்போகிறேன் என்று நினைத்தேன். ஆனால், நான் வாழ கடவுள் எனக்கு மற்றொரு நாளைக் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கும் போது, அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். இது உண்மையா என்றே என்னால் நம்பமுடியவில்லை என்றார்.



இந்த தாக்குதலை நடத்திய ஒமர் மதீன் என்ற 29 வயது வாலிபர் போலீசார் நடத்திய என்கவுண்ட்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆப்கானிதான் நாட்டில் இருந்து வந்து அமெரிக்காவில் குடியேறிய சித்திக் மதீன் என்பவரின் மகனான ஒமர், ஐ.எஸ். தீவிரவாதிகளின் உத்தரவின் பேரில் இந்த தாக்குதலை நடத்தினாரா? என்ற கோணத்திலும்அமெரிக்க போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இதற்கிடையில், கொலையாளியின் தந்தையான சித்திக், ஒமர் தொடர்பாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி வருகிறது. அமெரிக்காவில் வசித்தபடியே ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பிவந்த சித்திக், தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தி பல்வேறு விவாத மேடைகளிலும் முன்னர் பங்கேற்றுள்ளார் என தெரியவந்துள்ளது.

தலிபான்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டுக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் டி.வி. விவாத மேடை நிகழ்ச்சிகளின் தனி தொகுப்புகள் யூடியூப்பில் கூட ஏராளமாக காணக் கிடைக்கிறது. அந்த பதிவுகளில் சித்திக் மட்டினின் புளோரிடா வசிப்பிட முகவரியும், அவரது தபால் பெட்டி மற்றும் கைபேசி எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் யூடியூப்பில் வெளியாகியுள்ள இவரது வீடியோவில் ஆப்கானிஸ்தான் அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் சித்திக் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று புளோரிடா இரவு விடுதியில் 50 பேரை சுட்டுக் கொன்ற இவரது மகன் ஒமர் மதீன், துப்பாக்கிச் சூட்டுக்கு இடையே அந்த இரவு விடுதியின் கழிப்பறையில் மறைந்திருந்தபடி கைபேசி மூலமாக போலீசாருடன் பேசியுள்ளான்.

அப்போது, பாஸ்டன் நகரில் நடைபெற்ற குண்டுவெடிப்பு தாக்குதலை நினைவூட்டிய அவன், ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தை புகழ்ந்து பேசியதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, செய்தியாளர்களுக்கு நேற்று பேட்டியளித்த ஒமரின் தந்தை சித்திக், இச்சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், 'எனது மகனின் செயலுக்கும் அவன் சார்ந்திருந்த மதத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது' என குறிப்பிட்டுள்ளார்.

'இதுபோன்ற கொலைவெறி தாக்குதலில் அவன் ஈடுபடுவான் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அந்த செய்தியை அறிந்து ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அதிர்ந்துபோய் இருப்பதைப்போல் நானும் எனது குடும்பத்தாரும் அதிர்ச்சியடைந்துள்ளோம். எனினும், அந்த தாக்குதலுக்கும் அவன் சார்ந்திருந்த மதத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது.

சில மாதங்களுக்கு முன்னர் மியாமி நகரில் ஓரினச் சேர்க்கையாளர் ஜோடி பொது இடத்தில் முத்தம் கொடுப்பதை அவன் பார்த்து ஆத்திரம் அடைந்துள்ளான்.

அதுவும் அவனது சிறுவயது மகனின் கண்ணெதிரே நடந்த அந்த அநாகரிக செயல் ஒமரின் மனதில் ஆழமாக பதிந்துப் போய் இருந்தது' என்று பேட்டியளித்துள்ளார் சித்திக்.

இத்தாக்குதலுக்கு ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தாக்குதல் நடத்திய மர்மநபரின் பெயர் ஒமர் மேட்டின் எனவும், ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பை சேர்ந்த அவன், □911' என ஐ.எஸ்., இயக்கத்தால் அழைக்கப்பட்டான் எனவும் தெரியவருகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு ஐஎஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஆயுதங்களுடன் சுற்றித் திரிந்த நபரை போலீசார் கைது செய்துள்ளனர். இதன் காரணமாக நியூயார்க் நகரில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய ஒமர் மேட்டின் ஓரினச் சேர்க்கைக்கு எதிரானவர் எனவும், அவர் தனது மனைவியை கொடூரமான முறையில் துன்புறுத்தி வந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது

அமெரிக்காவில் அவ்வப்போது யாராவது துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் 89 ஆண்டுகள் கழித்து தற்போது தான் தனிநபர் ஒருவரால் அதிகமானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு அமெரிக்க அதிபர் ஒபாமா, கனடிய பிரதமர் ஜஸ்டின் , இந்திய பிரதமர் மோடி உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பி வாங்க சந்தோசமா போங்க

## உலகளாவிய Take Out Business Masters



க.சிவமணி

ஆன்மீகம் என்பது நம் வாழ்க்கையை, இயற்கையை, பிரபஞ்சத்தை ஒட்டுமொத்தமாகவும் முழுமையாகவும் அறிவதற்கான ஒரு மானுடமுயற்சி. முழுமைநோக்கு அல்லது சாராம்சநோக்கு என அதை விளக்கலாம். இந்திய மதங்களில் 'இதம்' என்ற சொல் முக்கியமானது. 'இது' என அச்சொல்லுக்கு அர்த்தம். இதெல்லாம் என்ன, இதெல்லாம் ஏன், இதெல்லாம் எவ்வாறு என்ற வினாக்களுக்கான பதில்தேடலே ஆன்மீகம்.

கடவுள் என்பது முன்னோரால் கண்டடையப்பட்டு நமக்களிப்பட்டுள்ள ஒரு பதில் மட்டுமே. அந்தப் பதிலானது கடவுள் என ஒற்றைச் சொல்லாக இருந்தாலும் உண்மையில் அது பலவகையாக விளக்கப்படுவது. கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை கடவுள் என்பவர் 'இந்த உலகத்தைப் படைத்து, காத்து, அழிக்கக்கூடிய ஓர் ஆளுமை அல்லது இருப்பு'. இஸ்லாமுக்கும் அப்படித்தான். இந்து மரபின் அடிப்படையாக உள்ள கடவுள் உருவகம் பிரம்மம். பிரம்மம் என்றால் இந்த முடிவற்ற பிரபஞ்சத்துக்கு எது மூலகாரணமாக உள்ளதோ அது. இந்தப் பிரபஞ்சம் அந்த மூலகாரணத்தின் ஒரு தோற்றம் மட்டுமே. அந்த மூலகாரணம் எப்படிப்பட்டது என்று அறியவோ விளக்கவோ முடியாது.

ஆனால் இப்பிரபஞ்சம் அந்த மூலகாரணத்தின் இன்னொரு வடிவம் என்பதனால் இதில் உள்ள எல்லாமே அதுதான். அதாவது மோர் என்பது உண்மையில் பால்தானே? ஆகவே இப்பிரபஞ்சத்தை, இதில் உள்ள எல்லாவற்றையும் அந்த மூலகாரணமாக எண்ணலாம். ஒரு மரமோ, மிருகமோ, பாறையோ, புயலோ, மழையோகூட அதன் தோற்றமே. இங்குள்ள அன்பு கருணை வீரம் எல்லாமே அதன் தோற்றமே, இவ்வாறு இந்து மரபு பல்வேறு கடவுள்களை உருவகித்துக்கொண்டது. எங்கெல்லாம் நம்மை நம் அன்றாடப் பார்வைக்கு அப்பால் பார்க்கச்செய்யும் ஒரு பிரம்மாண்டம் தென்படுகிறதோ அங்கெல்லாம் கடவுளைக் கண்டது. இவை இருவகை. பொருட்கள், கருத்துக்கள். ஆயிரம் விழுது பரப்பிய ஓர் ஆலமரம் பொருள்வடிவமான கடவுள் என்றால் ஒரு அகோர வீரபத்ரர் வீரம் என்ற விழுமியத்தின் வடிவமான கடவுள். ராமன், கிருஷ்ணன், சிவன், விஷ்ணு போன்ற பெருங்கடவுள்கள் பற்பல விழுமியங்களைத் தொகுத்து உருவகித்த ஒட்டுமொத்த வடிவங்கள். ஆனால் அவை எல்லாவற்றையும் பிரம்மம் என்றுதான் இந்து மரபு சொல்லும். அறியமுடியாத பிரம்மத்தை இந்த அறியக்கூடிய வடிவத்தில் வழிபடுகிறோம் என்று அதற்குப்பொருள். இந்த விஷயத்தைக் குறியீடுகள் மூலம் விளக்குபவைதான் புராணங்கள்.

பௌத்தம் கடவுள் என்றால் பிரபஞ்சத்தை இயக்கும் முழுமுதல் நெறி அல்லது விதி என்று உருவகித்து அதை மகாதர்மம் என்ற சொல்லால் குறிப்பிட்டது.அதன் வடிவமாக புத்தரின் உடலை பிற்காலத்தில் உருவகித்துக்கொண்டார்கள்.

இந்த 'கடவுள்' என்ற கருதுகோள் நமக்கு ஏன் தேவையாகிறது? மூன்று அடிப்படைக் காரணங்களுக்காக.

1. நாம் வாழும் இந்த வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் முன்பின் தொடர்பு இல்லாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. பிறப்பு இறப்பு நோய் இழப்பு மகிழ்ச்சி என மாறி மாறி நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த ஓட்டத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே நமக்கு ஒரு பதற்றம் ஏற்படுகிறது. கடவுள் என்ற உருவகம் இதைப்பற்றிய பதற்றத்தை தீர்க்க உதவுகிறது. வாழ்க்கையை கடவுளை வைத்து எளிமையாக வகுத்துக்கொள்ள முடியும். கடவுள் என்பது எளிமையான திட்டவட்டமான விடை. மானுட வாழ்க்கையில் நம்பிக்கையையும் பிடிப்பையும் அந்த உருவகம் அளிக்கிறது

2. மனிதன் அன்பு,பாசம், கருணை, தியாகம், ஒழுக்கம் போன்ற பல நற்பண்புகளையும் பல்வேறு அறங்களையும் உருவாக்கிக்கொண்டிருக்கிறான். இந்தப் பண்புகளும் அறங்களும் சீரான சமூகச் செயல்பாடுகளுக்கு இன்றியமையாதவை. கடவுள் என்ற உருவகம் இந்த எல்லா நற்பண்புகளையும் அறங்களையும் தொகுத்துக்கொண்ட ஒரு வடிவமாக உள்ளது. 'அன்பே சிவம்' 'ஏசு அன்பாக இருக்கிறார்' போன்ற வரிகள் இதையே குறிக்கின்றன

இந்தப் பண்புகளையும் அறங்களையும் நம் மனதிலும் சமூக மனதிலும் நிலைநாட்ட கடவுள் என்ற உருவகம் உதவுகிறது. கடவுள் பக்தி என்பது சாதாரணமாக நம் வாழ்க்கையில் இந்த அறங்கள் மேல் கொண்ட உறுதியான நம்பிக்கை என்றுதான் அர்த்தம் கொள்கிறது. அன்றாட வாழ்க்கையில் அறம் நீடிப்பதற்கு கடவுள் தேவையாகிறார்

3. மனிதனுக்கு இந்த பிரம்மாண்டமான பிரபஞ்சத்தில் ஒரு தனிமை உணர்ச்சி உள்ளது. ஆகவே அவனுக்கு தலைக்குமேலே அவனை பார்க்கக்கூடிய அவனைப் பாதுகாக்கக்கூடிய ஒரு தந்தை, அல்லது எஜமான், அல்லது அரசன் அல்லது அளவிடமுடியாத ஆற்றல் தேவையாகிறது. அதாவது மனிதனுக்கு வேண்டிக்கொள்ளவும் மன்றாடவும் புகார்செய்யவும் ஒரு இடம் தேவை. கடவுள் அந்த இடம்.

கடவுள் உண்டா இல்லையா என்பது பொத்தாம்பொதுவான கேள்வி. எந்தக் கடவுள், எப்படிப்பட்ட கடவுள் என்பதே இன்னும் குறிப்பான கேள்வி. அத்துடன் இந்தப் பிரபஞ்சத்தை ஆளும் ஒரு அலகிலா ஆற்றல் உண்மையில் உள்ளதா இல்லையா என்பது ஆன்மீகமான கேள்வி. அதை ஆன்மீகதளத்தில் எழுப்பிக்கொள்ளலாம். அதைக் கடவுளுடன் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை. நடைமுறை வாழ்க்கையில் கடவுள் உங்களுக்கு எதற்காகத் தேவைப்படுகிறார் என்பதே இன்னும் முக்கியமானது. உங்களுக்கு ஏசு எதற்காகத் தேவைப்படுகிறார்? உங்கள் மனதில் ஏசு உயர் பண்புகளுக்கும் அறத்துக்கும் வடிவமாக இருக்கிறார் என்று கொள்வோம். ஏன் அவர் உண்டா இல்லையா என்று நீங்கள் விவாதிக்கவேண்டும்? அந்தப் புராணக்கதைகள் உண்மையா பொய்யா என ஏன் நினைக்கவேண்டும்?

பண்புக்கும் அறத்துக்கும் வடிவமான ஏசுவைப் பணிந்து அவர்முன் கண்ணீருடன் மண்டியிடுவதில் என்ன நஷ்டம்? உங்கள் ஆன்மாவில் அவர் அன்பையும் பண்பையும் தியாகத்தையும் நிறைக்கிறார்தானே? ஆகவேதான் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்தால் நீங்கள் நிறைவடைகிறீர்கள். அந்த நிறைவை நீங்கள் இழக்க வேண்டியதில்லை.

ஒரு எளிய லௌகீகனாக உங்கள் அச்சங்களைக் களையவும் உங்கள் துயரங்களை இறக்கி வைக்கவும் உங்களுக்கு ஒரு கடவுள் தேவைப்படுவார் என்றால் அந்தக் கடவுளிடம் அதைச் செய்வதில் பிழை ஒன்றும் இல்லை. தேவாலயத்தில் அதை செய்யலாம். கடவுள் உண்டா இல்லையா என்பதை முதலில் முடிவுசெய்துவிட்டுதான் இதையெல்லாம் செய்வேன் என்று நினைப்பதில் அர்த்தமில்லை. இந்தக் கடவுள் உருவகம் உங்களுக்கு எதை அளிக்கிறது என்பதே முக்கியம்.

கடவுள் என்ற மையத்தைச் சுற்றி எழுப்பப்பட்டுள்ள மதம் என்பது கடவுளில் இருந்து பெரிதும் வேறுபட்டது. மதம் என்பது பெரும்பாலும் ஒரு சமூக அமைப்புதான். பிறப்பது முதல் இறப்பது வரையிலான சடங்குகளின் தொகை அது. ஒரு மக்கள்கூட்டத்தை இணைத்துக்கட்டும் நம்பிக்கை. அந்த சமூக அமைப்பு உங்களுக்கு ஒரு சமூகவாழ்க்கையை வாழ உதவுகிறது என்றால் அதில் இயல்பாக நீடிப்பதே சரியானது. அந்தச்சடங்குகள் மூலம் உங்களுக்கு ஒரு தெளிவான புற அடையாளமும் வாழ்க்கைநெறியும் உருவாகிறது என்றால் அதைக் கடைப்பிடிப்பதிலும் பிழை இல்லை. உங்கள் குடும்பம் அதில் இயல்பாக வாழ்கிறது என்றால் அதை அவர்கள் அனுபவிக்க அனுமதிப்பதே விவேகம். ஆன்மீகமான தேடலைக் கடவுள் மதம் இரண்டுக்கும் அப்பால் வைத்துக்கொள்ளவும். அது மிகமிக அந்தரங்கமானது.ஒருகுரு அமைந்தால் அவரிடமன்றி எவரிடமும் அதைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது. அதைப் புறவயமாக விவாதிக்கக் கூடாது.

ஆன்மீகம் என்பது நாம் நமக்குரிய விடையை நாமே கண்டடைந்து அதை நம்முள் நிறைத்துக்கொள்வதாகும். அது பல படிகளிலாக நம்முடைய அகத்தில் நாம் சிறுவயது முதலே பெற்று நிறைத்திருக்கும் ஏராளமான நம்பிக்கைகள் அழிந்து, மனப்பழக்கங்கள் மாற்றம் கொண்டு, நாமே மெல்லமெல்ல மாற்றம் அடைந்து நாம் சென்று சேரும் ஓர் இடம். அந்தப் பயணத்தின் எல்லாப் படிகளும் அந்த வகையில் நம்மை மேலே கொண்டுசெல்லக்கூடியவையே.

ஆன்மீகத்தை ஒரு தூய மெய்த்தேடலாக, மத அடையாளம் அற்றதாக, அந்தரங்கமானதாக வைத்துக்கொள்வதே நல்லது. ஆன்மீகதளத்தில் நீங்கள் இந்துவோ கிறித்தவனோ அல்லாமல் ஒரு தூய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடப்பிரக்ஞையாக மட்டுமே இருப்பதே ஒரே வழி. அந்நிலையில் எல்லா மதநூல்களும் எல்லா ஞானங்களும் அனைவருக்கும் ஒன்றே.

வேகமன உலகத்து வாழ்க்கை முறை மேலே குறிப்பிட்ட ஞானநெறி முறைகளை கற்றுத் தெளிவதில் நாட்டமில்லாமலே சென்று கொண்டிரக்கிறது. புலம்பெயர் தேசத்தில் ஆலயங்களை குருக்கள் மார்களின் பணப்பறிப்பு இடமாகவும் மூட நம்பிக்கைகளின் கூடாரமாக நினைக்கிறார்கள் அறிவுஜீவிகள்க. னேடிய இந்து ஆலையங்களில் பணமும் பணம் உடையவர்களும் முன்னிலைப்படுத்தப்படுவதும் ஆங்கில அரசியல்வாதிகளின் பிரசன்னத்தை இறையருளைப்போல் சிலாகிப்பதும் ஏதோ மறைக்க முடியாத உண்மைதான்.

மறுபுறத்தில் இந்த அறிவுஜீவி இனங்கள் வியாபாரிகளின் களியாட்டங்களுக்கு இருக்கும் Lions Club மற்றும் Rotary Clubக்களைப் போல் உலகளாவியரீதியில் கிளைகளைக் கொண்டிருக்கும் ஆன்மீகக் Clubபுகளுக்கு செல்வதையே ஒரு Fashionஆகவும் பக்தியாகவும் நினைக்கிறார்கள். கோவில்களும் மற்றய மதாலாயங்களும் சொல்லாதவற்றை எனது குரு, எனது சுவாமிகள், எனது அம்மாகடவுள், எனது அப்பாக்கடவுள் சொல்லித்தருகிறார்கள் அதனால் நான் அமைதி அடைகிறேன் ஆனால் என் கோவில்களோ திருவிழாக்கள் என்று சொல்லி என் பணத்தைத் திருடுவதிலேயே குறியாக இருக்கிறது என குறைப்படுவது ஒரு வாடிக்கையாகி வருகிறது.

ஆன்மீகக் Club சுவாமிகள் புதிதாக எதையும் சொல்கிறார்களா என்றால் அவர்களிடம் அப்படிச் சொல்வதற்கு எதுவும் இருப்பதில்லை. ஆனால் எல்லாவற்றையும் Polished ஆகச் சொல்லுவார்கள். நாம் மேலே கூறிய "அதாவது மோர் என்பது உண்மையில் பால்தானே?" என்பதை Club சுவமிகள் பெரும்பாலும் ஒரு ஞான விழாவாக மாற்றுவார்கள். ஒரு பௌர்ணமி இரவைத் தேர்ந்தெடுத்து அதற்கு "உன்னையே நீ அறிவாய்" போன்ற பெயர்களை இட்டு அதற்குத் இந்த அறிவு ஜீவிகளை ஞானவிழாவென வரவழைத்து பால் ஞானத்தை விளக்கத்துடன் செய்து காட்டுவார்கள். பக்தர்களுக்கு பால் வழங்கப்பட்டு மந்திர ஒலி ஏற்றப்பட்டு ஒரு Vibration உருவாக்கப்பட் பின்னர் அறிவுஜீளை அவர்களிடம் உள்ள பாலை தயிருக்காக உறையூட்டப் பட்டிருக்கும் பாத்திரத்துக்குள் ஊற்றுமாறு குருஜி அருள் வாக்குச் சொல்லுவார். இந்த நிகழ்வு முடிந்த பின் பிரார்த்தனைகளும் மந்திர ஓதுதலும் நடந்து முடிந்து விடியலை அடைந்துபின்னர் குருஜின் உதவியாள் தயிர் தயாராகி விட்டது என்ற தகவலை ஜீக்கு அறிவித்த பின்னர். ஜீ அறிவுஜீவிகளுக்கு பால் தயிராகி விட்டது என்பதை அறிவித்து விடுவார். பக்கதர்கள் தயிரைப் பார்வையிட்ட பின்னர் "நீங்கள் இந்த நிலையையில் இருந்து தயிரைப்போல் உன் அடையாளங்கள் மாறாமல் பக்குவ நிலைக்குச் செல்வதே ஆன்மீகம் ஆகும்", என்ற உரைகளை குருஜீ ஆற்றுவார்.

Corporate Environmentஇல் பணி, social networking உரையாடல் முறை என்பவற்றின் இன்பத்தில் இருக்கும் இந்த அறிவுஜீவிகளுக்கு Take Out முறையில் இலகுவாக்கப்பட்ட Club சுவாமிகளின் ஆன்மீக பிரசங்கங்களும் சமய நன்நெறிகளும் இன்பம் அளிக்கிறது. அதனால் தமது அன்றாட வாழ்வியலில் இந்த Take Out தொழில் நுட்பத்தை இன்பமாக ஏற்றுக் கொள்கிறார்கள். இதுவே இந்த Club சுவாமிகளுக்கு வியாபராத்தை இலாகுவாக்கி இருக்கிறது. Club சுவாமிகளிகள் பலரும் இலவசமாகக் கிடைக்கும் எமது சமயசாஸ்திரங்ளைக் கற்றுத் தெளிந்து கொண்டு உலகளாவிய ரீதியில் வணிகம் செய்யக்கூடிய சகலகலா வல்லவர்களாக இருக்கிறார்கள்.

ஆலயக்கட்டணங்களையும் திருவிழாச் செலவுகளையம் பிரமணத்திருட்டு எனக் கூறும் இந்த அறிவுஜீவிகள் Club சுவாமிகள் நடாத்தும் கும்பமேளாக்களுக்கும் Spiritual Boot Campபுகளுக்கும் என பலாயிரக்கணக்கான டொலர்களை திருட்டுக்கொடுத்து விட்டு இன்பமடைகிறார்கள். இந்தியவில் இருக்கும் Club சுவாமிகள் எல்லாம் Business Class விமானத்தில் வட—அமெரிக்கா வந்து தமது வியாபாரத்தைப் பெருக்கி விட்டுச் செல்கிறார்கள். வரமுடியாத Club உரிமையாளர்கள் ஸ்கைப் மூலம் அல்லது தொலைக்காட்சிகள் மூலம் அறிவுஜீவி பக்கதர்களிடம் பணத்தைப் பைசல் பண்ணி பரவசம் ஊட்டி வருகிறார்கள். நம்பி வாங்க சந்தோசமா போங்க என்ற பாணியில் சுவாமிகள் எல்லோரும் இவர்கள் எல்லோரையும் Installment இன்பப்படுத்தி வருகிறார்கள்.

அறிவுஜீவிகளும் Drive Throughஇல் கிடைக்கும் விரைவு உணவுபோல் எங்களுக்கு எல்லாமே இலகுவாகக் கிடைக்கிறது இதை விடுத்து மற்றவர்கள் எல்லோரும் ஏன் கோவில்கள், புராணங்கள், திருவிழாக்கள் என புரியாத விடயத்தில் பணத்தையும் நேரத்தையும் செலவிடுகிறார்கள் என Corporate தனமான கணிப்புகளையும் Social Media பிரசங்கங்களையும் செய்கிறார்கள். என்ன செய்வது இந்த Club சுவாமிகளும்

Take Out சித்தர்களும் தங்களின் உபநிடதங்கள் எல்லாவற்றையும் உருவிவருவது நமது பாரம்பரிய மதவழிபாட்டு நூல்களில் இருந்தும் சித்த நூல்களில் இருந்து என்பதனை அறிவுஜீவிகள் புரிந்து கொள்வதற்கு வெகுகாலம் எடுக்கலாம் அல்லது ஏற்றுக் கொள்ள மறுக்கலம் காரணம் இன்பத்தை Installmentஇல் பெற்றுக் கொள்வதால் ஆழமாக ஒரு விடையத்தை அறிந்து அதில் கிடைக்கும் ஆனந்தத்தின் அனுபவத்தை அறிவதற்கு நாட்டமில்லாதவர்களாக இருக்கலம்.

இவ்வகை அறிவுஜீவிகள் இருக்கும் வரை உலகளாவிய Take Out Business நடாத்தும் சுவாமிள் எல்லாம் நம்பி வாங்க சந்தோசமா போங்க என இன்பத்தை அளிப்பர் ஆனால் ஆனந்தத்தை அடையும் வழியை ஒரு போதும் எவருக்கும் சொல்லிக் கொடுக்கப் போவதில்லை.

**குறிப்பு; கட்டுரையின் சில பத்திகள் ஜெயமோகனின் கட்டுரையில் இருந்து நேரடியாகப் பிரதிபண்ணப் பட்டுள்ளது.**


**DEBT FREE CREDIT SOLUTION**

**Seeking freedom from DEBT?**

**We offer Total Debt FREE SOLUTIONS**



**Elankeeran .T**

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

**www.TotalDebtFree.ca**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளை மைத்திரியும், மீண்டும் திறக்கும் ஜெனீவா அரங்கும்!

புருஜோத்தமன் தங்கமயில்



இலங்கையின் அரச தலைவர் ஒருவர் சர்வதேச ரீதியில் என்றைக்கும் இல்லாத அளவுக்கு அதிமுக்கியத்துவத்துடன் வரவேற்கப்படும் காட்சிகளை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக காணக்கூடியதாக இருக்கின்றது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்ட நாள் முதல் மேற்கு நாடுகள் அவர் மீதும், இலங்கையின் புதிய அரசாங்கத்தின் மீதும் வெளிப்படுத்தும் கரிசனை அபரிமிதமானது. எதிர்பார்க்கப்பட்ட அளவினையும் மீறியது.

அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற ஜி—7 என அழைக்கப்படும் பிரதான கைத்தொழில் நாடுகளின் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டிருந்தார். இலங்கையின் அரச தலைவர் ஒருவர் இவ்வாறான மாநாடொன்று அழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இது முதன்மையானது. அங்கு மைத்திரிபால சிறிசேன, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன், கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மேர்க்கெல் உள்ளிட்ட தலைவர்களினால் மிகவும் ஆர்வமாகவும், அன்போடும் வரவேற்கப்பட்டார். அதுவும், அவர் அமர்ந்திருந்த இடத்திற்கே தேடி வந்து முக்கிய நாடுகளின் தலைவர்கள் விசாரித்து சென்றதை தென்னிலங்கை பெரும் புளகாங்கிதத்துடன் கொண்டாடியது. அதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ தன்னுடைய உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி தன்னுடன் கைகூலாகு செய்யும் படத்தினை "எப்போதுமே சந்தோசமான சந்திப்பு" என்று தெரிவித்து பகிர்ந்திருந்தார். அதனைக் காணுகின்ற போது, பெரிய நட்சத்திரத்தோடு நின்று படம்பிடித்துப் பகிரும் பரம ரசிகர் ஒருவரின் மனநிலையை ஒத்ததாகத் தெரிந்தது. அது, அமெரிக்கா மீதான இலங்கையின் இணக்கத்தின் வெளிப்பாட்டினையும் பதிவு செய்தது.

மேற்கு நாடுகள் மாத்திரமின்றி மேற்கு நாடுகளின் எதிர்துருவமாக நின்று ஆளுகை செலுத்தும் சீனாவின் பரிவுக்குள்ளும் மைத்திரிபால சிறிசேனவும், இலங்கையின் புதிய அரசாங்கமும் இருப்பதுதான் வியப்பான ஒன்றாக நீள்கின்றது. கடந்த ஒன்றரை வருடங்களில் இலங்கையின் பிரதான அரச தலைவர்கள் இருவரும் (ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும்) சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு திரும்பியிருந்தார்கள். இந்த நிலையில், மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் சீனா அழைத்திருக்கின்றது. இலங்கை அரச தலைவர் ஒருவரோ, அரசாங்கமொன்றோ மேற்கு நாடுகளினதும், சீனாவினதும் அணைப்புக்குள் இருந்த வரலாறுகள் பெரிதாக இல்லை. கடந்த ஆட்சிக் காலத்தில், குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் மேற்கு நாடுகளின் ஒட்டுமொத்தமான அழுத்தங்களின் மத்தியில் இலங்கை இருந்தது. எதற்கு எடுத்தாலும், சீனாவின் ஆதரவினை நாடவேண்டிய சூழல் காணப்பட்டது. ஆனால், இன்றைக்கு நிலைமைகள் பெரும்பாலும் மாறிவிட்டன.

குறிப்பாக, இறுதி மோதல்களுக்குப் பின்னர் இலங்கை எதிர்கொண்டிருந்த சர்வதேச அழுத்தங்களின் அளவு என்பது கழுத்தை நெரிக்கும் வகையில் நீண்டிருந்தது. ஆனால், ஆட்சி மாற்றமொன்றுக்குப் பின்னரான நாட்களில் இலங்கையை தங்களின் தோள்களில் சுமந்து செல்லும் அளவுக்கு சர்வதேசமும், அதன் இணக்க சக்தியும் செயற்படத் தொடங்கிவிட்டன. இறுதி மோதல்களில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதே விசாரணையொன்றுக்கான கோரிக்கைகளின் பக்கத்திலிருந்து காய்களை நகர்த்திவந்து இறுக்கத்தை ஏற்படுத்திய மேற்கு நாடுகள், ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், கலப்பு விசாரணைப் பொறிமுறையொன்றுக்கான விடயத்தை மேம்போக்காக வலியுறுத்துவதாக காட்டிவிட்டு, உள்ளக விசாரணைப் பொறிமுறையொன்றுக்கான முழுமையான ஒத்துழைப்பின் பக்கத்திற்கு நகர்ந்துவிட்டன. அதற்கு தேவையான சர்வதேச ஒத்துழைப்பினை எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி செய்து கொடுப்பதற்கும் அவை தயாராக இருக்கின்றன. இந்த நிலையில், என்றைக்கும் இல்லாத அளவுக்கு உள்ளக அரசியல் முரண்பாடுகளைத் தாண்டி மைத்திரிபால சிறிசேன— ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினை பௌத்த சிங்கள அதிகார பீடங்கள் பெருமகிழ்வோடு ஏற்றுக் கொண்டிருக்கின்றன. அல்லது, சில காலத்துக்கு பிரச்சினைகள் இன்றி தக்க வைப்பதில் குறியாக இருக்கின்றன.

தென்னிலங்கையின் அரசியல் அதிகார பீடம் பௌத்த சிங்கள பீடத்தினால் கட்டமைக்கப்படுவதுதான். அது, முரட்டுத்தனமாக அணுகுமுறையுள்ள தலைவர்களின் மீது அதிக ஆர்வத்தை கடந்த காலத்தில் காட்டி வந்திருக்கின்றது. குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஷ போன்றவர்களினை பெரும் ஆதரவோடு தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், சர்வதேச ரீதியில் எழுந்த அழுத்தங்களை வெற்றிகொள்வதற்கான சமயோசிதம்மஹிந்தராஜபக்ஷவிடம் இல்லையென்றான புள்ளியில், ரணில் விக்ரமசிங்க ஆளுமை செலுத்தும் அரசாங்கமொன்றின் ஆட்சிக்கு வழிவிட்டது. இன்றைக்கு அதன் பலாபலன் கை மேல் கிடைத்திருக்கின்றது. மைத்திரிபால சிறிசேன வடிவில் ரணில் விக்ரமசிங்கவின் இராஜதந்திர அணுகுமுறையுள்ள புதிய அரசாங்கம் பல வெற்றிகளை தென்னிலங்கைக்காக நிகழ்த்தி வருக்கின்றது.

எதிர்வரும் (ஜூன்) 13ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32வது கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 29ஆம் திகதி இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார். அத்தோடு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் உள்ளகப் பொறிமுறை தொடர்பில் இலங்லை

**பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக சிறைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிய முனைப்புக்கள் சிறிய அளவில் கூட முன்நகரவில்லை. சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் என்பது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சீராக கையாளப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு.** ❞

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றவுள்ளார்.

இலங்கையின் இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நீதியான விசாரணைப் பொறிமுறையொன்று முன்னெடுக்கப்பட வேண்டும்என்று வலியுறுத்தும் தீர்மானமொன்று கடந்த ஆண்டு நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் 30வது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டிருந்தது. குறித்த தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்திருந்தாலும், இணை அனுசரணையாளராக தன்னை இணைத்துக் கொண்டதன் மூலம், இலங்கை தன்னை பொறுப்புக் கூறும் கடப்பாடுள்ள தரப்பு என்று காட்டிக்கொண்டது. ஆனால், கடந்த ஒரு வருடத்தில் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான ஆர்வத்தினை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கின்றதா அல்லது பாதிக்கப்பட்ட மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தும் செயற்திட்டங்கள் ஏதாவது முன்னெடுக்கப்பட்டிருக்கின்றதா என்கிற கேள்விகள் எழுகின்றன.



நல்லிணக்கத்துக்கான பணியகம், காணாமற்போனோர் தொடர்பிலான தனிப்பணியகம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலான புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பிலேயே சில நடவடிக்கைகளை அரசாங்கம் சில நாட்களாக மேற்கொண்டு வருகின்றது. அதிலும், காணாமற்போனோர் தொடர்பிலான தனிப்பணியகமொன்றை அமைப்பது தொடர்பிலான நடவடிக்கைகளில் அரசாங்கம் சிவில் சமூக அமைப்புக்களினதோ, பாதிக்கப்பட்டவர்களினதோ பங்களிப்பையோ; ஆலோசனைகளையோ உள்வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக, அரச சார்புத் தளங்களின் பங்களிப்போடு மாத்திரமே அதனை உருவாக்குவது தொடர்பில் கரிசனை காட்டி வருகின்றது. இது, பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. காணாமற்போனோர் தொடர்பிலான விடயங்களில் இலங்கையின் அரசபடைகள் மற்றும் அதன் துணை ஆயுதக் குழுக்கள் மீதும் பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. காணாமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. அப்படிப்பட்ட நிலையில், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்பின்றிய தனிப்பணியகமொன்றின் உண்மை நிலை தொடர்பில் சந்தேகம் பலமாக எழுவது இயல்பானது.

அத்தோடு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக சிறைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிய முனைப்புக்கள் சிறிய அளவில் கூட முன்நகரவில்லை. சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் என்பது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் சீராக கையாளப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் உண்டு. அப்படிப்பட்ட நிலையில், புதிய தேசியப் பாதுகாப்புச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டாலும், தமிழ் அரசியல் கைதிகளின் எதிர்காலம் எவ்வாறாக அமையும் என்கிற கேள்விகள் அச்சத்தோடு நீள்கின்றன.

இன்னொரு பக்கம், நீதியான விசாரணைப் பொறிமுறையொன்றை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாகக் காட்டிக் கொண்டிருக்கும், மைத்திரிபால சிறிசேன— ரணில் விக்ரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம், அரைகுறையாக செய்யும் காரியங்களின் ஒன்றாக கவனம் பெறுவது, வடக்கு—கிழக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட பெருமளவு காணிகளில் குறிப்பிட்டளவானவை உரிமையாளர்களிடம் மீளக்கையளிக்கப்படுவது ஆகும். இந்த விடயத்தினை பெரும் ஏற்பாடுகளோடும், விளம்பரங்களோடும் அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இதனூடு, தன்னுடைய முன்னோக்கிய பயணங்கள் மீதான கடப்பாடு அளப்பரியது என்று காட்டுவதற்கும் எத்தணிக்கின்றது. ஆயுத மோதல் காலங்களில் பொதுமக்களிடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணிகளை, மீளக்கையளிப்பதற்கு ஆயுத மோதல்கள் முற்றாக முடிவுக்கு வந்து ஏழு வருடங்கள் ஆகிவிட்டது வரை நீள்வது என்பது நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தினை செயற்பாடுகள் மீதான எண்ணக்கருவாக கொள்ள முடியாது. மாறாக, சர்வதேச அழுத்தங்களை குறைக்கும் காரணிகளாகவே கொள்ள முடியும். அதனையே, புதிய அரசாங்கமும் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வொன்றுக்கான கோரிக்கை மற்றும் அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நீதி கோரல் உள்ளிட்ட முக்கிய விடயங்களை காலம் கடந்துவதினூடு அவற்றின் வீரியத்தினை நீர்த்துப் போகச் செய்யலாம் என்பது தென்னிலங்கையின் தொடர்ச்சியான நம்பிக்கை. அது, அரசாங்கங்கள் மாறுவதாலோ, ஆட்சியாளர்களின் மாற்றத்தாலோ மாறிவிடுவதில்லை. அப்படிப்பட்ட நிலையில், ஜெனீவா அரங்கில் இம்முறை, மங்கள சமரவீர மேற்கு நாடுகளின் ஒத்துழைப்போடு முக்கிய அறிவிப்புக்களை வெளியிடுவார். அது, காலம் கடத்துவதற்கான ஏதுகைகளைக் கோருவதாகவே இருக்கும். அந்த இடத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தரப்புக்களின் செயற்திறன் எவ்வாறாக இருக்கப் போகின்றது என்பதுதான் எதிர்காலத்தை தீர்மானிப்பதாக அமையும். மாறாக, செயற்திறனும், இராஜதந்திரமுமற்று தமிழ்த் தரப்பு தமக்குள் முட்டிமோதி சர்வதேசத்திடம் தோற்றுப்போனால், நீதிக் கோரிக்கைகளும், அரசியல் தீர்வொன்றுக்கான போராட்டங்களும் அலைக்கழிக்கப்பட்டு ஆட்டம் காணும். அப்போது, எதுவுமே தமிழ் மக்களுக்கு என்று மிஞ்சாது போகலாம்!

வீடென்ன உலகத்தையே வாங்கலாம்!

PURCHASE - REFINANCE - EQUITY TAKE OUT

Suganthan Thavarajasingam
Mortgage Agent Lic # M08010501
CALL 416.859.2564
Office: 416.283.2377 x 116
35 Grand Marshall Dr, Toronto ON M1B 5W9 FSCO #10473

OBSIDIAN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு வடதிசையில் இந்தியா இருப்பதாக நாங்கள் மாணவர்களாக இருந்த போது சொல்லிக் கொடுத்தார்கள். எனவே அவர்களை நாங்கள் இந்தியர்கள் என்றோம். பின்பு அமெரிக்கக் கண்டத்திலும் இந்தியர்கள் இருப்பதாகச் சொல்லிக் கொடுத்தார்கள். எங்களுக்கு அப்போது இந்த விபரம் புரியாமல் குழப்பமாக இருந்தது. அவர்கள் யார், இவர்கள் யார் என்பதும் புரியாமல் இருந்தது. இந்தியாவில் இருந்தவர்களை கிழக்கிந்தியர்கள் என்றும், அமெரிக்கக் கண்டத்தில் இருந்த பழங்குடி மக்களை மேற்கிந்தியர்கள் என்றும் சொன்ன போது ஓரளவு புரிந்து கொண்டோம். அமெரிக்கக் கண்டத்தை முதலில் அடைந்த ஐரோப்பியரான கொலம்பஸ் அதைத்தான் இந்தியா என்று நினைத்தார். அதனால் அங்கிருந்த பழங்குடி மக்களை இந்தியர்கள் என்றனர்.

எப்படியோ உள்நாட்டு யுத்தம் காரணமாகப் புலம் பெயர்ந்து அமெரிக்கக் கண்டத்திற்கே நாங்கள் வந்து குடியேறி விட்டபடியால், இங்கே என்ன நடக்கிறது என்று ஓரளவு தெளிவாகப் புரிகின்றது. இப்பொழுதெல்லாம் தொடர்பு சாதனங்களைச் சேர்ந்தவர்கள் அப்பகுதியில் இருந்து வந்த மக்களைத் தெற்காசியர்கள் என்று பொதுவாகக் குறிப்பிடுகின்றனர். எனவே இந்தியக் கண்டத்தில் இருந்து அமெரிக்கக் கண்டத்திற்கு வந்து குடியேறிய கிழக்கிந்தியர்களும் தெற்காசியர்களில் அடங்குவர். இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளையே முக்கியமாகவும், அதன் சுற்றுச் சூழலில் இணைந்த சிறு நாடுகளையும் தெற்காசியா என்று குறிப்பிடுவர். கிழக்கிந்தியர்களில் முதலில் கனடாவிற்கு அதிகமாக வந்தவர்களில் சீக்கிய இனத்தவர்களும் அடங்குவர்.



## கனடாவின் வரலாறு – 4

குரு அரவிந்தன்

# தெற்கு ஆசியர்களின் கனடா வருகை

வடஅமெரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவின் விக்ரோறியாவில்தான் முதலில் வந்த சீக்கிய வீரர்கள் தங்கினார்கள். மதிப்புக்குரிய எட்வேட் மன்னனின் மூடிசூட்டு விழாவில் பங்கு பற்றுவதற்காக இவர்கள் 1902 ஆம் ஆண்டு இங்கு வந்திருந்தனர். தாராளமான நிலமும் வேலைவாய்ப்பும் இருந்ததால் கடின வேலை செய்யக்கூடிய சிலர் அடுத்த ஐந்து வருடகாலத்தில் பஞ்சாப்பில் இருந்து வந்து அங்கு குடியேறினர். இவர்களில் அனேகமானவர் ஆண்களாகவே இருந்தனர். இவர்களில் பலர் மரமரியும் தொழிற்சாலைகளில் வேலை தேடிக் கொண்டனர். 1908 ஆம் ஆண்டு அவர்கள் தங்களுக்கு ஒரு வழிபாட்டுத் தலம் வேண்டும் என்பதால் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள அபோஸ்போட் என்ற இடத்தில் முதலாவது 'குர்சிக்'என்ற கோயிலைக் கட்டினார்கள். இதே ஆண்டில் கனடாவில் அகதி உரிமை கேட்பவர்கள் நேரடியாகத் தங்கள் நாட்டில் இருந்து வரவேண்டும் என்ற சட்டத்தைக் கனடிய அரசினர் அறிமுகப்படுத்தினர்.

1914 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி 'கொமகாட்ரோமாறு' என்ற கப்பலில் 376 இந்தியர்கள் வான்கூவர் கரையை வந்தடைந்தனர். அந்தக் கப்பல் இந்தியாவில் இருந்து நேரடியாக வராமல் வேறுநாட்டில் இருந்து வந்ததால், அந்தக் கப்பலில் வந்தவர்களைக் கரையில் இறங்குவதற்கு அனுமதிக்கவில்லை. அவர்கள் சுமார் இரண்டு மாதங்கள் வரை கப்லில் காத்திருந்தாலும், கரையில் இறங்குவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. 1914 யூலை மாதம் 23 ஆம் திகதி கனடிய நடைமுறைச் சட்டத்தை ஆதாரம் காட்டி, அந்தக் கப்பலில் வந்தவர்கள் வந்த இடத்திற்கே திருப்பி அனுப்பப் பட்டார்கள். 1919 ஆம் ஆண்டின் பின்தான் இங்கு குடிவந்த தகுதியான ஆண்கள் தங்கள் குடும்பத்தினரைக் கனடாவிற்கு அழைப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இருந்த தெற்காசியர்கள் சுமார் 45 வருடங்கள் கழித்துத்தான் சில உரிமைகளைப் பெற்றனர். ஆமாம், 1947 ஆம் ஆண்டுதான் கனடாவில் குடியேறிய தெற்காசிய மக்கள் அரசியலில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டனர். இதனால் தகுதியானவர்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 1951 ஆம் ஆண்டளவில் சுமார் 2150 தெற்காசியர்களே கனடாவில் தங்கியிருந்தனர். 1960 களில் ஏற்பட்ட கனடிய குடிவரவுச் சட்டத்தின் தளர்வு காரணமாகப் படித்த புத்திஜீவிகள் தெற்காசியாவில் இருந்து உள்வாங்கப்பட்டனர். 1961 ஆம் ஆண்டு தெற்காசியர்களின் தொகை சுமார் 6775 [illegible]

1972 ஆம் ஆண்டு உகண்டா நாட்டில் உள்ள தெற்காசியர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டபோது, பலர் கனடாவில் தஞ்சம் அடைந்தனர். 1981 ஆம் ஆண்டு தெற்காசியர்களின் எண்ணிக்கை கனடாவில் 121,445 ஆக அதிகரித்தது. இதே காலகட்டத்தில் 1983 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து ஈழத்தமிழர்கள் பலர் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தது நினைவிருக்கலாம். 1991 ஆம் ஆண்டு தெற்காசியர்களின் தொகை 417,000 ஆக அதிகரித்தது. 2001 ஆம் ஆண்டு 917,000 ஆகவும் 2011 ஆம் ஆண்டு 1,615,000 ஆகவும் அதிகரித்தது.

ஒன்ராறியோவில் மட்டும் 2001 ஆம் ஆண்டு 555,000 ஆக இருந்த தெற்காசியர்கள் 2011 ஆம் ஆண்டு 1,000,000 ஆக அதிகரித்திருந்தனர். கனடா வந்த தெற்காசியர்களில் அதிகளவிலான தெற்காசியர்கள் இன்று ஒன்ராறியோவிலும், பிரிட்டிஷ் கொலம்பியாவிலும்தான் வாழ்கிறார்கள்.

கனடாவில் உள்ள தெற்காசியர்களில் ஆண்கள் பெண்களைவிடச் சற்று அதிகமாக உள்ளனர். முதியோர்களை எடுத்துப் பார்க்கும்போது இங்கேயுள்ள தெற்காசியர்களில் ஆண்களை விடப் பெண்களே அதிகமாக உள்ளனர். தெற்காசியர்கள் கனடிய அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்களாக இருந்ததால், தமக்குக் கிடைத்த அரசியல் உரிமைகளைத் திறம்படப் பாவித்தனர். 1993 ஆம் ஆண்டு முதற்தடவையாக மூன்று தெற்காசியர்கள் கனடிய நாடாளுமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து பல தெற்காசியர்கள் கனடிய அரசியலில் ஈடுபடத் தொடங்கினர்.

2015 ஆம் ஆண்டு நடந்த 42 வது கனடிய தேர்தலின் போது 22 தெற்காசிய அங்கத்தவர்கள் கனடிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி இருந்தனர். இது முன்னைய தேர்தலில் கிடைத்த அங்கத்துவத்தை விட மூன்று மடங்கு அதிகமாகும். இவர்களில் 14 அங்கத்தவர் ஒன்ராறியோவில் இருந்தும், 4 பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருந்தும், 3 அல்பேட்டாவில் இருந்தும், ஒருவர் கியூபெக்கில் இருந்தும் தெரிவானார்கள். இந்த 22 தெற்காசிய அங்கத்தவர்களில் 16 அங்கத்தவர்கள் பஞ்சாப்பியர்கள். 2011 ஆம் ஆண்டு கனடிய நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழரும், முதற் பெண்மணியாகவும் ராதிகா சிற்சபைசன் அவர்கள் இடம் பெற்றிருந்தார். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழராகிய ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மார்க்கம் நகரசபைக்கு லோகன் கணபதி அவர்கள்தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இதேபோல உள்ளூர் சபைகளிலும், கல்விச்சபைகளிலும், கனடாவிற்குப் புலம்பெயர்ந்த தெற்காசிய நாட்டவர்களான தமிழர்கள் இப்போது இடம் பெறத் தொடங்கியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்ச்னைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI

**Certified Insolvency Counsellor**

## CREDIT SOLUTION CENTRE

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



# FOR SALE

## Commercial Property

**3351 Markham Rd #108**




Markham/ Steeles
**Total Area:715 Sq Ft**

**Commercial Industrial Unit**




**1877 Lawrence Ave E**






## Mohan PANCHALINGAM

Sales Representative

RE/MAX COMMUNITY
Realty Inc, Brokerage
1265 Morningside Ave., # 203
Toronto ON M1B 3V9

Dir: 647.321.7575
Bus: 416.287.2222
Fax: 416.282.4488
E: mohan_panch@hotmail.com

Each Office Independently Owned and Operated

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேர்தலுக்குத் தயாராகும் ஸ்காபுரோ ரூஜ் ரிவர்



இடைத் தேர்தல் நடைபெறவுள்ள ஸ்காபுரோ ரூஜ் ரிவர் தொகுதியில் மூன்று பிரதான கட்சிகள் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சி தனது வேட்பாளராக நீதன் சானை தெரிவு செய்துள்ளது. புறோகிறசிவ் கொன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளராக றேமன்ட் சோ அறிவிக்கப்பட்டார். லிபரல் கட்சி வேட்பாளர் நியமனத் தேர்தலை நடத்தியபோது அதில் பிரகால் திரு வெற்றி பெற்றிருந்தார்.

## புதிய ஜனநாயகக் கட்சி

புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக நீதன் சானின் நியமனம் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். கட்சியின் வேட்பாளர் தெரிவுக்கு வேறு எவரும் போட்டியிடாத நிலையில் நீதன் சான் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் மீண்டும் ஒருமுறை தேர்தலை எதிர்கொள்கின்றார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்த நீதன் சான், ஒன்ராரியோ மாகாண ரீதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் உயர்மட்டத்துடன் தொடர்புடைய தமிழர்களின் முதன்மையானவர் என்பதும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியது.

கடந்த இரண்டு மாகாண சபைத் தேர்தல்களில் இந்தத் தொகுதியில் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தவர் நீதன் சான். 2014ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் 13 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குக்களை பெற்றவர். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலும் இதே தொகுதியில் போட்டியிட்டு 13 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றவர். கடந்த ஜனவரியில் இந்தத் தொகுதிக்காக நடைபெற்ற ரொறன்ரோ கல்விச் சபைக்கான உறுப்பினர் இடைத் தேர்தலில் 7800க்கும் அதிகமான வாக்குக்களை பெற்று வெற்றிபெற்றவர். தற்போது கல்விச் சபை உறுப்பினராக உள்ள நீதன் சான், இடைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும்போது தனது பதவியில் இருந்து விடுமுறை எடுத்துக் கொள்ளவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## புறோகிறசிவ் கொன்சவேட்டிவ் கட்சி

புதிய ஜனநாயகக் கட்சி போல் அல்லாமல், புறோகிறசிவ் கொன்சவேட்டிவ் கட்சியின் சார்பில் வேட்பாளர் நியமனப் போட்டியில் ஈடுபடுவதற்கு சிலர் ஆர்வம் வெளியிட்டிருந்தனர். இவர்களில் , அமுதா சப்தன் மற்றும் தியோ அன்ரனி ஆகிய இரண்டு தமிழர்களும் அடங்குவார்கள். பின்னர் அமுதா சப்தன் வேட்பாளர் போட்டியில் ஈடுபடும் எண்ணத்தை மாற்றி போட்டியில் இருந்து விலகிக் கொண்டார். ஆனாலும் நம்பிக்கையுடன் தொடர்ந்தும் தனக்கு ஆதரவாக கட்சி உறுப்பினர்களை தியோ அன்ரனி இணைத்து வந்தார்.

இந்த நிலையில் ஜூன் மாதம் 4ஆம் திகதி புறோகிறசிவ் கொன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளர் நியமனத்திற்கான தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் அதற்கு முதல் தினம் தியோ அன்ரனியின் "தகுதியான போட்டியாளருக்கான" நியமன விண்ணப்பம் ஒன்ராரியோ மாகாண கொன்சவேட்டி கட்சியின் வேட்பாளர் நியமனக் குழுவினால் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் றேமன்ட் சோ கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

1991ஆம் ஆண்டு முதல் நகரசபை உறுப்பினராக பதவி வகிக்கும் றேமன்ட் சோ முன்னரும் தேசிய மற்றும் மாகாண ரீதியில் தோர்தல்களில் போட்டியிட்டு தோல்வி கண்டவர். தற்போது நகரசபை உறுப்பினராக உள்ள றேமன்ட் சோ இந்த இடைத் தேர்தலில் ஈடுபடுவதற்காக தனது பதவியை இராஜினாமாச் செய்யவேண்டிய கட்டாயம் இல்லை. தேர்தல் அறிவிக்கப்படும்போது அவர் தனது பதவியில் இருந்து விடுமுறை எடுத்துக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவரது பிரச்சாரத் தலைவராக முன்னாள் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் டக் போட் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1988ஆம் ஆண்டு புதிய ஜனநாயகக் கட்சிக்கான நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டவர் றேமன்ட் சோ



பின்னர் 2004ஆம் ஆண்டு தேர்தலில் லிபரல் கட்சியின் வேட்பாளராக போட்டியிட முயன்று தோல்வி கண்டவர். அதே தேர்தலில் "சுயாதீன லிபரல்" என தன்னை அழைத்துக் கொண்டு சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கி மீண்டும் தோல்வி கண்டவர்.

மாகாண ரீதியிலும் றேமன்ட் சோ தேர்தல்களுக்கு புதிதானவர் அல்ல. 2014ஆம் ஆண்டு மாகாண ரீதியில் நடைபெற்ற தேர்தலில் புறோகிறசிவ் கொன்சவேட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 11 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குக்களைப் பெற்றபோதிலும் மூன்றாவது இடத்தையே பெறமுடிந்தது.

## லிபரல் கட்சி

மூன்று பிரதான கட்சிகளில் லிபரல் கட்சி மாத்திரமே இந்தத் தொகுதிக்கான வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கு வேட்பாளர் நியமனத் தேர்தலை நடத்தியது. வேட்பாளர் நியமனத்திற்காக பிரகால் திரு மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் ஆகி ய இரண்டு தமிழர்கள் உட்பட பலரும் போட்டியிட்டனர். ஜூன் மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற லிபரல் கட்சியின் வேட்பாளர் நியமனத் தேர்தலில் வெற்றிபெற்ற பிரகால் திரு லிபரல் கட்சியின் வேட்பாளராக தெரிவாகியுள்ளார்.

தேர்தலுக்கு புதியவர் பிரகால் திரு. பல வருடங்களாக மாகாண மற்றும் நகரசபை தேர்தல்களில் பிரச்சார நிலையில் ஈடுபட்ட அனுபவம் கொண்டவர். லிபரல் கட்சியின் தலைமை பதவி வகித்து வந்தாலும், இதுவரை வேட்பாளராக தேர்தல் எதனையும் இவர் எதிர்கொள்ளவில்லை.

## யாருக்கு வெற்றி

வெற்றிடமாகியுள்ள இந்த மாகாண தொகுதியில் வெற்றிவாய்ப்பு யாருக்கு என்ற கேள்வி இங்கு முக்கியம் பெறுகின்றது.

இடைத் தேர்தல் குறைந்தளவு வாக்காளர்களின் பங்களிப்புடம் இடம்பெறுவது வழமையாகும். இது லிபரல் கட்சியின் வேட்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகால் திருவின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கலாம். அதேவேளை இரண்டு தமிழ் வேட்பாளர்கள் மத்தியில் வாக்குக்கள் பிரிக்கப்பட புறோகிறசிவ் கொன்சவேட்டிவ் கட்சியின் வேட்பாளர் றேமன்ட் சோ வெற்றி வாகை சூடலாம்.

நீதன் சான் இந்தத் தொகுதியில் ஒரு குறிப்பிட்ட அளவிலான வாக்கு வங்கியை தன்னதக்தே கொண்டுள்ளார் என்பது மறுக்க முடியாதது. கடந்த இரண்டு மாகாணசபைத் தேர்தல்கள் மற்றும் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெற்ற கல்விச் சபைத் தேர்தல் முடிவுகள் இதற்கு சான்றாகும்.

ஏற்கனவே இந்தத் தொகுதியில் போட்டியிட்ட அனுபவம் கொண்ட இருவர் களத்தில் உள்ள தேர்தல் இது. சுமார் 25 வருட காலம் இந்தத் தொகுதியை மாநகரசபை மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தி வருபவர் றேமன்ட் சோ. முன்னர் மாகாண ரீதியில் இதே தொகுதியில் தேர்தல்களை எதிர்கொண்ட அனுபவம் கொண்டவர். அதேபோல் நீதன் சான் இந்தத் தொகுதியின் தற்போதையே ரொறன்ரோ நகரின் கல்விச் சபை உறுப்பினர். அண்மையில் தான் முழு வீச்சிலான தேர்தல் பிரச்சாரம் ஒன்றை இதே தொகுதியில் மேற்கொண்டவர். முன்னர் இரண்டு தடவைகள் இதே தொகுதியில் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டவர். 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் நீதன் சான் இதேதொகுதியில் 13 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குக்களைப் பெற்று இரண்டாவது இடத்தை தனதாக்கியிருந்தார் என்பதும் இந்தத் தேர்தலில் றேமன்ட் சோவைவிட அதிகளவில் வாக்குக்களைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் புதியவர் பிரகால் திருதான். ஆனாலும் அந்தப் "புதியவர்" என்ற நிலையே அவருக்கும் ஆதரவானதாக மாறலாம். ஏற்கனவே அரசியல் பதவிகளை வகித்துவரும் நீதன் சான் மற்றும் றேமன்ட் சோ மீது விமர்சனங்கள் உள்ளதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். றேமன்ட் சோ போட்டியிடாத கட்சியே இல்லை. நீதன் சான் எதிர்கொள்ளும் எட்டாவது தேர்தல் இது. இந்தக் காரணங்களே பிரகால் திருவின் பலமாக இருக்கும்.

இந்தத் தொகுதியின் இடைத் தேர்தலில் மூன்று பிரதான கட்சிகளும் தமிழர்களையே வேட்பாளர்களை களம் இறக்கும் என்ற நம்பிக்கை பலர் மத்தியிலும் இருந்தது. கனடாவின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்த தொகுதி. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று தமிழர்கள் போட்டியிட்டு ஒருவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவான தொகுதி. சில மாதங்களுக்கு முன்னர் கல்விச் சபை உறுப்பினராக இடைத் தேர்தலில் தமிழர் ஒருவரைத் தெரிவு செய்த தொகுதி. இப்படி இந்தத் தொகுதிக்கும் தமிழர்களுக்கும் இடையிலான தொடர்புகளை அடிக்கிக்கொண்டு போகலாம். இதனால் இந்தத் தொகுதியில் நடைபெறவுள்ள



இடைத் தேர்தல் தமிழர்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாக மாற்றமடைந்துள்ளது.

இந்தத் தொகுதியின் இடைத் தேர்தலுக்கான திகதி முதல்வர் காத்திலின் வின்னினால் எதிர்வரும் செப்ரம்பர் மாதத்திற்கு முன்னர் அறிவிக்கப்பட வேண்டும். ஸ்காபுரோ—ரூஜ் ரிவர் தொகுதி மாகாண ரீதியில் எதிர்கொள்ளக்கூடிய இறுதித் தேர்தலும் இதுவாகவே இருக்கும். அடுத்த மாகாணசபைத் தேர்தலின்போது மீள்வரைவுக்கு உள்ளாகும் தொகுதியில் இந்த ஸ்காபுரோ—ரூஜ் ரிவர் தொகுதியும் அடங்கும். தேசிய ரீதியில் பிரிக்கப்பட்டதைப் போலவே ஸ்காபுரோ—ரூஜ் ரிவர் தொகுதி ஸ்காபுரோ—ரூஜ் பார்க் மற்றும் ஸ்காபுரோ வடக்கு என இரு தொகுதிகளாக பிரியும்.

1999ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தத் தொகுதியை மாகாண ரீதியில் இதுவரை லிபரல் கட்சி மாத்திரமே வெற்றி கொண்டுள்ளது. இந்தத் தொகுதியில் பெருமளவில் தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். இந்த வாக்காளர்களில் 13.6 சதவீதமானவர்கள் இந்துக்கள் என்பதும் கனடாவில் இந்துக்கள் அதிகளவில் வாழும் தொகுதி இது என்பதும்கூடுதல் தகவலாகும்.


## உங்கள் வசதிக்கு ஏற்ற, அதிபயன் தரும் ஆயுட் காப்புறுதித் திட்டங்கள்

உங்கள் தேவைகளுக்கும் வசதிகளுக்கும் உடல் நிலைக்கும் ஏற்ப சரியான காப்புறுதியைப் பெறுவதற்கும். உங்கள் குழந்தைகளின் எதிர்கால கல்விக்கான சேமிப்பு. வரிக் கழிவு பெற்ற சேமிப்பு. ஓய்வூதியச் சேமிப்பு போன்ற முதலீடுகளுக்குமான ஆலோசனைகளை என்னிடம் பெறுங்கள்!

| Age | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Term Life Insurance** | | | | | | | | | | | | | |
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 18 | 15 | 19 | 15 | 21 | 17 | 28 | 22 | 43 | 31 | 67 | 48 |
| 500K | T20 | 36 | 25 | 37 | 27 | 40 | 30 | 56 | 40 | 88 | 60 | 148 | 97 |
| 1 Mill | T20 | 68 | 45 | 68 | 48 | 75 | 53 | 106 | 75 | 171 | 115 | 288 | 188 |
| **Permanent Life Insurance - Premium Never Change** | | | | | | | | | | | | | |
| 200K | WL | 81 | 71 | 98 | 89 | 121 | 105 | 150 | 131 | 196 | 166 | 233 | 200 |
| 500K | WL | 188 | 164 | 232 | 201 | 289 | 251 | 364 | 313 | 476 | 401 | 590 | 488 |
| 1 Mill | WL | 363 | 310 | 450 | 387 | 566 | 484 | 712 | 606 | 935 | 791 | 1129 | 965 |
| **Critical Illness Insurance- 100% Money Back** | | | | | | | | | | | | | |
| 50K | T75 | 44 | 42 | 56 | 51 | 70 | 65 | 90 | 85 | 120 | 113 | 177 | 148 |
| 100K | T75 | 76 | 72 | 96 | 88 | 123 | 112 | 157 | 145 | 212 | 205 | 321 | 265 |

- கொடிய நோய்க்குரிய காப்புறுதி
- அடமானக்கடனுக்குரிய காப்புறுதி
- மருத்துவப் பரிசோதனை இல்லாத காப்புறுதி
- 20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி
- Disability Insurance
- Final Expense Insurance
- பிரயாணக் காப்புறுதி
- சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி

முதலீட்டுத் திட்டங்கள்

- RRSP • RESP
- TFSA



RBC Insurance · Manulife · Industrial Alliance · La Capitale · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.0147 80 Nashdene Road, #D210, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு உண்மையான மன்னிப்பு



102 ஆண்டுகளுக்கு முன்னர் கோமகட்டா மாரு (Komagata Maru) எனும் இடத்தில் 376 இந்திய பயணிகளை (ஏற்கனவே குடியேறிய 22 பேர் மற்றும் நோயுற்று இருந்த ஒருவர் தவிர) கப்பலில் இருந்து கீழே இறங்க அனுமதி மறுத்ததற்காக கனடிய நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜஸ்டின் ரூடோ மன்னிப்பு கோரினார்.

"ஒரு தேசமாக, அந்த நாளில் கனேடிய அரசாங்கத்தின் கைகளில் அகப்பட்டு அவதியுற்ற சீக்கிய சமூகம் மீதான பாரபட்சம் மிக்க இன்னல்களை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது எனக் குறிப்பிட்ட பிரதமர் ரூடோ, நாம் மறக்கவும் கூடாது மறக்கவும் மாட்டோம்" எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த "சம்பவத்திற்காக" மட்டும் மன்னிப்பு கேட்காமல், மாறாக, இரண்டாம் உலக போரில் இருந்து தொடர்ந்து வரும் இனம் தோய்ந்த குடிவரவு கொள்கைகளுக்கும் சேர்த்து மன்னிப்பு கேட்க ஜஸ்டின் ரூடோவை பலரும்கேட்டுக் கொண்டனர். அந்தப் பரிந்துரைக்குத் தகுதி இருக்கிறது என்றாலும் — ஹிட்லர் யூதர்களை பூண்டோடு அழித்துக் கொண்டிருந்த சமயம் அவர்களை நம் நாட்டிற்குள் அனுமதிப்பது பற்றி அப்போதைய குடியேற்ற இயக்குனரிடம் வினவிய போது அவர் கூறிய பதிலை நினைவு கொள்ள வேண்டும் — என் மனதில் இருக்கும் உண்மையான பிரச்சினை, பிரதமர் வரலாற்று இனவெறி பற்றி மன்னிப்பு கேட்பார்கள் என்பது பற்றி அல்ல, ஆனால் தற்போதைய அமைச்சர் ஜான் மெக்கலம், அவரது முன்னோடியான ஜேசன் கென்னியின் இழிவு வாய்ந்த கொள்கைகளை திருத்திக்கொள்வதாக இருக்கவேண்டும் என்பதே ஆகும்.

திருப்பி அனுப்பப்பட்ட 350 இந்தியர்கள் இறந்துவிட்டனர், ஆனால் ஜேசன் கென்னி மற்றும் அவரது உதவியாளரான கிறிஸ் அலெக்சாண்டர் ஆகியோரால் கோப்புகள் நிறுத்தப்பட்ட 96,000 ஆசியர்கள் — அப்போது ஜேசன் கென்னி ஐரிஷ் அகதிகளை இங்கே அனுமதிக்க திட்டமிட்டுக் கொண்டிருந்தார் — உயிருடன் உள்ளனர். அவர்கள் பல ஆண்டுகள் குடியேற்ற வரிசையில் பொறுமையாக காத்திருந்தனர் ஆனாலும் ஜேசன் அவர்களது கோப்புகளை நிறுத்தி தான் வைத்தார். இதன்மூலம் சிறந்த நிர்வாகி எனும் கிரீடத்தை தானே சூட்டிக்கொள்வார், மேலும், குடியேற்ற விஷயங்கள் சரியாகத் தான் நடக்கிறது என்று தானே பெருமைபட்டுக் கொள்வார். நாம் 200,000க்கும் மேற்பட்ட ஆசியர்கள் பற்றி பேசுகிறோம் — முதன்மையாக இந்திய, சீன மற்றும் ஃபிலிபினோ மக்கள்— அவர்கள் முகத்தின் மீது தான் கனடா தன் கதவை சாத்தியது.

இந்த அரசு, கடந்த இனம் சார்ந்த குடியேற்றக் கொள்கைகளுக்கு பரிகாரம் செய்ய மற்றும் கனேடிய குடிவரவில் தனது நேர்மையை காட்டவேண்டும் எனில், அது 350 பேர்களிடமும் மன்னிப்பு கேட்பதை விட பெரியதாக இருக்க வேண்டும்: கனடாவில் முதலீடு செய்ய முனைப்பு காட்டும் 16,000 மல்டி—மில்லியனர்கள் உட்பட, அது நிறுத்தப்பட்ட கோப்புகளை மீண்டும் திறக்கும்.

அது அவ்வாறு செய்ய பொருத்தமாக இருக்கும் ஏனெனில், இடி அமீன் உகாண்டாவில் இருந்து வெளியேற்றிய இந்திய வம்சாவளியினரை கனடாவிற்குள் வரவேற்ற லண்டன் பொருளியல் பள்ளியில் தன்னுடைய வகுப்புத் தோழனாக இருந்த ஹைனஸ் அகா கானின் வற்புறுத்தலால் இதை செய்தது பிரதமரின் தந்தை. இதை செய்த அப்போதைய அமைச்சர் ப்ரைஸ் மெக்காசே மற்றும் அவரது ஊழியர்களின் முயற்சி உண்மையிலேயே குறிப்பிடத்தக்கதாக மற்றும் பாராட்டத்தக்கதாக இருந்தது. அவர்களது பிறருக்கு உதவும் இயல்புக்கு எல்லையே இல்லை.

நான் பெரிதும் போற்றிய பியர்ரி ட்ருடியாவ் இறந்த போது, அவர் பிரதம மந்திரியாக இருந்தபோது பிறந்திருந்திராத பல இளைஞர்கள் அவருக்கு அஞ்சலி செலுத்த வரிசையாக நின்றிருந்ததைக் கண்டபோது அதிர்ச்சியடைந்தேன். ஒரு நிருபர் ஒரு இளம் இந்திய பெண்ணிடம் அவர் ஏன் அங்கு வந்திருக்கிறார் எனக் கேட்டபோது அதற்கான விடை கிடைத்தது: "ஏனெனில், பியர்ரி ட்ருடியாவ் இல்லை என்றால், நான் இங்கே இருக்க மாட்டேன். நான் கனடாவில் இருந்திருக்க முடியாது" என உடனடியாகக் கூறினார்.


தற்போதைய அமைச்சர் அவரது முன்னோடி மேற்பார்வையிட்ட மீட்பு பணியினை உள்நோக்க விரும்பினால், அவர் அவரது பாராளுமன்ற செயலாளர் அரிப் வெரானியை மட்டுமே கேட்க முடியும், ஏனெனில் பியர்ரி ட்ருடியாவ் யாருக்காக கனடாவின் கதவை திறந்து வைத்தாரோ அவர்களில் ஒருவர் தான் அரிப் வெரானி. இந்தக் கதவையே ஜேசன் கென்னி 200,000 ஆசியர்கள், ஆப்பிரிக்கர்கள், ஹிஸ்பானியர்கள் மற்றும் மற்றவர்களின் முகத்தின் மீது அடித்து சாத்தினார்.

மூலம்: Tim Leahy - தமிழில் : ராகினி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய நாடாளுமன்றத்தில் தமிழர்கள் தொடர்பான இரண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தார் ஹரி ஆனந்தசங்கரி




கடந்த (மே) மாதம் கனடிய நாடாளுமன்றத்தில் தமிழர்கள் தொடர்பான இரண்டு முக்கிய அறிக்கைகளை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ளார்.

தை மாதத்தை தமிழ் மரபுத் திங்களாக உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்யக் கோரும் மனுவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஹரி ஆனந்தசங்கரி மே 2009ஐ நினைவுகூறும் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார்.

## மே 2009

இலங்கையில் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்ட முள்ளிவாய்க்கால் நிகழ்வு நடந்து ஏழு வருடங்கள் கடந்துள்ளபோதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை எனவும் கனடிய நாடாளுமன்றத்தில் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இலங்கையின் 26 ஆண்டுகால உள்நாட்டுப் போர் முடிவிற்கு வந்தபோது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், மூன்று இலட்சம் மக்கள் உள்ளக அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளதாகவும் ஹரி ஆனந்தசங்கரி தனது உரையில் கூறினார்.

இருந்தபோதிலும் மனித நேயத்திற்கு எதிரானதும், மானிட வரலாற்றிக்கும் எதிரானதுமான போர்க்குற்றங்கள் புரியப்பட்டதற்கான விசாரணைகள் இன்னமும் இடம்பெறவில்லை எனவும் கூறிய ஹரி ஆனந்தசங்கரி பாதிக்கப்பட்டவர்கள் நீதியை வேண்டி நிற்கின்றார்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் சமாதானம் கடந்த காலத்தில் நடைபெற்றவை குறித்த ஆராய்வுகள் இன்றி இடம்பெற முடியாது எனவும் கூறிய ஹரி ஆனந்தசங்கரி பாதிக்கப்பட்டவர்கள் இதனை நம்புவதற்காக சர்வதேசத்தின் நடுநிலையுடனான விசாரணையொன்றே வழியேற்படுத்தும் எனவும் கூறினார்.

சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசாங்கம் மறைமுகமாகப் பின்வாங்குவதை சுட்டிக்காட்டிய ஹரி ஆனந்தசங்கரி எனவே கனடியர்கள் மனிதநேயத்திற்கு உலகில் குரல் கொடுப்பவர்கள் என்ற வகையில் இந்த விவகாரத்தை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றின் ஊடாக விசாரணைக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இந்த விவகாரத்தில் கனடா தலைமைத்துவத்தை பேண இதுவே ஒரே வழியெனவும் ஹரி ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மரபுத் திங்கள்

ஸ்காபரோ —ரூச் றிவர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கனடாவில் ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத் திங்களாக உத்தியோக பூர்வமாக பிரகடனம் செய்யக் கோரும் மனுவை மே மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றினார். இந்தப் பிரகடனமானது, கனடாவில் தமிழர்கள் தமது செழுமைவாய்ந்த பண்பாடு,கலாசாரம்,மொழி மற்றும் வரலாற்றை சார்ந்து விழாக்களைக் கொண்டாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என ஹரி ஆனந்தசங்கரியின் இந்த முயற்சியை கனடிய தமிழர்கள் வரவேற்றுள்ளனர்.

ஏற்கனவே ரொறன்ரோ மாவட்ட பாடசாலைகள் அமைப்பு (TDSB), ரொறன்ரோ பெரும்பாகத்தின் (GTA) நகரசபைகள், ரொறன்ரோ நகரசபை, ஒன்ராரியோ மாகாணம் ஆகியன ஜனவரி மாதத்தை தமிழ் மரபுரிமை மாதமாக அறிவித்துள்ள நிலையில் நாடளாவியிலான அங்கீகாரத்தைக் கோரும் இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

k

THE KENNEDYS
CONDOMINIUMS






First Access Platnium Sales Event

June 11th & 12th, 12:00pm-6:00pm

THE KENNEDYS – (Kennedy & 401)

Delta Hotel- 2035 Kennedy Road.

Price Like Never Seen Before

Prices Start From Low $200's

5% Down In 2016*

- Excellent Investment Opportunity
- 2 min drive to Agincourt Mall, Walmart,Nofrills, LCBO, Shopper Drug Mart and Restaurants
- Convenient access to HWY 401, Steps to GO and , TTC Station
- Just minutes away from Kennedy Commons, Scarborough Town Centre and Glamorgan park.
- Nearby Public, Private and Montessori School Options.



Raj Nadarajah

Sales Representative

Dir: 416.333.6115

nanohomes@gmail.com

RE/MAX

Excel Realty Ltd., Brokerage*


Bus: 905.475.4750 Fax: 905.475.4770

50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3

*Independenlty Owned And Operated

Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# டொராண்டோவிலிருந்து நியூயோர்க்குக்கு ஒரு மணி நேரத்தில் போகலாம்...

## அசத்தும் போக்குவரத்து தொழில்நுட்பம் அறிமுகம்

டொராண்டோவிலிருந்து 4400 கி.மீ தொலைவிலிருக்கும் வன்குவருக்கு மூன்றே மணி நேரத்தில் செல்ல முடியுமா? அதுவும் குறைந்த செலவில்? முடியும் என்கிறது 'ஹைபர்லூப்' போக்குவரத்து தொழில்நுட்பம். அமெரிக்காவில் வளரத் தொடங்கி இருக்கும் இந்த போக்குவரத்துத் தொழில்நுட்பம் சாத்தியமாகிவிட்டால், உலகையே 36 மணி நேரத்திற்குள் வலம் வந்துவிடலாம். இந்தத் தொழில்நுட்பத்தின் கண்டுபிடிப்பாளர் தென்னாப்பிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வால் நகரில் பிறந்து, தற்போது அமெரிக்காவில் தொழில் அதிபராக இருக்கும் எலன் மஸ்க் (ணிறீஷீஸீ விஹிஉளீ) என்பவர்.

இவர், இணையவழி பணச்சேவைகளை வழங்கும் பே பால் நிறுவனத்தை உருவாக்கியவரில் ஒருவர், மேலும், அமெரிக்காவின் விண்வெளிப் பயணத்துக்குத் தேவையான சாதனங்களை வடிவமைத்துத் தரும் 'ஸ்பேக்ஸ் எக்ஸ்' நிறுவனம், அமெரிக்காவிற்கு சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்து தரும் சோலார் சிட்டி நிறுவனம் ஆகியவற்றைக் கட்டமைத்தவர்களில் இவரும் ஒருவர்.

ஆகஸ்ட் 12, 2013 அன்று 'ஹைபர்லூப்' எனும் ரான்ஸ்போர்ட் நிறுவனத்தை அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் துவக்கினார் எலன் மஸ்க். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரையும் சான்பிரான்சிஸ்கோ நகரத்தையும் இணைக்கும் நோக்கத்துடன் தற்போது இந்நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கொன்கோர்ட் விமானம், அதிவேக புல்லட் ரயில், ஏர் ஹாக்கிடேபிள் ஆகியவற்றை காக்டெய்ல் செய்த தினுசில், சூரிய சக்தியின் உதவியுடன் உடைந்து விடாத தன்மை கொண்ட மெகா சைஸ் கேப்ஸ்யூல் வடிவத்தில் இருக்கிறது இவர்கள் வடிவமைத்துள்ள ஹைபர்லூப் போக்குவரத்து வாகனம்.

எளிமையாகச் சொல்வதென்றால், ஹைபர்லூப் தொழில்நுட்பம் என்பது, இரும்புக் குழாய்களுக்குள், குறைந்த காற்றழுத்தத்தில் புல்லட் ரெயினை ஓடவிடுவது என்று சொல்லலாம். புரிதலுக்காக, இதை இனி ஹைபர்லூப் ரெயின் என்றே குறிப்பிடுவோம்.

விரிவாகச் சொல்வதெனில், தரையிலிருந்து 10 அடி உயரம் கொண்ட நிலநடுக்கத்தை தாங்கும் வகையிலான, 'பைலான்' தூண்களின் மீது இரும்புக் குழாய்கள் பொருத்தப்பட்டிருக்கும். இரும்புக் குழாய்களுக்குள் குறைந்த காற்றழுத்தம் பராமரிக்கப்படும். குறைந்த காற்றழுத்தம் இருப்பதால் அங்கு புவிஈர்ப்பு விசையும் குறையும். இதனால் அங்கு உள்ள பொருட்கள் மிதக்கும். அந்தக் குழாய்க்குள் கேப்ஸ்யூல் வடிவத்தில் செல்லும்படியான ஹைபர்லூப் ரெயின் வடிவமைக்கப்பட்டிருக்கும். இதற்கு எல்லா ரயில்களுக்கும் இருப்பது போல், இரும்பு சக்கரங்கள் கிடையாது. அதற்குப் பதிலாக காற்றால் அடைக்கப்பட்ட பேரிங்குகள் இருக்கும். இது உராய்வு இன்றி டிரெயினை இயக்கும்.

ஹைபர்லூப் ரயில்வே டிராக் இரும்பால் இருக்காது. ஜப்பானின் புல்லட் ரெயின் ராக்கில் 'கொப்பர் கொயில்' பயன்படுத்துகிறார்கள். இது அதிக செலவு பிடிக்கும் என்பதால், ஹைபர்லூப் ராக்கில் அலுமினிய கோயிலைப் பயன்படுத்துகிறார்கள். இரும்புக் குழாய்களுக்கு வெளிப்புறப் பகுதியில் சோலார் தகடுகளைப் பதித்து, அதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு இந்த ரெயினை இயக்குகிறார்கள். இதனால், தற்சார்பு எரிபொருள் வாகனமாகவும் இது அமைந்து எரிபொருளுக்கான உற்பத்திச் செலவு குறைகிறது.

ரெயினின் அடிப்பகுதியில் காந்தங்கள் பதிக்கப்பட்டிருக்கும். ராக்கில் உள்ள அலுமினிய காயிலில், ஏசி, டிசி என மின்சாரத்தை மாற்றி மாற்றி பாய்ச்சும் போது, மின்னூட்டம் பெற்று, நேர்முனைக் காந்தவிசை, எதிர்முனைக் காந்தவிசையை வெளிப்படுத்தும். இதனால் டிராக்கில் இருந்து வெளிப்படும் காந்த விசையும், ரெயின் அடிப்பாகத்தில் இருக்கும் காந்த விசையும் ஒன்றுக்கொன்று எதிர்விலக்கமடைவதால், ரெயின் ஓடத் துவங்குகிறது.

இந்த ரெயினிற்கு டிரைவர் கிடையாது. அனைத்தும் கணினி மயம். ரெயினின் முன்புறம் பெரிய அளவில் ஒரு பான் (யீணீஸீ) பொருத்தப்பட்டிருக்கிறது. இதற்கு மின்சாரம் பாய்ச்சப்படும் போது, வேகமாகச் சுழன்றபடி குழாய்க்குள் இருக்கும் குறைந்த காற்றைக் கிழித்துக் கொண்டு, ரெயினை முன்னோக்கிச் செலுத்த இது உதவுகிறது. ஒரு ரெயினில் மூன்று கேப்ஸ்யூல்கள் (பெட்டிகள்) இணைக்க முடியும். இதில் 28 நபர்கள் பயணம் செய்யமுடியும். மணிக்கு 1,250 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் ஆற்றல் கொண்டது இந்த ஹைபர்லூப் ரெயின்.

இவ்வளவு வேகத்தில் போனால், அதிர்வுகள் இருக்காதா? ஆபத்துகள் இருக்காதா என்று கேட்பவர்களுக்கு, விமானத்தில் செல்வது போன்றே எந்தவித அதிர்வுகளும் இல்லாத இனிய பயணமாக இது இருக்கும். விமானத்தில் உள்ளவர்களுக்கு விமானம் எவ்வளவு வேகத்தில் செல்கிறது என்று கூட தெரியாது. சாதாரணமாக அமர்ந்திருப்பது போன்று தெரியும். இதே அனுபவம் தான், இந்த ஹைபர்லூப் டிரெயினில் அமர்ந்திருப்பவர்களுக்கும் ஏற்படும். இதில் பயணிப்பது மிகவும் பாதுகாப்பானதும், சிக்கனமானதும், நேரத்தை மிச்சப்படுத்துவதுமாகும் என்கிறார்கள் இந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள்.

இந்தத் திட்டம் வெற்றியடையும் பட்சத்தில், அமெரிக்காவில் இருக்கும் சான்பிரான்சிஸ்கோவிலிருந்து 605 கி.மீ. தூரத்தில் இருக்கும் லாஸ்ஏஞ்சல்ஸ் நகருக்கு 35 நிமிடங்களில் பயணம் செய்துவிட முடியும். இந்த தூரத்தை விமானம் மூலம் கடக்க வேண்டுமெனில் ஒன்றேகால் மணி நேரமும், காரில் செல்வதாக இருப்பின் ஐந்தரை மணி நேரமும் செலவிடவேண்டி இருக்கும். ஒவ்வொரு ஊர்களுக்கு இடையே நின்று செல்லும்படியாக இதை வடிவமைத்திருக்கிறார்கள். கட்டணம் என்று பார்த்தால், விமானக் கட்டணத்தை விடவும் இதில் குறைவு தான் என்கிறது ஹைபர்லூப் நிறுவனம்.

டொராண்டோவுக்கு எப்ப மச்சான் இந்த தொழில்நுட்பத்தைக் கொண்டுவருவீங்க?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DEVADAS LAW
## PROFESSIONAL CORPORATION

## What if your Lawyer is also an Accountant?



- Tax Law
- HST - New Housing Rebate and Residential Rental Property Rebate Claims
- Appeals to CRA / Tax Court of Canada
- CRA Questionnaires / CRA Audits
- Tax planning for businesses and individuals
- Business law – Incorporations / Purchase, Sale & Lease
- Employment Law – Termination / Dismissal Claims
- Estate Planning and Last Wills

**Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA**
***Barrister & Solicitor***
devadas@vdlaw.ca



- Real Estate – Residential / Commercial - Purchase, Sale & Refinancing
- Family law – Divorce / Separation / Custody & Support
- Immigration – Sponsorship / Super Visa / Work Permits
- Power of Attorney, Affidavits, Statutory declaration
- Notarization & Commissioning

**Vasuki Devadas**
***Barrister, Solicitor & Notary Public***
vasuki@vdlaw.ca

**DROP IN FOR A FREE 30 MINUTE INITIAL CONSULTATION**
Evenings & weekends consultation by appointments

**Devadas Law Professional Corporation**
**LAW with ACCOUNTability**

**1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6**
**Next to RBC @ Kennedy & Ellesmere**

**Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000**
**www.vdlaw.ca**

**Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முனைவோர் கடைபிடிக்க வேண்டிய சில அடிப்படையான செயல்கள்

சிவராஜ் ராமநாதன்



உள்ளம் பெருங்கோயில். ஊன் உடம்பு ஓர் ஆலயம். இது திருமூலரின் பாடல் வரி. இது வெறும் ஆன்மீக மந்திரம் மட்டுமல்ல. இந்த உலகின் சாதனை படைக்க விழையும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும் கருத்தில் கொள்ள வேண்டிய திரு மந்திரம். சராசரி மனிதர்களின் பாதையிலிருந்து விலகி, சாதனை மனிதர்களாக பயணிக்கும் போது நீங்கள் முதலில் கவனிக்க வேண்டியது, உங்கள் உடல் மற்றும் மனநலம் உற்சாகமான தெளிவான தீர்க்கமான மனோநிலையும், ஆரோக்கியமான உடல் நிலையும் தொழில் முனைவோருக்கு மிகவும் அடிப்படையான தேவை. இது பற்றி சிலவற்றை இங்கு பார்ப்போம்.

### தொழில் முனைவோருக்கான சூழல்

புதியதொழில்முனைவோருக்கான சுய நிர்வாகம், கருத்துக்கள் மற்றும் தகவல்களை இங்கு காணலாம். ரிஸ்க் எடுத்து வேலை பார்க்கும் தொழில் முனைவோரின் அன்றாட வாழ்க்கைச் சூழல்,சமூகப்பாதுகாப்பு உணர்வுடன் வாழும் சராசரி மனிதர்களை விட சவால்கள் மிகுந்தும் கடினமாகவும் இருக்கும். தொடர்ந்த பயணங்களும், வரையறையற்ற வேலை நேரங்களும், பல விதமான சவால்களையும், பிரச்சனைகளையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையும் இவர்களது தினசரி வாழ்வில் தவிர்க்க முடியாத அம்சங்கள். இத்தகைய ஒரு வாழ்க்கைச் சூழலுக்கு முதல் தேவை ஆரோக்கியமான உடலும் அலட்டிக் கொள்ளாத மனமும், ஆனால் பல தொழில் முனைவோரின் வாழ்வியல் நிர்வாகம் மிகவும் கவலைக்குரியதாகவே இருக்கிறது. ஒவ்வொரு தொழில் முனைவோரும் கண்டிப்பாக கருத்தில் கொள்ள வேண்டிய விஷயங்களை பார்க்கலாம்.

### 1. உடற்பயிற்சி

உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், அதிக உடல் எடை போன்ற பிரச்சினைகள் உள்ளவர்களுக்கு தங்கள் முழுத் திறனையும் பயன்படுத்தி ஆக்கப்பூர்வமான வேலைகளை செய்வது கடினம். தொடர்ந்த பயணங்கள், நீண்ட நேர வேலைகள், நாள் முழுதும் தேவைப்படும் சுறுசுறுப்பு என்று ஒரு தொழில் முனைபவரின் தவிர்க்க முடியாத தேவைகளை நிறைவேற்ற ஆரோக்கியமான உடல் அவசியம். உங்கள் தினசரி வேலைகளின் பட்டியலில் கட்டாயமாக இருக்க வேண்டியது உடற்பயிற்சி. ஜிம்மிற்கு போவதும், ஆசனங்கள் செய்வதும் மிக நல்லது. குறைந்த பட்சம் 45 நிமிட நேர நடைப் பயிற்சியாவது செய்ய வேண்டும்.

### 2. மனப்பயிற்சி

இன்றைய சூழலில் உடற்பயிற்சிக்குத் தரும் அதே முக்கியத்துவத்தை மனப்பயிற்சிக்கும் தர வேண்டும்.

தெளிவான, படபடப்பற்ற மனநிலை ஒவ்வொரு சாதனையாளருக்கும் மிக அவசியம். சரியான முடிவுகளை எடுப்பதற்கும் பலதரப்பட்ட மனிதர்களையும் பிரச்சினைகளையும் கையாளுவதற்கு திடமான மனம் வேண்டும். தொடர்ந்த மூச்சுப் பயிற்சியும், தியானமும் செய்யலாம். குறைந்த பட்சம் வாரம் ஒரு முறையாவது கோவில் போன்ற இடங்களுக்குச் சென்று அமைதியாக சிறிது நேரம் கண்மூடி அமர்ந்திருப்பதுவும் ஓரளவு பலன் தரும். மேலும் பல விதமான மனப்பயிற்சிகளையும் அவரவர் ஆர்வத்திற்கும், சூழலுக்கும் ஏற்றவாறு செய்ய முயற்சிக்கலாம். 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற கீதை வரிகளுக்கு ஏற்றவாறு மனதை படிப்படியாக பக்குவப்படுத்துவதே மிகப்பெரிய மனப்பயிற்சியாகும்.

### 3. உணவுப் பழக்கம்

உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு சரியான உணவுப்பழக்கம் இன்றியமையாதது. அதிக அளவு காய்கறிகளும், பழங்களும் எடுத்துக் கொள்ளும்படி மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். சமச்சீரான உணவும் தேவையான அளவு தண்ணீர் அருந்துவதும் மிக அவசியம். தொடர் வேலைகளுக்கு மத்தியிலும், சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளும் பழக்கத்தை தொழில் முனைவோர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். வெளி இடங்களில் சாப்பிட வேண்டிய சூழல்களில் கவனத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்வது உங்களை தேவையற்ற உபாதைகளில் இருந்து காப்பாற்றும்.

### 4. குடும்ப உறவு

ஒரு வேகமான தொழில் முனைவோருக்கு, குடும்ப உறவுகளை அழகான இனிமையான அனுபவங்களாக மாற்றிக் கொள்வது மிகப்பெரிய சாதகமாகும். போதிய நேரத்தையும் கவனத்தையும் உங்கள் உறவுகள் ஒவ்வொருவருக்கும் தர வேண்டும்.

உங்களின் வெற்றியிலும் தோல்வியிலும் அவர்களே முதல் துணைவர்கள். ஆரோக்கியமான குடும்ப உறவுகள் உங்கள் உடல் மன ஆரோக்கியத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணைபுரியும்.

### 5. மகிழ்வு நேரம்

ஆக்கப்பூர்வமான சிந்தனா சக்தி என்பது ஒரு தொழில் முனைவோருக்கு அடிப்படை சக்தியாகும். தொடர்ச்சியான சிந்தனைகளில் இருந்தும், பிரச்சினைகளில் இருந்தும் விடுபட்டு ஆரோக்கியமான மகிழ்வூட்டும் நிகழ்வுகளில் கண்டிப்பாக ஈடுபட வேண்டும். நல்ல சினிமா, பிடித்த வெளியிடங்கள் தொழிலுக்கு வெளியில் உள்ள நட்பு, என ஏதோ ஒரு பிடித்த விஷயத்தில் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஈடுபடுவதை பழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். இது புத்துணர்வுகளையும், புதிய சிந்தனைகளையும் தரும்.

### 6. பிற ஆர்வங்கள்

குழந்தைப் பருவத்தில் இருந்து மனதுக்குப் பிடித்தமாக இருந்து வந்த பல விஷயங்களையும் நமது வேகமான வாழ்க்கை சூழலில் தவறவிட்டு விடுகிறோம். விளையாட்டுகள், வளர்ப்பு பிராணிகள், தோட்ட வேலை, பயணங்கள், ஓவியம் என்று இன்னும் பலவிதமான உங்கள் தொழில் வட்டத்துக்கு அப்பாற்பட்ட பிற ஆர்வங்களில் கவனம் செலுத்துவது உங்கள் மனநலத்தை பெரிதும் பாதுகாக்கும்.

### 7. இசை

நான் இசையை பிற ஆர்வங்களின் கீழ் சேர்க்கவில்லை. ஏனென்றால், இசை ஆர்வம் என்பது மிக அற்புதமான ஆனந்தமான ஓர் அனுபவமாகும். தினந்தோறும் இசை ரசனைக்கு கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள். இரவில் தூங்கச் செல்லும் முன்னர் மனதுக்குப் பிடித்த அமைதியான இசையைக் கேளுங்கள். மன அழுத்தமும் குழப்ப சிந்தனைகளும் மறைந்து, ஆனந்த அதிர்வுகள் உடலெங்கும் பரவுவதை உணர்வீர்கள். இது கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய ஒரு பழக்கம் என்று உறுதியாக கூறுவேன்.

### 8. தூக்கம்

நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 6 முதல் 8 மணிநேர ஆழ்ந்த தூக்கம் அவசியம். தூக்கமில்லாமல் உழைக்கிறேன் என்பது முட்டாள்தனம். அவ்வாறு வேலை பார்ப்பவர்களின் திறன் குறைவாகவே இருக்கும். சரியான உறக்கம் இல்லாதவர்கள் கண்டிப்பாக அதற்கான காரணங்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். நல்ல உறக்கம் சிந்தனைத் திறனையும், ஆக்க சக்தியையும் அதிகரிக்கும்.

### 9. மருத்துவ பரிசோதனைகள்

ஒரு பரபரப்பான தொழில் முனைபவர், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் முக்கியமான மருத்துவ பரிசோதனைகளை செய்து கொள்ள வேண்டும். இது தேவையற்ற அதிர்ச்சிகளையும், பிரச்சினைகளையும் தவிர்க்கும். இதன் மூலமாக வரும் முன் காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு கால விரயத்தையும் பண விரயத்தையும் தவிர்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அச்சுறுத்தும் உடல் பருமன்

ராஜ்மோகன் செல்லையா




"அனேகமான அமெரிக்கர்கள் சோம்பேறிகள்" என்ற ஒரு கருத்து பரவலாக உள்ளது. குறிப்பாக ஒன்ராறியோ மாகாணத்தில் இருந்து அமெரிக்காவின் தென்பகுதிகளுக்குச் சென்று தொழில் புரிந்தவர்களுக்கு இதில் அதிக உடன்பாடு இருக்கும். இதை உறுதி செய்யும் வகையில் இன்னுமொரு புள்ளிவிபரத் தகவல் ஒன்றும் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. உலகில் உள்ள பிரபல்யமான நாடுகளில் அதிக உடல் பருமன் உள்ள மக்களைக் கொண்டநாடு அமெரிக்கா என்பதே இந்தத் தகவலாகும்.

இது ஒன்றும் அமெரிக்காவுக்கு மட்டும் சொந்தமான பிரச்சினை அல்ல. கனடா உட்பட உலகநாடுகள் பலவற்றிலும் இந்த உடல் பருமன் பிரச்சினை பெருமளவிலான பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. அமெரிக்காவில் 32 சதவீதமான மக்கள் உடல் பருமன் அதிகரித்துக் காணப்படுகின்றார்கள். இது கிட்டத்தட்ட அமெரிக்காவின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒருபகுதியாகும். கனடாவில் உடல் பருமன் அதிகரித்தவர்களின் அளவு அதிகமாகவே காணப்படுகின்றது. கனேடிய சனத்தொகையில் 24 சதவீதமான மக்கள் உடல் பருமன் அதிகரித்தே காணப்படுகின்றார்கள். உடல் பருமன் கொண்ட மக்களின் அளவு மெக்ஸிக்கோவில் 29.5 சதவீதமாகவும், அவுஸ்திரேலியாவில் 25சதவீதமாகவும், இங்கிலாந்தில் 24.5 சதவீதமாகவும், ஸ்பெயினில் 17.5 சதவீதமாகவும், ஜேர்மனியில் 15 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

1980ஆம் ஆண்டு 10 பேருக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில் இருந்த உடல் பருமன் கொண்ட மக்களின் அளவு 2010 ஆண்டில் 10 பேருக்கு 5 பேர் என்ற விகிதாசாரத்தில் அதிகரித்துள்ளமை பலநாடுகளுக்கு சுகாதார ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு அரசாங்கங்களும் தேசிய ரீதியில் உடல் பருமன் பிரச்சினைக்குரிய ஆக்கபூர்வமான திட்டங்களையும், சட்டங்களையும் அமுல்ப்படுத்தாது விட்டால் 2020 ஆம் ஆண்டு 10 பேருக்கு 7 பேர் என்ற விகிதாசாரத்தில் உடல் பருமன் உள்ளவர்களின் எண்ணிக்கை இருக்கும் என மேலும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் முக்கிய மாகாணங்களில் உள்ள உடல் பருமன் கொண்ட மக்களின் அளவைப் பார்க்கும் போது, பிரிட்டிஷ் கொலம்பியா 16.0சதவீதத்துடனும், கியூபெக் 18.2 சதவீதத்துடனும், ஒன்ராறியோ20.4 சதவீதத்துடனும், அல்பேர்ட்டா 21.5 சதவீதத்துடனும், எட்வேட் தீவு 24.2 சதவீதத்துடனும், மனிற்ரோபா 24.5 சதவீதத்துடனும், சஸ்கெச்சுவான், 25.1 சதவீதத்துடனும், நியூ பிரண்ஸ்விக் 26.4 சதவீதத்துடனும், நோவா ஸ்கோஷ்யா 27.6 சதவீதத்துடனும், நியுபவுண்லாண்ட் 32.4 சதவீதத்துடனும் காணப்படுகின்றது.



உலகை அச்சுறுத்தும் உடல் பருமனின் அளவு எப்படி கணக்கிடப்படுகின்றது அல்லது நாங்கள் உடல் பருமன் அதிகரித்தவர்களா என்பதை எப்படி இலகுவில் அறிந்து கொள்ளமுடியும்?

BMI (body mass index) எனப்படும் குறியீட்டு அலகு மூலமே இந்த உடல் பருமன் அளவீடு செய்யப்படுகின்றது. உங்களது உடல் நிறையை, உங்களது உயரத்தினால் பிரிக்கும் போது BMI பெறப்படுகின்றது. இந்தக் குறியீட்டு எண்ணானது உடலில் எந்தளவு கொழுப்பு உள்ளது என்பதை தெரியப்படுத்திவிடும். இந்த BMI இன் அளவை வைத்து உடல் பருமனை 2 வயதில் இருந்து கண்காணி;த்துக் கொள்ளமுடியும். உடல் பருமன் (obesity) மற்றும் கூடுதல் உடல் நிறை (over weight) இரண்டுக்குமிடையே BMI இன் அடிப்படையில் வித்தியாசங்கள் உள்ளன. BMIஇன் அளவு 30 க்கும் அதிகமாக இருக்கும்போது அது உடல் பருமன் (obesity) ஆகவும், BMIஇன் அளவு 25 க்கும் 29.9 க்கும் இடையில் இருக்கும் போது கூடுதல் உடல் நிறை (over weight) ஆகவும் கருதப்படுகின்றது.

BMI apps உங்கள் கைத்தொலைபேசிகளில் (smart phone) இலவசமாக தரவிறக்கம் செய்வதன் மூலமும்,கணிணிகள் மூலமும் உங்கள் டீஆஐ இன் அளவை நீங்களே இலகுவாக அறிந்துகொள்ள முடியும். மருத்துவர்கள் BMI இன் அளவை வைத்து உடல் பருமனின் தாக்கத்தை பின்வருமாறுவகைப்படுத்துகின்றனர்:

— BMI 18.5 க்கும் குறைவாக இருக்கும் போது: குறைந்த உடல் நிறை Underweight.

— BMI 18.5-24.9 க்கும் இடையில் இருக்கும் போது: சாதாரணஉடல் நிறை Normal weight.

—BMI 25-29.9க்கும் இடையில் இருக்கும் போது: கூடுதல் உடல் நிறை — Overweight.

— BMI 30க்கும் அதிகமாக இருக்கும் போது: உடல் பருமன் — Obesity.

உலகில் 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டு மடங்காக அதிகரித்துள்ள உடல் பருமன் பிரச்சினைக்கு பலகாரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை ஆரோக்கியமற்ற உணவுமுறை, போதுமான உடற்பயிற்சி இன்மை, தொழில்நுட்பக் கருவிகளுடனான தொடர்பு. இயந்திரங்களின் பாவனை, மருந்துகளின் தாக்கம்,மதுபானங்களின் பாதிப்பு மற்றும் மனஅழுத்தம் போன்றவையாகும். எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் சரியான ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் வாழும் மெலிந்துபோன மக்களின் எண்ணிக்கையைவிட, பணக்காரநாடுகளில் உடல் பருமன் கூடி கொழுத்துப் போனவர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

Childhood obesityvdg எனப்படும் குழந்தைகளின் உடல் பருமன் விடயமும் இன்று முக்கியமானதொரு பிரச்சினையாகக் கருதப்படுகின்றது. இன்றுகனடாவில் மூன்றில் ஒரு வீதமான குழந்தைகள் உடல் பருமன் மற்றும் உடல் நிறை கூடிய பிரச்சினைகளினால் பாதிப்படைந்திருப்பதாக மருத்துவக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக முன்னைய காலங்களில் வயது வந்தவர்களைத் தாக்கும் நோய்கள் எல்லாம் தற்சமயம் குழந்தைகளையும் தாக்குவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றார்கள். BMIஇன் முடிவுகள் மற்றும் உடல் பருமன் பற்றிய விடயங்களை மருத்துவர்கள் பெற்றோர்களிடம் கலந்தாலோசனை செய்யும்போது 94.9 சதவீமான பெற்றோர்கள் அதுபற்றி அக்கறைகொள்வதில்லை என 2015 ஆம் ஆண்டு செய்யப்பட்டஆராய்ச்சி முடிவொன்று தெரிவிக்கின்றது.

பாடசாலை விளையாட்டுக் கல்விக்கான (physical education) நேரங்களைஅதிகரித்தல்,பெற்றோர்கள் குழந்தைகளின் விளையாட்டு நேரங்களில் அக்கறைகொள்ளல், புதிய சனசமூகநிலையங்களை அமைத்து மாணவர்கள் காத்திருக்கும் நேரத்தைக் குறைத்தல், உணவுமுறை மற்றும் ஊட்டச் சத்துக்களில் கவனம் கொள்ளல் போன்ற பல விடயங்கள் குழந்தைகளை உடல் பருமன் அதிகரிப்பில் இருந்து காப்பாற்ற முடியுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் 2.8 மில்லியன் மக்கள் ஒவ்வொருவருடமும் இந்த உடல் பருமன் மற்றும் கூடுதல் உடல் நிறை நோயினால் இறப்பதாக உலகசுகாதார அமைப்பு கூறுகின்றது. கொலஸ்ரோல், உயர் குருதி அழுத்தம், நீரிழிவு வகை—2, இதயநோய்கள், பக்கவாதம், மார்பகப் புற்றுநோய், குடல் புற்றுநோய், சிறுநீரகப் புற்றுநோய், புறோஸ்டேட் புற்றுநோய் போன்ற பல பாரதூரமான நோய்களுக்கு உடல் பருமனும் ஒருமறைமுகக் காரணியாக இருக்கின்றது.

'மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின்"

உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளிதந்து, உணவு அருந்துகிறவர்களின் உடலுக்கு வேறுமருந்தே தேவையில்லை என்ற திருவள்ளுவரின் வாக்கினைக் கடைப்பிடித்தால் ஆரோக்கியமாக வாழமுடியும். இதைத்தான் எமது முன்னோர்களும் கடைப்பிடித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்பாரா கலைஞர் ??

குயின்ரஸ் துரைசிங்கம், ரொறன்ரோ

திராவிடத் தமிழ் இனத்தின் காவலன் என்று 50 வருடங்களுக்கும் மேலாக மேடைகளில் மார்தட்டி, தமிழினத்தின் வாக்குகளைப் பெற்று கறுப்புக் கண்ணாடியும் வெழுத்த சால்வையுமாய் ஆட்சியில் அமர்ந்து இறுமாப்படைந்த கலைஞர், தனது சொந்த இனம் அழிக்கப்படுவதைப் பார்த்தும், அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காய் சோனியா காந்தியுடன் உறவைத் தொடர்ந்து உசாராகப் பேணி, தொப்புள் கொடி உறவுகளின் உளைச்சலைச் சம்பாதித்தார்.

60களிலிருந்து 90கள் வரை, கலைஞர் கைதானபோதெல்லாம், கலைஞர் விமர்சிக்கப்பட்ட போதெல்லாம், கலைஞர் ஆட்சி பறிக்கப்பட்ட போதெல்லாம், அதி உச்சமாய்க் குரலெழுப்பி, ஆவேசமாய் ஆத்திரப்பட்டு, கலைஞரை எதிர்ப்பவரை அடிதடி மூலம் சந்தித்து அதிகமாய் காயப்பட்ட ஈழத்தழிர்கள் ஏராளம். கலைஞருக்காக தீக்குளித்தவர்களும் கலைஞருக்காக காவடி எடுத்தவர்களும் கலைஞருக்காக மொட்டை அடித்தவர்களும், ஏன், கலைஞரின் திரைப்படம் வெளிவந்தால் அது வெற்றிபெற வேண்டுமென்று தங்கள் தலையையும் உயிரையும் நேத்தி வைத்தவர்களும் மிக அதிகம். இது கலைஞரின் பேனா மீதும், கலைஞரின் மேடைப்பேச்சு மீதும், கலைஞரின் தமிழ் உணர்வு மீதும் ஈழத்தமிழர்கள் வைத்திருந்த சொல்லொணாப் பாசமும் வேகமும் தான். இருந்தும் என்ன, அத்தனை அன்புக்கும் பதிலாய் கலைஞரிடமிருந்து கிடைத்தது, கலையாத மௌனமும், கலைந்தபோது வெறும் கடிதங்களும் தான்.



தினமும் கொன்றழிக்கப்படும் தமிழர்களுக்கும், பட்டினியால் அவதிப்படும் தொப்புள்கொடி உறவுகளுக்கும், அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் மருந்தையும் எடுத்துச்செல்லத் துடிக்கும் நல்ல மனிதர்களையும்கூட தடுத்து நிறுத்தி, பட்டினிச் சாவுக்கு மேலும் உற்சாகம் கொடுக்க முயற்சித்த புதிய பாரதத்தின் அராஜகப்போக்கு, ஈழத்தவர்க்கு அதிர்ச்சி தந்தது. அஹிம்சையைப் போதித்த மகாத்மா காந்தி, தான் பெற்றெடுத்த சுதந்திர பாரதம், பட்டினியால் கொன்றழிக்கப்படும் சொந்த சோதரர்க்கு ஒரு நேரப் பசிபோக்க மறுதலிக்கும் புதிய விதி கண்டு கொதிப்படைந்திருப்பார் என்பது திண்ணம்.

ஆசியாவில் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக அடக்கி ஒடுக்கப்படும் ஈழத்தமிழ் சிறுபான்மை இனத்திற்கு நிரந்தர விடுதலையைப் பெற்றுக்கொடுக்க முன்வருவது, இந்தியாவுக்கு ஒரு ஜனநாயக கௌரவத்தை ஆசியப் பிராந்தியத்தில் உருவாக்கும் என்ற யதார்த்தத்தை, இந்திய ஆதிக்க சக்திகள் புரிந்துகொள்ள மறுப்பது முட்டாள்தனமானது.

ஈழத் தமிழினத்தை சிறீலங்கா அரசு திட்டமிட்டு அழிப்பதை உணர்ந்துகொண்டு, அதற்கு ஆயுதப் போராட்டம் மூலமே மாற்றுத்தீர்வைக் கொண்டுவரலாம் என்று இலவம் காட்டில் சில இளைஞர்கள் விவாதித்து முடிவெடுத்தபோது, அதற்கு செயல்வடிவம் கொடுத்து, புகலிடம், பயிற்சி, பாசறை, கருவிகள் என்று அனைத்தையும் வழங்கி முத்தாய்ப்பு வைத்து கப்பலேற்றி அனுப்பி வைத்தது இந்தியா தான். சேதுசமுத்திரத் திட்டம் உட்பட, இந்தியாவின் அனைத்து அடுத்தகட்ட நகர்வுகளுக்கும் ஒரு திடமான இராஜாங்க செயற்பாட்டுக்கான இணைந்த களமாக ஈழம் விளங்கும் என்பதை இந்தியா ஏற்றுக்கொள்ளத் தவறியதற்கு கலைஞர் பிரதான காரணமாக இருந்தது துரதிஷ்டவசமானது.

விரும்பியோ விரும்பாமலோ பாக்கிஸ்தான் பிரிந்துசெல்வதற்கு இந்தியா பச்சைக் கொடி காட்டியது. இழுத்துவைத்துக்கொண்டு, இணைப் பாட்சியிலோ இறைமையிலோ சமஷ்டியிலோ காலம்தள்ள முயலவில்லை. பின்னர் பங்களாதேஷ், அதற்கும் அதே தீர்ப்புத்தான். கிழக்குப் பாக்கிஸ்தானில் கிளர்ச்சி உச்சக்கட்டத்தைத் தொட்டபோது, ஓடிச்சென்று தனிநாடாகப் பிரித்துக்கொடுத்ததும் இந்தியாதான். ஆக, இனங்கள் ஒன்றுபட முடியாத அளவுக்கு பெரும்பான்மையின் இனவெறி தாண்டவமாடினால், பிரிந்து வளர்வதுதான் மேல் என்று கொள்கையளவில் மட்டுமல்ல, செயலிலும் காட்டிநின்ற இந்திய அரசு, ஈழத்தமிழர் விடயத்தில் மட்டும் அதே முடிவைப் பரிசீலிக்க மறுத்தது.

முதலமைச்சர் கதிரையில் இறுதியாக ஒரு தடவை அமரும் வாய்ப்பைத் தாருங்கள் என்று 7 கோடி தமிழர்களிடம் பகிரங்கமாகவே வேண்டிக் கேட்டுக்கொண்ட கலைஞருக்கு, ஒரு பலமான எதிர்க்கட்சி ஆசனத்தை தமிழ் மக்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆட்சிக் கதிரை கிடைக்காவிட்டாலும், குரல் எழுப்பத்தக்கஎதிர்க்கட்சிஆசனத்தைப் பயன்படுத்த விரும்பினால் அதற்கும் வாய்ப்பிருக்கிறது.

ஈழப் பிரச்சனையை முற்றுமுழுதாக 50களிலிருந்து தெளிவாக அறிந்துவைத்திருக்கும் ஒரு பழுத்த அரசியல்வாதி என்று பார்த்தால், இந்தியாவில் மட்டுமல்ல, ஈழத்திலும் அகில உலகத்திலும் கூட, கலைஞர் கருணாநிதியைவிட அதிகம் அறிந்தவர் யாரும் இல்லை. ஈழத் தமிழர் பிரச்சனையில் கலைஞர் உத்வேகமாக எதையாவது செய்ய வேண்டுமென்று நினைத்தால், நிறையவே செய்திருக்கலாம். திராவிட நாட்டின் தலைவர் என்று பெருமைகொள்ளும் கலைஞரை, ஈழத் தமிழர்களும் தங்கள் நெஞ்சில் என்றும் பூஷித்து மகிழும் வகையில், நிரந்தர தாயகமொன்றை தமிழினத்திற்கு வழங்குவதற்கு, மத்திய அரசினூடாக பரிந்துரை செய்வது மட்டுமல்லாது, நிபந்தனையும் காலஎல்லையும் கொண்ட அழுத்தங்களை பகிரங்கமாக அறிவிப்பதும், காலத்தின் கட்டாய தேவையாக, கலைஞரின் இறுதி முன்னெடுப்பாக தற்போது விரிந்து கிடக்கிறது.

70களில் கலைஞர் தனது சொந்த வார்த்தைகளில் பகிரங்கமாகக் கூறியதை அவ்வளவு எளிதாக மறந்து போயிருக்க வாய்ப்பில்லை. இலங்கையில் இரு இனங்கள் சேர்ந்துவாழ வாய்ப்பில்லை என்ற சூழ்நிலை தெரிகிறது. இரு இனங்கள் இணைந்து வாழ முடியாவிட்டால், செக்கோசெலவாக்கியா தீர்வு போன்று, இரு நாடுகளாக பிரிந்துவிடுவதே சரியானது என்று கலைஞர் அப்போது கூறியிருந்தார்.

ஈழத்தமிழர்கள் விடுதலைபெற்று வாழ்வதற்கான பரிநாண் கயிற்றைத் தன்கையில் வைத்திருக்கும் இந்தியா, மனம் வைத்தால் நிட்சயம் இலங்கைப் பிரச்சனையில் தனது கொள்கையை சற்றே இளக்கிக் கொள்ளலாம். ராஜீவ் காந்தி கொலையின் மர்மங்கள் துலங்கிட முயன்றிடினும், சுப்ரமணியசுவாமி உட்பட முக்கிய காரணிகள் அதை மறைத்து, தொடர்ந்தும் ஈழத் தமிழர்கள்மீதே பழிபோட்டுத் தப்பிக்க முயற்சிக்கிறார்கள்.

இனியும் அதையே பேசி பஞ்சாயத்துப் பண்ணிக் கொண்டிருக்காமல், பாதிக்கப்பட்ட, அநீதியில் துடிதுடித்த, கொடிய இனஅழிப்பில் இலட்சக்கணக்கில் பலியாக்கப்பட்ட ஒரு தமிழினத்தின் மீதிக் காலத்தையாவது, அடிப்படை மனிதஉரிமையுடன்கூடிய ஒரு வாழ்வுக்கான களமாக மாற்றிக் கொடுக்க இந்தியாவும், தமிழ்நாடும் முன்வரவேண்டும்.

முதலமைச்சராக இரண்டாவது தடவையும் வெற்றிபெற்று வரலாற்று சாதனை படைத்துள்ள ஜெயலலிதா அம்மையார், அவரது தேர்தல் அறிவிப்பில் தனித் தமிழீழத்தை சிபாரிசு செய்திருந்தார். மிகப் பலமான எதிர்க்கட்சியாக உருவாகியுள்ள கலைஞர் தலைமையிலான தி.மு.க., தனது அழுத்தத்தைப் பலமாக வழங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் மீது விழுந்துள்ள வரலாற்றுப் பழியைப் போக்கிக்கொள்ள முன்வருவது காலத்தின் கட்டாயம்.

1947 முதல், பல்வேறு சந்தர்ப்பத்திலும், அறவழிப் போராட்டங்கள் மூலம், அமைதி வழயில், ஜனநாயக முறையில், சத்தியாக்கிரக போராட்டங்கள் உட்பட, கௌரவம் குறையாமல் எதிர்ப்பைக் காட்டியவர்கள் தமிழர் தரப்பினர். ஆனால், அப்போதிருந்தே சிறீலங்கா இராணுவத்தை ஒரு பக்கமும், சிங்களக் காடையர்களை இன்னுமொரு பக்கமும் வைத்துக்கொண்டு, இத்தகைய அமைதிவழிப் போராட்டங்களை அடக்கி ஒடுக்கி தமிழர்களை நலினப்படுத்த, சிங்கள அரசு கையிலெடுத்தது ஆயுத வன்முறையும் ஆயுதக் கலாச்சாரமும்.

அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம், ஊடகச் சட்டம், கல்வித்தராதரப் படுத்தல் சட்டமூலம், அரசசாசன சீர்திருத்தம் என்ற பெயரில், சிறுபான்மையினத்தை நசுக்குதல், உணவுத்தடை, செய்தித் தடை, மருந்துத்தடை, பிரயாணத் தடை, உயர் பாதுகாப்பு வலயங்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், சிங்களம் மட்டும், பௌத்த நாடு, ஒற்றையாட்சி என்பது போன்ற அத்தனை போர்க் கோஷங்களையும் ஊதிக்கொண்டு ஆயுதக் கலாச்சாரத்தையும் ஆயத வன்முறையையும் கையிலெடுத்தது சிறீலங்கா அரசுதான். ஆக, பயங்கரவாதத்தை சிறீலங்கா அரசுதான் பயன்படுத்தியிருக்கிறது. நல்லாட்சி என்ற பெயரில் இனஅழிப்பு தொடர்கிறது, தமிழர்களையும் பயன்படுத்தத் தூண்டி வருகிறது.

ஈழத்தமிழர்களைப்பொறுத்தவரை, சிங்களவர்களை ஒழிக்க வேண்டும், சிங்களப் பகுதிகளை ஆக்கிரமிக்க வேண்டுமென்று தமிழர்கள் நினைக்கவில்லை, சிங்கள மக்களின் எந்தப் பகுதியும், தமிழர்களுக்குத் தேவையானதுமல்ல. தமிழர் தரப்பிற்கு ஆகக்குறைந்த வாழ்வியல் இருப்புக்கான நியாயம் கொடுங்கள் என்பதுதான் கோரிக்கை. திராவிடத் தமிழினத்தின் தலைவன் என்று சொல்லிக்கொள்ளும் கலைஞர் மௌனம் கலைப்பாரா?

தமிழ் மொழியில், மிகத் தெளிவாக, இரத்தினச் சுருக்கமாக, நெத்தியடியாகப் பேசுவதற்கு எம்மால் முடியாது. எம்மால் மட்டுமல்ல எவராலும் முடியாது. டாக்டர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி என்ற ஒரேயொரு தமிழறிஞரால் மட்டுமே அது இயலும். அவரது பாணியில் நேரடியாகவே தமிழினம் வேண்டுகோள் விடுக்கிறது:

இலங்கையிலுள்ள இரு இனங்களும் தனித்தனியாகப் பிரிந்துசென்று, அவரவர் வழியில் வாழ வளர, நடுவண் அரசு மூலம், தங்கள் காலத்திலேயே வழி ஏற்படுத்துங்கள்!

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. (குறள்: 12.8)**

விளக்கம்: ஒரு பக்கம் சாய்ந்து விடாமல், நாணயமான தராசுமுள் போல இருந்து நியாயம் கூறுவதுதான், உண்மையான நடுவுநிலைமை என்பதற்கு அழகாகும். (கலைஞர் உரை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவதாசன்

ஜூன் 2016

# செவ்வாற்றுக் கடமை




சென்ற வாரம் செவ்வாற்றில் இரண்டு திருவிழாக்கள் கொடியேறின.

நான்சொல்வதுஇசுக்காப்ரோவின் ரூஜ் றிவர் பகுதியை. (பிரஞ்சு மொழியில் ரூஜ்=சிவப்பு).

செவ்வாறு தமிழ்க் கனடியர்களின் தலைநகரம் என்பதில் சந்தேகமில்லை. கனடாவின் மூன்று நிலை அரசியல் கட்சிகளும் , வாதிகளும் இதைத் தெரிந்தும் புரிந்தும் வைத்திருக்கின்றன என்று தான் —உங்களைப் போல — நானும் நம்ப விரும்புகிறேன்.

அதிகம் அரசியல் மயப்படுத்தப்பட்ட தமிழர்கள் வாழும் இடம் செவ்வாறு என்பதால் நடந்த திருவிழாக்கள் பற்றிய விவரணம் தேவையில்லை. எல்லாமே எப்போதோ —திட்டமிட்டப்டி — முடிந்த காரியம்.

இது தமிழர்களின் வாழிடம். தமிழரே வெற்றியைத் தீர்மானிப்பவர்கள் என்பது உண்மையாகிய பின் கட்சிக்கா அல்லது வேட்பாளருக்கா வாக்களிப்பது எந்ற விவாதம் — தர்க்க ரீதியாக இருப்பினும் — எடுபடாது.

இந்த அநுமானத்தில் மூன்று பிரதான கட்சிகளும் தமிழர்களை வேட்பாளர்களாக நிறுத்தலாமென்றும் போட்டி வரின்ஜனநாயக முறையில் கட்சியின் வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் எந்றும் எதிர்பார்க்கப்பட்டது, தலைவர்களாலும் அறிவிக்கப்பட்டது. இங்கு தலைவர்கள் என்பது கட்டாயமாகக்கட்சித்தலைவர்களைக் குறிக்கவேண்டுமென்பதில்லை.

முன்நாட்களில் இந்த ஜனநாயக நடைமுறை பல தடவைகள் கட்சித் தலைமைகளால் எகத்தாளமாக மீறப்பட்ட வரலாறு உண்டு. உழைப்பாளிகளின் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியும் இந்த ஜனநாயக மீறலைச் செய்தது.

இந்தத் தடவை முற்போக்கு பழமைவாதக் கட்சி ஜனநாயக மீறலைச் செய்துவிட்டது என அக்கட்சி வேட்பாளராக முனைந்து ஏமாற்றமடைந்த தமிழர் தியோ அன்ரனியும் இதர பல தமிழர்களும் குமுறுகிறார்கள். அவர்களின் குமுறல் நியாயமானதா என்பது பற்றி முகநூல் மற்றும் ஊடகத் தெருக்களில் பக்கவாட்டுத் திருவிழாக்கள் பல நடைபெறுகின்றன.

முற்போக்கு பழமைவாதக் கட்சியிந் தலைவர் பற்றிக் பிறவுண் மீது எனக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. அதி பழமைவாத புற எல்லையிலிருந்த துருப்பிடித்த கட்சிக்கு ஓரளவு முற்போக்கு முகம் கொடுத்தவர் பிறவுண். அவருடைய தந்தையார் ஒரு புதிய ஜனநாயகக் கட்சிக்காரர்என்பதால் அவர் மீது கொஞ்சமாவது முற்போக்குத் தூசி படிந்திருக்கும். அதையும் விட ஒரு துடி துடிப்பான செயல் வீரர். மெருகு படுத்தப்பட்டமேற்தட்டுபழமைவாதம் அவரிடம் இல்லை. பலத்த எதிர்பார்ப்புகளையும் முறியடித்து அவரைத் தலைவராக்கியதில் தமிழருக்குப் பெரும் பங்குண்டு என்பதை உணர்ந்தவர், அடிக்கடி பிரதான மேடைகளிலும் சொல்லிக காட்டுபவர்.

இந்த தடவை அவரது கட்சி வேட்பாளர் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்படுவார் எந அவர் அறிவித்தவர் என்ற விடயம் முறையீட்டாளர்களால் மீண்டும் மீண்டும் முழங்கப் படுகிறது.

செவ்வாற்று வேட்பாளர் தெரிவில் அவர் தடுக்கி விட்டார் என்பவர்களும் தடுக்கி விழுத்தப்பட்டார் என்பவர்களும், கட்சித் தலைவர் கட்சிக்கு எது தேவையோ அதைச் செய்திருக்கிறார் என்பவர்களுமாகத் தமிழர் பிரிந்தே போய்விட்டார்கள்.

அவரது தெரிவு — கட்சியி தெரிவு — றேமண்ட் சோ. றேமண்ட் சோ தமிழருக்குப் புதியவர் அல்ன்லர். ஆனால் தமிழரல்லர். ஆயிரத்துக்குமதிகமான வாக்குகளைத் தயார் செய்துகொண்டு போட்டிக்காக ஜனநாயகக் களத்தில் இறங்கி நின்ற தமிழரைப் புறம் தள்ளி விட்டு றேமண்ட் சோ களமிறக்கப்பட்டிருக்கிறார்.

இந்த நடைமுறை தவறு எந்று குரலெழுப்புபவர்கள் பலர். அது தமிழர் ஒதுக்கப்பட்டார் என்பதற்காகவா அல்லது ஜனநாயகம் ஒதுக்கப்பட்டது என்பதற்காகவா எந்பது குறித்த விவாதம் இரண்டாம் பட்சம்.

வேட்பாளர் தெரிவில் கட்சித் தலைமைகள் தலையிடக்கூடாது என்பதுவே எனது வாதம்.

இந்தத் தடவை லிபரல்களின் கோட்டையான ரூஜ் றிவரை நீலமாக மாற்றிவிட வேண்டுமென்பதுதான் கட்சியினதும் தலைவரினதும் நோக்கம் என்றும் அந்த வெற்றியைத் தேடித் தர வல்லவர் றேமண்ட் சோ மட்டுமே என்றும் கட்சித் தமிழர்கள் அடம் பிடிக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் றேமண்ட் சோ வெற்றி பெறின்மாநில அரசில் ஒரு தமிழரை அமர்த்தும் வாய்ப்பை வலுக்கட்டாயமாகப் பறித்த குற்றம் கட்சிக்கும், தலைமைக்கும், கட்சித் தமிழருக்கும் சாரும்.

பழமைவாதக் கட்சி தமிழரிடம் வேரூன்றுவதற்கு நிறைய வருடங்கள் பிடித்தது. பல தமிழர்களின் உழைப்பின் பெறுபேறு அது.

தியோ அன்ரனி விடயத்தில் கட்சி இழைத்தது தவறு என நம்பும் தமிழர்கள் — தியோ அன்ரனியை வெறுப்பவர்கள் கூட — அதிகம். கட்சியும்,அதன் நம்பிக்கை நாயகனான பற்றிக் பிறவுணும் தமிழருக்குத் துரோகம் செய்துவிட்டதாகவே அவர்கள் பார்க்கிறார்கள்.

இந்தத் தடவை றேமண்ட் சோ வென்றாலும் சரி தோற்றாலும் சரி தமிழர்களின் வெஞ்சினத்திலிருந்து கட்சி விடுபட பல ஆண்டுகள் பிடிக்கலாம்.

இது ஒரு இடைத் தேர்தல் மட்டுமே. இதில் கட்சி ஒரு தமிழரை நிறுத்தி அவர் தோற்றிருந்தாலும் கட்சிக்கும் தலைவருக்கும் அது வெற்றியே தான்.

தமிழருக்கு சந்தர்ப்பம் கொடுத்த நன்றிக்காக அடுத்த மானிலப் பொதுத் தேர்தலில் தமிழர்கள் பழமைவாதக் கட்சிக்கு — இதர தொகுதிகளிலும் வாக்களிக்க முன்வருவார்கள்.

இந்த தடவை றேமண்ட் சோ வைச் சட்டமன்றத்துக்கு அனுப்பி வைப்பதால் தொகுதிக்கோ அல்லது பழமைவாதக் கட்சிக்கோ எந்தவித பலனுமில்லை.

றேமண்ட் சோவின் தெரிவில் கட்சி எடுத்த முடிவு சரியானது என வாதிடும் கட்சித் தொண்டர்களும் முநாள் வேட்பாளர்களும் (தமிழர்களை மட்டுமே சொல்கிறேன்) தேவை கருதின்ய ஒத்தோடல் வகையறாக்களே.

அடுத்த தேர்தலில் இந்தத் தொகுதியிலோ அல்லது வேறெந்தவொரு தொகுதியிலோ வேட்பாளர் தெரிவின்றி ஒரு தமிழரல்லாதார் களமிறக்கப்படும் போது அதில் போட்டியிடும் தமிழரில் ஒருவராக இத் தொண்டர்களில் ஒருவர் இருக்க நேரிடலாம். யார் கண்டது.

இந்த வேட்பாளர் தெரிவுகளின் பின்னணியில் இருக்கும் பரிந்துரைகள், கை முறுக்கல்கள், முதுகு சொறிதல்கள் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகள் புதியனவையோ அல்லது தமிழரிடம் மட்டுமே உள்ள குணாதிசயங்களோ அல்ல.

செவ்வாற்றுக்கு ஒரு வரலாறுண்டு. தமிழர்களின் வாக்குப் பலத்தை உலகெங்கும் பறை சாற்றிய பலமும் அதற்குண்டு.

வாய்ப்பைக் கொடுக்காது வாக்கைப் பெற நினைப்பதை (நந்றி: வாசு சங்கரப்பிள்ளை) அது மன்னிக்காது.

செவ்வாறு தமிழர் நகரமாகவே இருந்துவிட்டுப் போகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா போல் தமிழ்நாட்டில் அதிமுக திமுக என இரண்டு திராவிடக் கட்சிகளே மிஞ்சப் போகின்றன!

நக்கீரன்

தமிழகத்தை 1967 ஆம் ஆண்டு தொடக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) ஆகிய இரண்டு கட்சிகளுமே மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன. 1967 வரை தமிழகத்தை ஆண்ட இந்திய தேசிய காங்கிரஸ் (இதேகா) தேய்ந்து நூலாகி விட்டது. இதே போல் இந்திய தேசியக் கட்சிகளில் ஒன்றான பாரதீய ஜனதா கட்சி தமிழகத்தில் காலூன்ற முடியாமல் தவிக்கிறது. இரண்டு கம்யூனிஸ்டுகளும் காணாமல் போய்விட்டன.

திமுக வோடு கூட்டணி வைத்து 41 தொகுதிகளில் போட்டியிட்ட இதேகா 8 இடங்களில் மட்டும் வென்றுள்ளது. பாரதிய ஜனதா கட்சி 188 தொகுதிகளில் போட்டியிட்டு எல்லாத்தொகுதிகளிலும்கட்டுக்காசை இழந்து தோல்விகண்டுள்ளது. பெரியாரும் அண்ணாவும் பிறந்த தமிழ்நாட்டில் திமுக, அதிமுக தவிர வேறு எந்தக் கட்சியும் ஆட்சியைப் பிடிக்கிற வாய்ப்பு கண்ணுக்கெட்டிய தூரத்திலும் இல்லை. திராவிடத்தால் வீழ்ந்தோம் என்ற முழக்கம் முனகல் ஆகிவிட்டது. நடந்து முடிந்த தேர்தலில் அதிமுக, திமுக தவிர ஏனைய கட்சிகள் அத்தனையும் துடைத்தெறியப் பட்டுவிட்டன.

குறிப்பு: 2011 இல் நடந்த தேர்தலில் திமுக கட்சியோடு கூட்டணி வைத்துப் போட்டியிட்ட பாமக, வி.சிறுத்தைகள் இம்முறை இம்முறை மக்கள் நலக் கூட்டணியில் போட்டியிட்டன. பாமக தனித்துப் போட்டியிட்டது. அதிமுகவோடு கூட்டணி வைத்த புதிய தமிழகம் இம்முறை திமுகவோடு கூட்டணி வைத்திருந்தது.

தேர்தலின் போது வழக்கமாக ஆளும் கட்சிக்கு எதிராக வீசுகின்ற அலை எதுவும் இம்முறை வீசவில்லை. மக்கள் நலக் கூட்டணி (மநகூ) மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி (பாமக) தனித்துப் போட்டியிட்ட போது அதிமுகக்கு எதிரான வாக்குகள் பிரிந்து விட்டன. எதிர்க்கட்சி வாக்குகள் பிளவு படுவதால் மீண்டும் ஜெயலலிதா முதல்வராகிறார் என தேர்தலுக்கு பத்து நாட்களுக்கு முன்னரே நான் எழுதிய கட்டுரையில் எதிர்கூறல் கூறியிருந்தேன். இருந்தும் தேர்தல் முடிவு மகிழ்ச்சி தரவில்லை.

அதிமுக தனித்துப் போட்டியிட்டு 134 தொகுதிகளில் வென்றாலும் அதன் வாக்கு வங்கியும் வாக்கு விழுக்காடும் வீழ்ச்சி கண்டுள்ளது.

அதிமுக மற்றும் திமுக இடையில் உள்ள வாக்கு விழுக்காடு வித்தியாசம் ஒன்று மட்டுமே. ஆனால் அந்த ஒரு விழுக்காடு அதிமுக க்கு 36 தொகுதிகளை மேலதிகமாகக் கொடுத்துள்ளது. திமுக 10 தொகுதிகளில் 1,000 குறைவான வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்துள்ளது.

திமுகவும் அதிமுகவும் நேரடியாக மோதிக் கொண்ட 176 தொகுதிகளில் அதிமுக (40.78 ) வை விட திமுக அதிக வாக்குககைளப் (41.05) பெற்றுள்ளது. திமுக இன் கூட்டணிக் கட்சிகள் தனித்து நின்று அதிமுக வின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

தமிழக சட்டசபை தேர்தலில் 1984 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆளும் கட்சி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை பிடிப்பது இதுவே முதல் முறை ஆகும். 2011 இல் சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த அதிமுக 2016 நடந்த தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது. வழக்கம் போல அதன் வெற்றிக்கு இலவசங்கள், எம்ஜிஆர் செல்வாக்கு, இரட்டை இலை, பண பலம், ஊடக பலம், தொண்டர் பலம் கை கொடுத்துள்ளன.



அதிமுக மதுவிலக்கை படிப்படியாக நடைமுறைப்படுத்தப் போவதாக அதன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆட்சிக்கு வந்ததும் 500 கடைகளை மூடுவதாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். ஆனால் எதிர்க்கட்சியினர் இதனால் ஒரு கோடி ரூபாய்தான் இழப்பு என்கிறார்கள்.

தமிழகத்தில் இன்று மொத்தம் 7,352 மதுக் கடைகள் (TASMAC) இருக்கின்றன. இது போதாதென்று, சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் மாவட்டத் தலைநகரங்களிலும் உயர்தர (ELITE) சாராயக் கடைகளைத் அதிமுக அரசு திறந்துள்ளது. வருவாய் போதவில்லை என்று தமிழகத்தின் 226 வட்டங்களிலும் தலா இரண்டு கடைகள் வீதம் 552 உயர்தர சாராயக் கடைகளை திறந்துள்ளது. மேட்டுக்குடியினர் தயக்கமின்றி வாங்கிச் செல்வதற்கு வசதியாக பேரங்காடிகளிலும் சாராயத்தை விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவிலேயே மது விற்பனை மூலம் அதிக வருவாய் ஈட்டும் அரசாக தமிழகம் முன்னணியில் நிற்கிறது. குடிகெடுக்கும் மது விற்பனை மூலம் அரசுக்கு ஓர் ஆண்டில் ரூபா 34,000 கோடி வருவாய் கிடைக்கிறது.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு இல்லாது செய்யப்பட்ட நாள் ஓகஸ்ட் 30, 1971. அப்போது முதலமைச்சர் கருணாநிதி, ஆண்டுக்கு 26 கோடி ரூபா வருவாய் கிடைக்கும் என்றார். 1971 இல் தமிழ்நாடு முழுவதும் 7,395 கள்ளுக் கடைகளும் 3,512 சாராயக் கடைகளும் திறக்கப்பட்டன. தமிழ்நாட்டில் 139 மொத்த வணிகர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

ஆனாலும் கருணாநிதி, 1973 ஆம் ஆண்டில் மீண்டும் மதுவிலக்கை நடைமுறைப் படுத்தினார். மதுவிலக்கை நடைமுறைப்படுத்த ஏற்படும்நிதிநெருக்கடியைச்சமாளிக்க, ஆண்டு ஒன்றுக்கு 29 கோடி ரூபாய் தர வேண்டும் என மத்திய அரசிடம் கருணாநிதி கோரிக்கை வைத்துப் பார்த்தார். பணம் வரவில்லை. மீண்டும் மதுவிலக்கை இல்லாது செய்தார்.

'என் இறுதி மூச்சு இருக்கும் வரை மதுவிலக்குக் கொள்கையை நான் நிறைவேற்றுவேன் என என்னைப் பெற்ற அன்னை மீது உறுதி எடுத்துக் கொள்கிறேன்' (2.12.1979 'அண்ணா' நாளிதழ்) எனச் சொன்ன அன்றைய முதலமைச்சர் எம்ஜிஆரால் இரண்டு ஆண்டுகள்கூட அதில் உறுதியாக இருக்க முடியவில்லை.

மே 01, 1981 இல் தமிழ்நாட்டில் சாராயம் மற்றும் கள்ளுக்கடைகள் மீண்டும் திறக்கப்பட்டன. அதுவரை இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் உற்பத்திசெய்கிற தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இல்லை. நான்கு தனி நபர்களுக்கும் கூட்டுறவுத் துறை நிறுவனத்துக்கும் அரசு அனுமதி அளித்தது. அப்போது முதல் சாராயம், கோடிகளைக் கொட்டும் தொழிலாக மாறியது.

எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்தபோது TASMAC தொடங்கப்பட்டது. பாலாஜி மதுச்சாலை, எம்பி மதுச்சாலை, மோகன் வடிசாலை (Breweries) மற்றும் மதுச்சாலை, சிவாஸ் மதுச்சாலை, சார்பில் மதுச்சாலை ஆகிய ஐந்து நிறுவனங்களுக்குத்தான் தொடக்கத்தில் அனுமதி கொடுத்தார்கள். மற்ற நிறுவனங்கள் இதற்குள் நுழைய பல்வேறு தடைகள் இருந்தன. இதை உடைத்து 2001 இல் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா மிடாஸ் நிறுவனத்துக்கு அனுமதி கொடுத்தார். சசிகலா அதன் உரிமையாளர். அதன் பிறகுதான் TASMAC மூலமே மதுபானக் கடைகளை நடத்த முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். எதிர்க்கட்சியாக இருந்தபோது இதைக் கண்டித்த கருணாநிதி, 2006 இல் தான் ஆட்சிக்கு வந்ததும் மது விற்பனையை அரசு செய்யும் முடிவைத் தொடர்ந்தார். மதுச்சாலை 2 தொடங்கவும் அனுமதி கொடுத்தார்.

மக்கள் நலக் கூட்டணியில் போட்டியிட்ட எந்தக் கட்சியும் ஒரு இடத்திலும் வெற்றிபெறவில்லை. மநகூ சார்பில் தேர்தலில் நின்றவர்களில் காட்டுமன்னார்கோவில் தனி தொகுதியில் போட்டியிட்ட திருமாவளவனும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் இராமச்சந்திரன் ஆகிய இருவருமே இரண்டாம் இடத்திற்கு வர முடிந்தது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் முதல்முறையா சட்டசபையில் பிரதிநித்துவம் இழந்துள்ளன. திருமாவளவன் 87 வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தார். இவரைப் போல 18 வேட்பாளர்கள் ஆயிரத்துக்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார்கள்.

தேமுதிக போட்டியிட்ட 104 தொகுதிகளில் 103 இல் கட்டுக்காசை இழந்துள்ளது. அடுத்த முதல்வர் கனவில் இருந்த தேதிமுக தலைவர் விஜயகாந்த் உளுந்தூர் பேட்டைத் தொகுதியில் போட்டியிட்டு மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு (34,447 வாக்குகள்) கட்டுக் காசையும் இழந்தார். தேமுதிக இன் செல்வாக்கு சரிந்து கொண்டு போகிறது. 2011 இல் 7.88 % (29 இருக்கை) வாக்குகள் வாங்கிய தேமுதிக இந்த தேர்தலில் 2.4 % வாக்குகளே பெற்றுள்ளது. கடந்த 2011 இல் நடந்த தேர்தலில் 29 பேர் வெற்றி பெற்றாலும் 8 பேர் ஆளும் கட்சியில் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். 2014 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேமுதிக தோற்றாலும் 5.1 % வாக்குகள் கிடைத்தன. தேமுதிக 2006 இல் சந்தித்த முதல் தேர்தலில் 2,764,223 (10 %) வாக்குகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இன்று கட்சியின் அங்கீகாரம் தேர்தல் ஆணையாளரால் பறிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

தமிழகம் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது. அங்கிங்கினாதபடி எல்லா மட்டத்திலும் ஊழல் நிலவுகிறது. மாநிலத்தின் உட்கட்டுமானத்துக்கு 5 விழுக்காடே செலவழிக்கப்படுகிறது. இந்தியா 7 — 8 % (2013) செலவழிக்கிறது.

கடந்த செப்தெம்பர் மாதம் 100 கோடி செலவில் இருபது நாடுகளில் இருந்து ஆயிரம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை தமிழக அரசு வரவழைத்து இரண்டு நாள் மாநாடு நடத்தப்பட்டது. அதன் பலாபலன் என்ன என்பது தெரியவில்லை.

முதலீடுகளை வரவழைக்க வேண்டும்என்றால்ஊழல்ஒழிக்கப்பட வேண்டும். வீதிகள், பாலங்கள் போன்ற உட்கட்டுமானங்கள் மேம்படுத்தப் படவேண்டும். கூவம் ஆறு சுத்திகரிக்கப்பட வேண்டும். அதைச் சுற்றி இருக்கும் சேரிகள் அகற்றப்பட வேண்டும். மனித கழிவுகள் வெளியேற்றப்பட வேண்டும். சென்னை விமானதளம் மேம்படுத்தப் படவேண்டும். சென்னையில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் 6,404 தொன் குப்பைகள் விரைவாக அகற்றப்பட வேண்டும். சென்னை உட்பட நகரங்களை அலங்கோலப் படுத்தும் சுவர் ஒட்டிகள், பெரிய விளம்பரப் பலகைகள், பதாதைகள் மற்றும் வெட்டுருக்கள் அகற்றப்பட வேண்டும்.

மொத்தத்தில் அதிமுக க்கு மாற்று திமுக, திமுகக்கு மாற்று அதிமுக என்ற சூத்திரம் தொடர்கிறது. அமெரிக்கா போல் தமிழ்நாட்டில் இரண்டு திராவிடக் கட்சிகளே மிஞ் சப் போகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOUSE FOR SALE




**Toronto**
Bedrooms:4+1 | Washrooms:3




**Toronto**
Bedrooms:3| Washrooms:2




**Pickering**
Bedrooms:4 | Washrooms:3




**Toronto**
Bedrooms:4 | Washrooms:4




**Pickering**
Bedrooms:4+1 | Washrooms:4




**Toronto**




**Ajax**
Bedrooms:4 | Washrooms:3




**Ajax**
Bedrooms:4+1 | Washrooms:4




**Ajax**
Bedrooms:4+1 | Washrooms:4




**Markham**
Bedrooms:4 | Washrooms:3




**Pickering**
Bedrooms:4+2 | Washrooms:4




**Markham**
Bedrooms:4+2| Washrooms:6

We Offer, Not 1 but 2 Experienced Professionals Working Together To BUY/SELL YOUR HOME



Chairman's Club Award 2014

Chairman's Club Award 2015

" TOP 5% SALES REPRESENTATIVE IN CANADA"

## HELEN & FRANCIS ANTHONIPILLAI

SALES REPRESENTATIVE

INFO@HELEN-HOMES.CA
416.830.5724

INFO@AGENTFRANCIS.CA
416.854.4183

www.familyestates.ca

HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE* OFFICE 905.201.9977 FAX 905.201.9229
7 EASTVALE DR 205, MARKHAM, ON L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் 'லிபரல்' காங்கிரஸ்

ரூட்ஜ் பார்க் தேர்தல் களம் குறித்து தமிழர்கள் மத்தியில் பல்வேறு விதமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த தொகுதியில் கடந்த 2005ம் ஆண்டு நொவெம்பர் மாதம் நடைபெற்ற இடைத் தேர்தல் மூலம் வெற்றி பெற்ற பால் பால்கிமூன் திடீரென மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதால் இந்த தொகுதி மீண்டும் ஒரு இடைத் தேர்தலை சந்திக்கின்றது.

2005ம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு பலர் விருப்பம் தெரிவித்த போதிலும் கட்சியின் அரசியல் யாப்பில் உள்ள ஒரு சரத்தின் அடிப்படையில் விருப்பம் தெரிவித்த வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டு பால் பால்கீரூன் கட்சித் தலைமையால் வேட்பாளராக நியமிக்கப்பட்டார். 1998ம் ஆண்டு முதல் ஸ்காபுரோ ரூட்ஜ் பார்கில் நகர சபை உறுப்பினராக பதவி வகித்த பால் பால்கீரூன் லிபரல் தலைமையால் அழைத்து வரப்பட்டு வேட்பாளராக்கப்பட்டு வெற்றியடையச் செய்யப்பட்டார்.

இதில் உள்ள முரண் நகை என்னவென்றால் 2005ம் ஆண்டு நடைபெற்ற அந்த இடைத் தேர்தலில் போட்டியிடும் விருப்பத்தை வெளிப்படுத்தி லிபரல் கட்சித் தலைமையால் நிராகரிக்கப்பட்ட ரேமண்ட சோ, அதே தேர்தல் தொகுதியில் இந்த வருடம் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் பழமைவாதக் கட்சியால் அழைத்து வரப்பட்டு வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பழமைவாத கட்சியில் போட்டியிடும் விருப்பத்தை வெளிப்படுத்திய தமிழர் ஒருவர் உட்பட சிலர் கட்சித் தலைமையால் நிராகரிக்கப்பட்டனர்.

இங்கு மூன்று முக்கிய கட்சிகளினதும் வேட்பாளர் தெரிவுகள் அல்லது நியமனங்கள் விமசர்சனத்திற்கு உட்பட்டிருப்பது இங்கே முக்கியமானது. தமிழ் மக்கள் கணிசமாக வாழும் தேர்தல் தொகுதிகளில் முக்கியமானதாக கருதப்படுவதும் முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக ராதிகா சிற்சபைசனை தெரிவு செய்ததுமான இந்த தொகுதி சந்திக்கும் இறுதி மாகாண சபை தேர்தல் இது என்பது இந்த தொகுதியின் மீதான அக்கறை அதிகரிப்பிற்கு பிரதான காரணம்.

அவரது பதவி விலகல் அறிவிப்பின் ஈரம் காய்வதற்கு முன்ரே இந்த தொகுதியில் போட்டியிடும் விருப்பினை பிரகல் திரு வெளிப்படுத்தினார். லிபரல் கட்சியின் நீண்டகால செயல்பாட்டாளர், சமூக சேவையாளர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் ஆழுமை கொண்ட பேச்சாளர், கனேடிய தமிழ் காங்கிரஸின் பணிப்பாளர் என்கின்ற பல்வேறு தகைமைகளோடு அறிமுகமாவும் அவர் இந்த தேர்தல் களத்தில் குதித்தார். அதற்கு சில நாட்களின் பின்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைசன் புதிய ஜனநாயக் கட்சியின் சார்பில் இந்த தேர்தலில் போட்டியிடப் போவதான தகவல்கள் மெல்ல கசிந்தன. இது இந்த தேர்தல் களத்தை மேலும் கவனிப்பு நிலைக்குள் தள்ளியது.

ராதிகா சிற்சபைசனுக்கும் புதிய ஜனநாயக் கட்சியின் மாகாண தலைமைக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்கள் நடை பெற்று நிலையில் திடீரென ராதிகா சிற்சபைசன் தான் லிபரல் கட்சியின் சார்பில்போட்டியிடப் போவதான அறிவித்தலை வெளியிட்டார். இது பல்வேறு கோணங்களில் ஆராயப் பட்டது விமர்சிக்கப் பட்டது. புதிய ஜனநாயக் கட்சியின் செல்வாக்கு மிக்க தமிழர் தரப்பு ராதிகாவிற்கு வாய்ப்பினை வழங்க வேண்டாம் என்ற "பரிந்துரை"யினை கட்சி தலைமைக்கு வழங்கியதாகவும் இதன் காரணமாகவே ராதிகா சிற்சபைசன் வெற்றி பெறும் வாய்ப்புள்ள கட்சிக்குள் தன்னை இணைத்துக் கொள்ளும் முடிவிற்கு தள்ளியதாகவும் ஒரு கருத்து வெளியாகியது. இதில் உண்மை இருக்கலாம் என்பதை அடுத்து வந்த நாட்களில் நடந்த நகர்வுகள் ஓரளவிற்கு உறுதிப்படுத்தியிருந்தன.

மறுபுறம் பழமைவாதக் கட்சியினர் தமது கட்சியின் சார்பில் போட்டியிடுமாறு கோரி 'தன்னை அணுகியதாகவும் எனினும் தான் அவர்களின் அழைப்பினை நிராகரித்து விட்டதாகவும் ராதிகா சிற்சபைசன் பகிரங்கமாக அறிவித்திருந்தார். ராதிகா சிற்சபைசனின் இந்த அறிவித்தலிற்கு மறுப்பு எதனையும் வெளியிடாத நிலையில் மௌனம் காத்ததன் மூலம் கொன்சவேற்றி கட்சி தாங்கள் ராதிகா சிற்சபைசனை தமது கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு அழைத்ததை உறுதிப்படுத்தியது.

அதேவேளை பிரகல் திருவின் இந்த அரசியல் பிரவேசம் குறித்து அதிருப்தியடைந்திருந்த ஒரு சாரார் அவரை ஓரம் கட்டுவதற்கு பொருத்தமானவராக ராதிகா சிற்சபைசனைக் கருதினார்கள். கட்சியின் தலைமை ராதிகா சிற்சபைசனுக்குசார்பாகசெயல்படும் என்று ஆசை காட்டினார்கள். முன்னர் நடைபெற்றது போல போட்டியளார்களை அன்பாக வெளியேற்றி அல்லது சிவப்பு அட்டை காட்டப்படும் என்று எச்சரிக்கையாக வெளியேற்றி ராதிகா சிற்சபைசனை வேட்பாளராக்குவோம் என்று சிலர் வழங்கிய " உத்தரவாதம்" ராதிகா சிற்சபைசனின் அரசியலுக்கு யூன் மாதம் 5ம் திகதியுடன் முற்றுப் புள்ளி அல்லது அரைக்கால் புள்ளி வைத்திருக்கின்றது. ராதிகா சிற்சபைசன் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் பிரிக்கப்பட்ட ரூட்ஜ் பார்கின் ஒரு தொகுதியிலும் பிரகல் திரு மற்றைய தொகுதியிலும் போட்டியிடலாம் என்று ஆரூடம் கூறுகின்றது ஒரு பட்சி.

லிபரல் கட்சியின் நியமனத் தேர்தல் யூன் மாதம் 5ம் திகதி நடைபெற்ற போது பிரகல் திருவின் ஆதரவாளர்கள் அலை அலையாக திரண்டு மண்டபத்தை நிறைத்திருந்தார்கள். எல்லோரும் சிவப்பு நிறத்தில் பிரகல் திருவை ஆதரிப்போம் என்று எழுதிய வாசம் பொருத்தப்பட்ட மேலாடைகளை அணிந்திருந்தார்கள். பரபரப்பான அந்த மண்டபத்தில் ஒருவர் மிக மௌனமாக நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருக்கின்றார். பிரகல் திருவின் இந்த வெற்றியின் பின்னால் மட்டுமல்ல பிரகல் திரு என்கின்ற ஒரு ஆளுமையின் உருவாக்கத்தின் பின்னாலும் அவர் இருந்திருக்கின்றார். அவர் மீது இந்த கட்டுரையாளருக்கும் வாசகர்களுக்கும் பல்வேறு விமர்சனங்களும் மாறுபட்ட பார்வைகளும் இருக்கின்றன. இருந்த போதிலும் தனது இலக்கை அடைவதில் அந்த மனிதர் கொண்டுள்ள அர்பணிப்பும்ஈடுபாடும் அதற்கான திட்டமிடல்களும் காய் நகர்தல்களும் அவரிடம் இருந்து கற்றுக் கொள்வதற்கான பல பாடங்கள் இருக்கின்றன என்பதை "மீண்டும்" ஒரு முறை ஸ்காபுரோ கொன்வன்சன் மண்டபதில் வைத்து எல்லோருக்கும் காதில் அறைந்து சொல்லியிருக்கின்றது.

அவர் கனேடிய தமிழ் காங்கிரசின் செயற்பாட்டாளர் டான்டன் துரைராஜா. யார் என்ன சொன்னாலும் இது டான்டன் துரைராஜாவினதும் கனேடிய தமிழ் காங்கிரசினதும் வெற்றி என்பதை மறைப்பதற்கு மறுப்புதற்கும் இடமும் வழியுமின்றி நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். ஆனால் கனடாவில் வாழும் ஓட்டு மொத்த தமிழ் மக்களுக்குமான ஒரு தலைமை அமைப்பாக இருந்து வழிநடத்தியிருக்க வேண்டிய ஒரு அமைப்பை லிபரல் கட்சியின் துணை அமைப்பு போலாகிய செயல் மன்னிப்பேதுமின்றி கண்டிக்கப்பட வேண்டியது. இலங்கை தமிழர்கள் அரசியல் விடயத்தில் கனேடிய தமிழ் காங்கிரசின் வகிபாகம் வேறொரு நேரத்திலும் மற்றொரு தளத்திலும் ஆராயப்பட வேண்டியுள்ளது. கனடாவில் வாழும் தமிழர்களின் அரசியலுக்கு தலைமை தாங்கும் வலு மிக்க அமைப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு உருவாக்கப்பட்ட அமைப்பு லிபரல் கட்சியின் செல்லப் பிள்ளை போல் அந்த கட்சிக்கு மட்டும் பொருத்தமான ஆள்பிடித்து கொடுக்கும் நிலையில் இருந்து வெளியில் வரவேண்டும். அது லிபரலை தாண்டி சிந்தித்திருந்தால் பழமைவாத கட்சிக்கும் பொருத்தமான தமிழ் வேட்பாளர் ஒருவரை நாம் தெரிவு செய்திருக்கலாம்.

இப்போது மாநகர சபை உறுப்பினரான ரேமன்ட் சோவை பழமைவாத கட்சி நியமித்து விட்டது என்று துள்ளிக் குதிக்கும் "தமிழ் உணர்வாளர்கள்" ஏன் பொருத்தமான தமிழ் வேட்பாளர்களை அந்த கட்சிக்காக உருவாக்கவில்லை என்று தம்மை தாமே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குட்படுத்துவதில்லை அல்லது கனேடிய தமிழ் காங்கிரஸ் ஏன் லிபரலுக்கு மட்டும் ஆள் பிடிக்கின்றது என்று யோசிப்பதும் இல்லை. ஒரு சமூகமாக நாங்கள் வளரவில்லை. ஒரு சமூகமாக நாங்கள் சிந்திப்பதில்லை இது தான் எங்களின் எல்லாப் பிரச்சினைக்கும் அடிப்படை. தமிழர் ஒருவர் 1500 உறுப்பினர்களை சேர்த்து விட்டார் என்றால் அவரை அந்த கட்சி வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று அறிக்கைப் போர் நடத்தும் அளவில் தான் நாங்கள் இன்னமும் நிற்கின்றோம். 1500 கட்சி உறுப்பினர்களை சேர்க்க முடியும் ஒருவரால் 10,000 வாக்குகளே பெற முடியுமா என்று சிந்திக்க முடிவதில்லை.

ஒரு அரசியல் கட்சியின் வேட்பாளராக நியமனம் கோருகின்றவர் தான் சார்ந்த சமூகத்திற்கு கடந்த காலங்களில் எவ்வாறான பங்களிப்புகளை வழங்கியிருக்கின்றார் என்று பார்க்க தோன்றுவதில்லை. நீண்டகால நோக்கில் தமிழர் நலன்களுக்கு சார்பாக செயல்படக் கூடிய ஒரு சில கனேடிய அரசியல் வாதிகளையும் பகைத்துக் கொள்வதால் நாங்கள் அடையப் போகும் நன்மை என்ன என்பதை நாங்கள் கேள்விக்குட்படுத்துவதில்லை ?

மறுபுறம் கட்சித் தலைமைக்கு நெருக்கமாக இருப்பவர்களாக தங்களை காண்பிக்கும் தமிழர்கள் தமக்கு நெருக்கமானவர்களையும் தமது நண்பர்களின் உறவினர்களையும் வேட்பாளர் நியமனத்திற்கு நிறுத்தும் அவலமும் நடைபெற்றிருக்கின்றது. இதற்கு காரணம் கட்சிகளின் தலைமைகளுடன் நெருக்கமான உறவினைப் பேணுவதற்கு சரியான நபர்களை எமது சமூகம் தெரிவு செய்த தவறியது தான். சுயநலமிகளிடம் இது போன்ற பாரிய பொறுப்புகள் ஒப்படைக்கப்படுவது அல்லது அவர்கள் தாங்களாக அதனை எடுத்தாள்வதற்கு அனுமதிப்பதன் அறுவடை தான் இது. ஒரு வகையில் தமிழர்கள் கனேடிய அரசியல் தமது வகிபாகம் குறித்த சுயபரிசோதனை செய்வதற்கான வாய்ப்பினை இந்த தேர்தல் களம் ஏற்படுத்தியிருக்கின்றது.

தாங்களே கனேடிய அரசியல் கட்சிகளின் தலைமைகளுக்கு நெருக்கமான தரப்பு, தமது கருத்துக்களையே கட்சி தலைமைகள் செவிமடுக்கும் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களால் தமிழர் தரப்பு தொடர்ந்து ஏமாற்றப்படுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. அது கொன்சவேற்றிக் கட்சிக்கு மட்டுமல்ல தலைமையால் தெரிவு செய்யப்படும் வாய்ப்பிருப்பதாக நம்ப வைக்கப்பட்டு அழைத்து வரப்பட்டு அரசியல் எதிர்காலத்தையே தொலைத்து நிற்கும் ராதிகா சிற்சபைஈசனுக்கும் புதிய ஜனநாயக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு "புதியவர்" ஒருவரை தெரிவு செய்ய முடியாமல் போதற்கும் காரணம் என்ன என்பது விரிவாக ஆராயப்பட்ட வேண்டும்.

அதேவேளை கனேடிய தமிழ் சமூகமாக நாங்கள் கனேடிய அரசியல் கட்சி தலைமைகளிடம் பேசுவதற்கான பொறி முறை ஒன்றை உருவாக்க வேண்டும். அதை விடுத்து தனி மனிதர்கள் சிலரிடம் இது போன்ற பாரிய பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு ஒதுங்கிக் கொள்வது அவர்கள் தமக்கு விருப்பமான வகையில் அரசியல் செய்வதற்கு நாமே வழியேற்படுத்திக் கொடுப்பதாக அமைந்து விடும். கொன்சவேற்றிக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தில் பல்வேறு கேள்விகளும் வாதப் பிரதிவாதங்களும் எழுவதற்கு காரணமாக விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதும் அது எதிர்காலத்தில் தொடரமால் தடுப்பதும் தான் மாற்றத்திற்கான வழியாகும்.

ஒரு அரசியல் கட்சி தனது நீண்டகால இலக்குகளை அடைவற்கான வழிவகைகளைத் தான் ஆராய வேண்டுமே தவிர குறுகிய நலன்களின் அடிப்படைகளில் தனது இலக்குகளை தொலைத்துவிடக் கூடாது. அடுத்த வருடம் நடைபெறப் போகின்ற மாகாண சபைத் தேல்தலின் ஆட்சி மாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கும் கொன்சவேற்றி வெற்றி பெறுதவற்கும் இந்த இடைத் தேர்தல் முடிவுகள் முக்கியமாவை என்தே அந்த கட்சியின் நிலைப்பாடாக இருக்கின்றது. கடந்த பெப்ரவரி மாதம் விட்பி— ஒசாவா தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலை கொன்சவேற்றிவ் கட்சி வெற்றி கொண்டிருக்கின்றது. பிரதமர் ஜஸ்டின் ரூடோ உட்பட பல தலைகள் வந்தும் லிபரல் வேட்பாளரை வெற்றி பெற வைக்க முடியவில்லை.

அதே போன்ற நிலை தான் ரூட்ஜ் பார்க்கிலும் ஏற்பட வேண்டும் என்று கொன்சவேற்றிவ் கட்சி விரும்புகின்றது. அதற்கு பொருத்தமான தெரிவாக அவர்கள் முதலில் கருதியது தமிழரான ராதிகா சிற்சபைஈசனைத் தான் ஆனால் அவரின் நிராகரிப்பினை அடுத்து அவருக்கு இணையான இந்த தேர்தலை வெற்றிக் கொள்ளக் கூடிய ஆளுமைமிக்க தமிழர் ஒருவரை எங்களால் முன்னிறுத்த முடியாமல் போய்விட்டது. இந்த யதார்த்தை புரிந்து கொள்ளமால் பற்றிக் பிரவுண் முதுகில் குத்திவிட்டார் என்று குத்தி முறிவது எந்த வகையில் நியாயம்.

எதிர்கால அரசில் நலன்களுக்காக வெற்றி பெற்றே ஆக வேண்டிய ஒரு தொகுதியில் வெற்றி பெறக் கூடிய ஒருவரை வேட்பாளராக அறிவிப்பது தான் நல்ல தலைவனுக்கு அழகு அதனை தான் பற்றிக் பிரவுன் செய்திருக்கின்றார். அந்த தலைவனுக்கு "இந்த தமிழன்" தேர்தலை வெற்றி கொள்ளும் தகுதிகள் கொண்டவர் என்பதை கூறி ஒருவரை முன்னிறுத்த முடியாமல் போனது ஒட்டு மொத்தமாக நம் தமிழர்களின் தோல்வி தானே ? மூன்று கட்சிகளிலும் தமிழர்கள் போட்டியிட்டால் ஒரு தமிழர் வெற்றி பெறுவார் என்று குறுந் தேசியவாத சிந்தனைகளால் எங்களை சுற்றி போர்த்துக் கொண்டு நாங்கள் வாழத் தலைப்படுகின்றோம்.

தேர்தல் அறிவிப்பின் போது வெளியில் வந்து தேர்தல் முடிந்த பின்னர் காணமால் போகும் செலக்டிப் அம்னீசியா வியாதியில் இருந்து நாங்கள் வெளியில் வர வேண்டும். ஒரு சமூகமாக அடுத்த கட்டத்திற்கு எங்களை முன்நகர்த்துவதற்குரிய வேலைத் திட்டங்கள் குறித்து ஆராயவேண்டும். பொதுவான அமைப்பு ஒன்றின் ஊடாக அரசியல் ஈடுபாடு கொண்ட "நல்ல" ஆளுமைகளை இனம் கண்டு அவர்களுக்கு உரிய ஒத்துழைப்புகளை வழங்கி அவர்கள் எமது மக்கள் மத்தியில் அடையாளப்படுத்த வேண்டும். அவ்வாறு இனம் காணப்படுகின்றவர்கள் கட்சிகளால் சிவப்பு அட்டை காண்பிக்கப்படக் கூடிய அளவிற்கு கடந்த கால செயல்பாடுகளை கொண்டிருக்காதவராக இருக்க வேண்டும். அவ்வாறு அடையாளம் காணப்படுகின்றவர்கள் அவர்கள் விரும்பும் கட்சிகளின் தலைமைகளோடும் முக்கிய செயல்பாட்டாளர்களோடும் இணைந்து செயல்படுவதற்கான பொறிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இதனை செய்வதற்கு பொருத்தமான அமைப்பாக கனேடிய தமிழ் காங்கிரஸ் இருந்திருக்க வேண்டும். துரதிஸ்டவசமாக அது தன்னை ஒரு கட்சியோடு மட்டும் மட்டுப்படுத்தி கனேடிய தமிழ் "லிபரல்" காங்கிரஸ் ஆகிவிட்டது. ஆனால் அது லிபரல் கட்சிக்கு பொருத்தமானவர்களை வழங்கி வருகின்றது என்பது மகிழ்ச்சிக்குரியது.

ஏனைய இரண்டு கட்சிகளும் அதனை பின்பற்றினால் ஏனைய கட்சிகளுக்கும் பொருத்தமான "தமிழ் வேட்பாளர்கள்" இன்னும் சில வருடங்களிலேனும் கிடைப்பார்கள். இல்லாவிட்டால் இது போலவே இனிவரும் தேர்தல்களிலும் எங்களை யாராலும் காப்பாற்ற முடியாமல் போய் விடும். மாறாக தேர்தல் அறிவித்தலை தொடர்ந்து மழைக் காளான்கள் போல் நானும் ரவுடி தான் கணக்கில் வேட்பாளர் நியமனத்தில் குதிப்பவர்களை தூக்கிக் கொண்டாடுவதும் அவர் நிராகரிக்கப்பட்டால் அதற்காக கட்சியையும் கட்சி தலைமைகளையும் விமர்சித்துக் கொண்டிருப்பதும்,எங்கேஎந்த தேர்தல் அறிவிப்பு வந்தாலும் நான் போட்டியிடுவேன் என்று தேர்தலில் போட்டியிடுவதையே ஒரு முழுநேரத் தொழில் போல கொண்டிருப்பவர்களை தடுத்து நிறுத்தாமல் அவர்களுக்கும் ஜால்ரா போடுவதும் ஆரோக்கியமான மாறங்களை ஏற்படுத்தாது.

ரூட்ஜ் ரிவரில் இருந்து நாம் கற்றுக் கொள்ள நிறையவே பாடங்கள் இருக்கின்றன !!

ரமணன் சந்திரசேகரமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் டயஸ்பொறாவை ராஜியச் சொல்வாக்குமிக்க ஒரு சமூகமாக

# யார் கட்டியெழுப்புவது?

நிலாந்தன்

அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவுநாளின்போது கனேடியப் பிரதமர் அது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார். அதைச் சுட்டிக்காட்டி ஒருகனேடிய தமிழ் நண்பர் என்னிடம் கேட்டார்... “தமிழ் டயஸ்பொறா ஓர் ராஜிய செல்வாக்குமிக்க சமூகமா? என்றுஉங்களுடைய ஈ—குருவி இதழில் வந்த கட்டுரையில் கேட்டிருந்தீர்கள். இப்பொழுது கனேடிய பிரதமர், தமிழ்க் கனேடியர்களின் துக்கநாள் ஒன்றைக் குறித்து கருத்துத் தெரிவிக்கவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டிருக்கிறது. இது ஒருவளர்ச்சி தானே?” என்று.

வளர்ச்சிதான். ஆனால், கனேடியப் பிரதமர் தமிழ்க் கனேடியர் களின் துக்கத்தை பிரதிபலித்தால் மட்டும் போதாது. அதற்கும் அப்பால் போகவேண்டும். இலங்கை தொடர்பான கனடாவின் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களில் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் விதத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் கனேடியத் தமிழ் டயஸ்பொறாவை ராஜிய அந்தஸ்துடைய ஒருசமூகம் என்று அழைக்கலாம்.


கனடாவில் மட்டுமல்ல, பிரித்தானியாவிலும், அங்குள்ள அரசியல் தலைவர்கள் தமிழ் டயஸ்பொறாவின் பண்டிகை களில் பங்கெடுக்கக் காணலாம். நோர்வேயிலும் தமிழ் டயஸ்பொறாவின் சந்திப்புக்களிலும் வைபவங்களிலும் நோர்வீஜிய அரசியல் வாதிகளும் புலமையாளர்களும் கலந்துகொள்வதுண்டு. ஆனால், இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், தமிழ் டயஸ்பொறாவோடு நெருங்கி உறவாடும் மேற்படி அரசியல்வாதிகள், அதை ஒரு வாக்குவங்கியாக மட்டும்தான் பார்க்கிறார்களா? அல்லது அதற்கும் அப்பால் மதிக்கிறார்கள்? என்பதே. தமிழ் டயஸ்பொறா பலமாகக் காணப்படும் சில நாடுகளில் அது கவனிப்பிற்குரிய ஒரு வாக்கு வங்கியாக வளர்ந்துவருகிறது. எனவே,தமது வாக்காளர்களை அரவணைக்க வேண்டிய ஒருதேவை அந்தந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு உண்டு. இது போன்ற தேவைகளை அடிப்படையாக வைத்து தமிழ் டயஸ்பொறாவானது தன்னை ஒருராஜிய அந்தஸ்துமிக்க சமூகமாக கட்டியெழுப்புவது எப்படி? அதை யார் செய்வது? எந்த நோக்குநிலைகளிலிருந்து செய்வது?

தமிழ் டயஸ்பொறா எனப்படுவது தட்டையான, ஒற்றைப் பரிமாணத்தைக் கொண்ட ஒரு சமூகமல்ல. பல உப பிரிவுகளும் நுண் பிரிவுகளும் உண்டு. போர் நடந்த காலங்களில் இப்பிரிவுகள் ஓரளவிற்கு கடக்கப்பட்டு தமிழ் டயஸ்பொறாவானது ஒப்பிட்டளவில் ஒன்றுதிரண்டு தாயகத்தை நோக்கி நின்றது. ஆனால், இப்பொழுது நிலைமைகள் அவ்வாறு இல்லை. தலைமுறைகளுக்கிடையிலேயே இடைவெளிகள் அதிகரித்துக் காணப் படுகின்றன. தவிர, நம்பிக்கைகள், சாய்வுகள் காரணமாகவும் பிரிவுகள், உப பிரிவுகள் அதிகரித்துச் செல்கின்றன. 2009 மேக்கு முன்புவரை டயஸ்பொறாவின் பெரும் பகுதியானது போரிற்கு வரிசெலுத்தும் பார்வையாளர்களாகவே காணப் பட்டது. அதுவும் தாயகத்தை நோக்கிய பிரிவேக்கத்தோடு, அதிகமாக உணர்ச்சிவசப்படும் வரிசெலுத்திகள். ஆனால், 2009 மேக்குப் பின் மேற்படி வரிசெலுத்தும் சனத் தொகையினர் மத்தியில் தாயகத்தின் அரசியலைக் குறித்த ஈடுபாடு குறைந்துவருவது அதவானிக்கப்பட்டுள்ளது. இத்தகையதொரு பின்னணியில், பிரிவுகள், நுண் பிரிவுகளாக சிதறுண்டு கிடக்கும் ஒரு டயஸ்பொறாச் சமூகத்தை நிறுவனமயப்படுத்தி, ராஜியச் செல்வாக்குமிக்கச் சமூகமாக கட்டியெழுப்புவது எப்படி? அதை யார் செய்வது? எங்கிருந்துதொடங்குவது?

கனடாவும் உட்பட மேற்கத்தைய நாடுகளில் வசித்தவரும், புரட்டஸ்தாந்து திருச்சபை ஒன்றின் முக்கியஸ்தருமான நண்பர் ஒருவரோடு இது தொடர்பில் உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டினார். ஒன்று,தமிழ் டயஸ்பெறாவுக்குள் இருந்து நிதிப் பலம் மிக்க ஆளுமைகளும் நிறுவனங்களும் மேலெழவேண்டும். இரண்டாவது, தமிழ் டயஸ்பொறாவின் அரசியல் செயற்பாடுகள் மேற்கத்தைய நாடுகளின் அரசியல் தலைவர்களாலும், கொள்கை வகுப்பாளர்களாலும் புத்திஜீவிகளாலும் பிரமிப்போடு பார்க்கப்படும் அளவிற்கு ஜனநாயக செழிப்புமிக்கதாக அமையவேண்டும் என்று. தனது நீண்ட புலம் பெயர் வாழ்வின் அனுபவங்களை அடிப்படையாக வைத்து அவர் அவ்வாறு சொன்னார்.

தமிழ் டயஸ்பொறாவில் இப்பொழுது குறிப்பிட்டுச் சொல்லக்கூடியநிதி ஆளுமைகள் மேலெழுந்து வருகின்றன. பிரான்ஸில் வசிக்கும் எனது நண்பர் ஒருவர் பகிடியாகச் சொன்னார், “ஒரு தீவை விலைகொடுத்து வாங்கக் கூடிய நிதிப் பலத்தோடு சுமார் 400 தமிழர்கள் தமிழ் டயஸ்பொறவில உண்டு என்று”. இது ஒரு விஞ்ஞான பூர்வமான புள்ளிவிபரம் அல்ல. ஆனால்,தமிழ் டயஸ்பொறாவுக்குள் இருந்து பணபலம் மிக்க ஆளுமைகள் ஆங்காங்கே எழுச்சிபெறத் தொடங்கிவிட்டார்கள்.

இவ்வாறு ஐரோப்பாவில் எழுச்சிபெற்று வரும் இரண்டு கோப்பரேட் நிறுவனங்களில் ஒன்று ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவினுள் கால் பதித்தது. அதேசமயம்,கோடம்பாக்க சினிமாத் துறைக்குள்ளும் அந்த நிறுவனம் முதலீடு செய்யமுற்பட்டது. அந்நாட்களில் அது தமிழகத்திலும் டயஸ்பொறாவிலும் தாயகத்திலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. ஆனால், ஆட்சிமாற்றத்தின் பின் மேற்சொன்ன இரண்டு கோப்பிறேட் நிறுவனங்களும் தமிழ்ப் பகுதிகளில் படிப்படியாக காலுன்றி வருகின்றன. ஆட்சிமாற்றத்திற்கு முன்புவரை கடுமையாக விமர்சிக்கபபட்ட கோப்பரேட் நிறுவனம் ஒன்றை, ஆட்சிமாற்றத்தின் பின் யார் புனிதநீர் தெளித்து பாவநீக்கம் செய்தார்கள்? என்று தெரியவில்லை. ஆனால், இப்பொழுது மேற்படி இரண்டு கோப்பரேட் நிறுவனங்களுக்கும் சொந்தமான ஊடகங்கள் தமிழ்ப்பகுதிகளில் தமது அலுவலகங்களை வைத்துள்ளன. அதில் ஒரு நிறுவனத்திற்குச் சொந்தமான அறக்கட்டளை ஒன்று தமிழ்ப் பகுதிகளில் இறங்கிவேலை செய்யத் தொடங்கிவிட்டது.



கோப்பரேட்நிறுவனங்களுக்கும் அரசுகளுக்குமிடையிலான உறவு அப்படித்தான் இருக்கும். பணமும் அதிகாரமும் எப்பொழுதும் கூட்டுச் சேர்ந்து விடும். அமெரிக்காவிலுள்ள யூதமற்றும் ஐரிஸ் டயஸ்பொறாக்களில் காணப்படும் நிதிப் பலம் மிக்க நிறுவனங்கள் அங்குள்ள கட்சிகளோடும் அரசியல் தலைவர்களோடும் எப்படி நெருக்கமாக உறவாடுகின்றன என்பதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும். இவ்வாறு தமிழ் டயஸ்பொறா பலமாகக் காணப்படும் நாடுகளில் அந்தந்த நாடுகளின் கட்சிகளின் மீதும் அரசியல் வாதிகளின் மீதும் நிதிரீதியாக செல்வாக்கைச் செலுத்தவல்ல தனிநபர்களும், நிறுவனங்களும்; எத்தனை உண்டு? இதுமுதலாவது.

இரண்டாவது, தமிழ் டயஸ்பொறா வின் அரசியல் செயற்பாடுகள் அந்தந்த நாடுகளின் அரசியல் கலாசாரத்தோடு ஒப்பிடுகையில், அனைத்துலக கவர்ச்சிமிக்கவைகளாகக் காணப் படுகின்றனவா? அவ்வாறு இல்லை யென்றால் அதற்கு காரணங்கள் எவை? இது தொடர்பாக தமிழ் டயஸ்பொறாவுக்குள் உரையாடல்கள் எவையும் நடத்தப்பட்டுள்ளனவா? இது தொடர்பாக ஆய்வுகள் எவையும் செய்யப்பட்டுள்ளனவா? இப்போதுள்ள நிலைமைகளின் படி தமிழ் டயஸ்பொறாவிலுள்ள முதலாம், இரண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையினர் மத்தியில் பல்வேறுபட்ட ஆராய்ச்சி ஒழுக்கங்களைக் கொண்ட மிகப் பலமான ஒருபுலமைச்சமூகம்எழுச்சி பெற்றுவருகிறது. தாயகத்திலுள்ள புலமையாளர்களைப் போலன்றி ஒப்பிட்டளவில் கூடுதலான ஜயநாயகச் சூழலில் போதியளவு நிதிப் பலத்தோடும், புலமை வாய்ப்புக்களோடும் டயஸ்பொறாப் புலமையாளர்கள் காணப்படுகிறார்கள். எனவே, தமிழ் டயஸ்பொறாவின் அரசியல் பண்பாட்டை அனைத்துலக கவர்ச்சிமிக்கதாக வடிவமைக்கவேண்டிய பொறுப்பு அவர்களுக்குஉண்டு.

எனவே,மேற்கத்தைய நாடுகளின், அரசியல் தலைவர்கள்,கொள்கை வகுப்பாளர்கள்,அபிப்பிராயங்களை உருவாக்கவல்ல தரப்புக்கள் மற்றும் ஊடகங்கள் போன்றவற்றின் மீது நிர்ணயகரமான செல்வாக்கைச் செலுத்தவல்ல நிதிப் பலமோஅரசியல் பலமோ வளர்ச்சியடையும்போதே தமிழ் டயஸ்பொறாவானது ராஜிய அந்தஸ்துள்ள ஒருசமூகமாக மேலெழும். சனல்— 4 ஊடகத்தின் மீது தமிழ் டயஸ்பொறாவின் ஒருபிரிவினர் கொண்டிருக்கும் செல்வாக்கை இங்கு சுட்டிக்காட்டவேண்டும். அதைப்போலவே, அனைத்துலக பரப்பில் இனப்படுகொலைக்கு எதிராக செயற்படும் துறைசார் நிபுணர்களோடு தமிழ் டயஸ்பொறாவின் ஒரு பகுதியினர் கொண்டிருக்கும் நெருக்கத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இவை போன்ற உறவுகள் வளர்த்தெடுக்கப்படும் போதும், இவை போன்ற செயற்பாடுகள் ஒருமையத்தில் இருந்து ஒருங்கிணைக்கப்பட்டு திட்டமிடப்படும் பொழுதும் தமிழ் டயஸ்பொறாவாது முழுமையான பொருளில் ராஜிய செல்வாக்குடைய ஒரு சமூகமான மேலெழும். இவ்வாறு தமிழ் டயஸ்பொறாவை ராஜிய அந்தஸ்து மிக்க ஒருசமூகமாக கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு யாருடையது?

முதலாவதாகவும், முக்கியமான தாகவும் அது தாயத்திலுள்ள அரசியல் தலைவர்களுக்குரியது. இரண்டாவதாக அது டயஸ்பொறாச் சமூகங்கள் மத்தியில் உள்ளதலைமைகள் மற்றும் நிறுவனங்களுக்குரியது. தாயகம் தான் மையம். ஈழத் தமிழ் அரசியலைப் பொறுத்தவரை டயஸ்பொறாவும் சரி தமிழகமும் சரி மையங்களாகச் செயற்படமுடியாது. 2009 மேக்குப் பின் டயஸ்பொறாவில் சிலதரப்புக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை நிலவியது. அஞ்சலோட்டக் கோல் இப்பொழுது டயஸ்பொறாவிட மேகையளிக்கப்பட்டிருக்கிறது என்பதே அது. ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருந்த ஒரு பின்னணியில் தாயகத்தில் மிகக் கடுமையான அச்சுறுத்தல்கள் நிலவிய ஒரு காலகட்டத்தில் டயஸ்பொறாவேதமிழ்த்தேசியத்தின் கூர் முனைபோலக் காணப்பட்டது. ஆனால், காலப் போக்கில் ஏறக்குறை ஏழு ஆண்டுகளின் பின் அது ஒப்பிட்டளவில் மிகைப்படுத்தப்பட்ட ஒருதோற்றமா? என்ற கேள்வி எழுகிறது.

தாயகத்தில் மக்கள் ஆணையைப் பெற்ற கட்சியானது தமிழ் டயஸ்பொறாவை ஒரு பின் தளமாகக் கருதவில்லை. தமிழ் டயஸ்பொறாவையும் தமிழகத்தையும் பின்தளங்களாகக் கருதி சிந்திக்கும்போது மட்டுமே ஈழத் தமிழர்களால் ஒருதேசமாகச் சிந்திக்கமுடியும். இல்லையென்றால், இலங்கைத்தீவின் அதிகாரங்களற்ற இரண்டு மாகாணங்களாகத்தான் சிந்திக்கவேண்டியிருக்கும். நடப்பு அரசியல் நிலைமைகள் அப்படித்தான் இருக்கின்றன.

தாயகத்தை மையமாகவும், தமிழகத்தையு-ம், டயஸ்பொறாவையும் இரு பின்தளங்களாகவும் வைத்துக் கொண்டு சிந்திக்கும்போதுதான் தமிழ் டயஸ்பொறாவை ஒருராஜிய செல்வாக்குமிக்கச் சமூகமாக எப்படி கட்டியெழுப்புவது என்றுதிட்டமிடவும் முடியும். அப்படிச் சிந்திக்கும்பொழுதுதான் டயஸ்பொறாவிலுள்ள நிதிப் பலத்தை, அதாவது, தமிழ் நிதியை எப்படி ஒருங்கிணைப்பது என்று சிந்திக்கலாம். தமிழ் தேசியநிதி என்று சிந்தித்ததால்தான் அதுகுறித்து தேசியநோக்கு நிலையிலிருந்து திட்டங்களை வகுக்கமுடியும். சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுவதைப் போல ஒரு தமிழ் வங்கியை உருவாக்குவது பற்றியோ அல்லது ஒருதமிழ் ஐ. என்.ஜி.ஓவை உருவாக்குவது பற்றியோ திட்டமிடமுடியும்.

ஒரு தேசமாகச் சிந்திக்கும்போது தான் ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய இருப்பிற்குரிய அடிக் கட்டுமானங்கள் எவை என்று ஆராய்ந்து கண்டுபிடிக்க முடியும். அவ்வாறு ஆராய்வதற்குத் தேவையான ஆராய்ச்சி மையங்களையும் சிந்தனைக் குழாம் களையும் உருவாக்கமுடியும். ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் சிந்தனைக் குழாம்களால் நெறிப்படுத்தப்படும் ஓர்அரசியலே அதன் மெய்யான பொருளில் தமிழ்த் தேசியத்தின் ஜயநாயக இதயத்தைப் பலப்படுத்தும்.

அவ்வாறு சிந்திக்கப்படவில்லை என்றால் தமிழ் டயஸ்பொறாவானது மேற்கத்தைய பல்லின, பல்கலாசார வாழ்க்கை முறைக்குள் படிப்படியாக கரைந்து செல்கின்ற, அதேசமயம், அந்தந்த நாடுகளின் அரசியல் வாதிகளால் தேர்தல் தேவைகளுக்காக கொண்டாடப்படும் வெறும் வாக்குவங்கிகளாக சுருங்கிப் போய்விடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனேடியத்தமிழர் சமூகம் வழங்கும்

# நட்சத்திர விழா 2016

தமிழர்களின் மொழி, கலை, பண்பாடு,
கலாச்சார விழுமிய வெளிப்பாட்டின் பெருவிழா

**ஆகஸ்ட் 6,7 சனி, ஞாயிறு இருநாட்களில்**

**MARKHAM FAIR GROUNDS** 10801 McCowan Road, Markham, Ontario

**மக்கள் மனங்கவரும் பல்வேறு நிகழ்ச்சிகளோடு
கனேடிய தமிழ்க் கலைஞர்களும், தமிழகக் கலைஞர்களும்
சங்கமிக்கும் மாபெரும் இசைச் சங்கமம்**

அனுசரணையாளர்கள்,
வணிகச்சாவடிகள் அமைக்கவிரும்புவோர்
தொடர்பு கொள்ளலாம்

**416 754 3223**

CTR கனேடிய தமிழ் வானொலி CANADIAN TAMIL RADIO

CANADIAN TAMIL ACADEMY

CANADIAN TAMILS SPORTS ASSOCIATION

அறிவகம் ARIVAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா மூர்த்தி எழுதும் 'இகுருவி ஐயாவும் நானும்

'சுத்திச் சுத்தி வந்தீஹ.."

அதுஒரு லோங் டிஸ்ரன்ஸ் கோல். எடுத்தேன். இகுருவி ஐயா! 'என்ன ஐயா? எங்க இருக்கிறியள்..?" என்றேன்.

'இப்ப நோர்வேயில நிக்கிறன்... இதுக்கு முன்னால இலங்கை போய் பிறகு தாய்லாந்து, சிங்கப்பூர், சுவிஸ் டென்மார்க், நோர்வேஎண்டு சுத்திக்கொண்டு இருக்கிறனடாப்பா.."

'நீங்க ஊர் ஊரா சுத்துறியள்... நாங்க ரூஜ்ரிவரிலை சுத்துறம்.."

'அதென்னடா...? சுத்துறம் எண்டுறாய்..?? ஓஹ்... ரூஜ்ரிவர் எலெக்சன்பற்றி சொல்லுறியோ? கடைசியில... பிரகல், நீதன், ரேமன் சோ இவயளுக்குள்ளதான் போட்டி வரப்போகுது என..?" எனக் கேட்டார்.

'ஓம் ஐயா... தமிழர்கள் அதிகமாக வாழும் தொகுதி எண்டு பெயரெடுத்த ரூஜ்ரிவர் தொகுதில வாற இடைத்தேர்தலில் போட்டி போடுற பெரும் கட்சி வேட்பாளர்கள் மூவரும் தமிழர்கள் எண்டு சொல்ல முடியாதபடி நாங்க காய் நகர்த்தி இருக்கிறம்.."

'நாங்க எண்டு சொல்லாத... உங்கட கொன்சவேடிவ் கட்சி எண்டு சொல்லு.."

'உண்மை. இந்த தொகுதியில கொன்சவேடிவ் கட்சி ஒரு தமிழ் உறுப்பினரைப் போட்டிருந்தா நல்லா இருந்திருக்கும். எலெக்சனின்;போது எல்லா ரூஜ்ரிவர் தமிழ் வாக்காளர்களும்(1) கட்சி அடிப்படையிலும், (2) யார் நல்ல வேட்பாளர் எண்ட அடிப்படையிலும் வாக்களிச்சிருக்கலாம். எப்பிடியும் தமிழர் ஒருவர் ரூஜ்ரிவர் எம்பிபி ஆகியும் வந்திருக்கலாம். ஆனா எங்கட ஆக்களின்ரை பிழையான காய்நகர்த்தல்களால் இப்ப இந்தப் போட்டிக்குள்ள ரெய்மன்ட் சோ வந்துட்டார். தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு இனி பலமுனையில சண்டை நடக்கும்.."


'அதால என்னடாப்பா?"

'ஒரு தமிழ் வேட்பாளருக்கு மட்டும்தான் வாக்களிப்போம் எண்டு நினைக்கிற தமிழ் ஆக்கள் இனி ரேமன் சோவுக்கு வாக்களிப்பதை தவிர்க்கப் போகினம். விளைவு? கனக்கத் தமிழ் ஆக்களை கொன்சவேடிவ் கட்சி இழக்கப்போகுது...!! அதே மாதிரி தமிழாக்கள் வெல்லுறது பிடிக்காத மற்ற இனத்தவர் கண்ணை மூடிக்கொண்டு ரேமன் சோவுக்கு வாக்களிப்பினம்.. இதால என்டிபிக்கும் லிபரலுக்கும் மொத்த வாக்கு எண்ணிக்கையில பாதிப்பு வரப்போகுது.."

'அட போடா... நாங்க இன மத வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையா கனேடியரா சிந்திக்க வேணுமடாப்பா.."

'ஹாஹா ஹாஹா... இன மத வேறுபாடுகளை மறந்தோ? நல்ல கதை உது... இனித்தான் கனபேர் 'தமிழர் தமிழருக்கு வாக்களியுங்கோ" எண்ட 'இனவாத பிரச்சாரத்தை" முன்னெடுக்கப் போகினம். ரேமன்சோவுக்கு ஆதரவாயிருக்கிற தமிழாக்களைப் பார்த்து 'தமிழின எதிரிகள்" எண்டும் ஒருசிலர் முத்திரை குத்தப்போயினம்.."

'நாங்க ஒரு சிறிய சமூகம்... அடாவடியா யோசிக்கக்கூடாது. நாங்களெல்லாம் கனேடியரா சிந்திக்க




வேணுமடாப்பா.."

'தமிழர் நாங்க எப்பவுமே கனேடியராத்தான் சிந்திக்கிறோம்... அதில என்ன சந்தேகம்.. அதேசமயம் தமிழராயும் சிந்திக்க வேணுமெல்லே..? நாங்கள் தனித்துவமான ஆக்கள்எண்டு மெயின்ஸ்ரீம் அரசியல்வாதியள் நினைக்கிறதாலதான் கொத்துரொட்டி போட்டுக்காட்டி, தோசை சுட்டுக்காட்டி, சீலை உடுத்திக்காட்டி, வேட்டி கட்டிக்காட்டி... கோயில், பொங்கல் அது இது எண்டு வந்து நிண்டு.. நாங்க தனித்துவம் மிக்க ஒரு சமூகம் எண்டு ஒப்பிணா சொல்லி — எங்களோட சுத்திச் சுத்தி வருகினம்... அதால.. அதை மதிச்சு, நாங்க எப்பவும் தனித்துவம் மிக்க கனேடிய தமிழ்ச் சமூகமாத்தான் எங்களைத் தொடர்ந்தும் காட்டவேணும்.."

'நீ இப்ப தனித்துவம் எண்டு எதை சொல்லுறாய்...? அடேய்... ரூஜ்ரிவரில தமிழர் அதிகம் இருக்கினம் எண்டதால தமிழர்தான் எலெக்சனில நிக்கவேணும் எண்டு இல்லையடாப்பா.. அப்பிடித்தான் கொன்சவேடிவ் பார்ட்டி நினைச்சிருக்கலாம்.."

'அப்பிடிப் பாத்தா கியூபெக்கில பிரெஞ்ச்காறர் அதிகம் இருக்கினம் எண்டதால கொன்சவேடிவ் பார்ட்டி கியூபெக்கில இங்கிலீசுக்காறரையே கொண்டுபோய் நிக்க வைக்கும்?? இல்லைத்தானே..! வெல்லக்கூடிய ஒரு பிரெஞ்சுக்காறனைத்தானே அது கியூபெக்கில நிப்பாட்டும்.." என்றேன் நான் குதர்க்கமாக. 'ஒரு தொகுதில வாழுற ஆக்களைக்கணக்கில எடுத்து வேட்பாளரை நிறுத்துறது எண்டது வழமையான விசயம். இங்கையும் அதைத்தான் செய்திருக்க வேணும்... உண்மையில கொன்சவேடிவ் கட்சின்ரை தமிழ் ஆலோசர்கள் அமுதா எண்ட உள்வீட்டுப் பிள்ளையை எம்பிபி ஆக்கலாம் எண்டுதான் காய் நகர்த்தினார்கள். அதுக்கு ஆதரவு கிட்டாமல் சறுக்கியதால இப்ப தமிழரல்லாத ஒருவரை கொண்டந்திருக்கினம். அவ்வளவுதான் கதை."

'பொருத்தமான வேட்பாளர் கிடைக்கேல்லயெண்டா வேற ஆளைத்தானேடாப்பா போடுவினம்.."

'ஐயா.. யோசிச்சுப் பாருங்கோ... கொன்சவேடிவ் கட்சி தமிழ் மக்களிட்டையிருந்து கட்சிக்கான ஆதரவை கேக்குது எண்டா தமிழ் மக்களும் பதிலுக்கு கொன்சவேடிவ் கட்சியிட்ட சமூகத்திற்கான ஆதரவைத்தான் கேப்பினம்!!! அப்பிடி... 'ஒரு நல்ல தமிழ் ஆளைப்போட்டு அவர் வெல்லப் பாடுபடுங்கோ" எண்டதுதான் கொன்சவேடிவ் கட்சியயைப் பாத்து தமிழ் மக்கள் ஒரு சமூகமாக் கேக்கிறது... அது கட்சியின்ரை கடமையெல்லே..?!! அப்படி ஒரு தமிழ் ஆள் கிடைக்கவே இல்லை எண்டு கொன்சவேடிவ் கட்சி சொன்னா அது தமிழ் மக்களுக்கு ஒரு அவமானம். தமிழர் நிண்டால் தோத்துப்போவார்.. ரேமன் சோ நிண்டால் வெல்லுவார் எண்டு கொன்சவேடிவ் கட்சியினர் நினைச்சது கொன்சவேடிவ் ஆதரவுத் தமிழருக்கு அவமானம். "

'பிறகு வாற நன்மையை மனதில வைத்து இப்ப ஒரு தியாகம் செய்யிறதில பிழை இல்லையடாப்பா. இந்த முறை ரேமன் தேர்தலில நிக்கட்டும்.. வெல்லட்டும்... பொதுத்தேர்தல் வரேக்கை வேற தமிழர்களைப் போடலாம். கட்சியெண்டு பாக்கேக்கை வெற்றிதான் முதல்தேர்வு" என்றார் இகுருவி ஐயா.

'பிறகு வரப்போற லாபத்துக்காகவோ?? ஓ... அப்பசரி எண்டு விட்டுவிடுவம்.. ஆனா அதைவிட மோசம் தங்கட வேட்பாளர் ரேமன் சோவின் தெரிவுதான் சரியெண்டு உட்கட்சித் தேர்தலை நிறுத்தினது..! அதுகுறித்து எந்த பகிரங்க விளக்கமும் இதுவரை இல்லை... இது ஒரு ஜனநாயக அவமதிப்பு எல்லே..!" என்று கடுப்பேற்றினேன் நான்.

'அப்ப என்னதான் செய்யவேணும் எண்டுறாய்" என்றார் இகுருவி ஐயா கோபத்துடன்.

'ரேமன் சோதான் வெல்லவேணும் எண்டு கட்சி நினைச்சதாயிருந்தா உட்கட்சித் தேர்தலைத் தள்ளி வைச்சிருக்கலாம்தானே? அதுக்குப் பிறகு ரேமன்சோ தன்ரை போட்டியாளர் தியோ அன்ரனியைவிட அதிக மெம்பேர்ஸ் சேர்க்க கட்சியே ரகசியமா உதவி செய்திருக்கலாம். அதுக்குப்பிறகு எலெக்சனை நடத்தி தியோவை ஜனநாயக முறையில தோற்கடிச்சிருக்கவேணும். அதைச் செய்யாமல் தியோ—அன்ரனியை இப்ப தியாகி—அன்ரனி ஆக்கிற்றுது கொன்சவேடிவ் கட்சி..!!" என்றேன்.

இகுருவி ஐயா மௌனமாக யோசித்தார். பிறகு 'உது கொன்சவேடிவ் கட்சியின் உட்கட்சி விவகாரம். மற்ற கட்சிக்காறர் அதுபற்றிக் கருத்துச் சொல்லுறது பிழை... எண்டாலும் சொல்லுறன்... கட்சித் தலைவராக பற்றிக் பிரவுண் செய்ததில பிழை இல்லை."என்றார்.

'ஓம்.... ஒரு கட்சியின்ரை தலைவருக்கு தன்ரை கட்சி வெல்லவேணும் எண்ட ஆசை நிச்சயம் இருக்கும்தான்.. ஆனா ஒண்டு... இந்த முறை ரேமன் சோ கட்டாயம் வெல்வார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்த சதுரங்க காய் நகர்வில் ரேமனை தமிழர் வென்று காட்டிவிட்டால்??? அதன் பிறகு கொன்சவேடிவ் கட்சியில் தமிழர்களின் பலம் குறைந்து போகவும் மற்றும் தமிழர்கள் கொன்சவேடிவ் கட்சிமேல் வைத்திருக்கும் நம்பிக்கையை இழந்துபோகவும் வாய்ப்பிருக்கின்றதல்லவா????"

இகுருவி ஐயா எதுவும் பேசவில்லை.

'ஐயா... நான் கொன்சவேடிவ் கட்சியின் ஆதரவாளனே தவிர கொன்சவேடிவ் கட்சிக்காறங்களின்ரை ஆதரவாளனா மட்டும் இருக்கவேணும் எண்டு இல்லை.. பற்றிக் பிரவுண் தாற தமிழ் ஆதரவு குறித்து யாருக்கும் அதிருப்தி இல்லை.. ஆனால் பற்றிக் பிரவுணுக்கு ஆலோசனை தருகின்ற தமிழர்கள் குறித்த அதிருப்தி உருவானால் அதற்குக் காரணம் பற்றிக் பிரவுண் அல்ல...! அட்வைஸ் பண்ணுறவை சரியா அட்வைஸ் பண்ணாட்டி எத்தினை சரிவுகள் வந்திருக்கு... பிழையான அட்வைஸால ஏற்பட்ட சரிவுக்கு எங்கட ராதிகாவின்ரை அரசியலையே எடுத்துப் பார்க்கலாம்."

'அவ வேண்டாம்.. பாவம்.. தமிழ்ப் பொம்பிளைப்பிள்ளை..!! அவவை இனி விட்டுவிடுவம்..." என்றார் இகுருவி ஐயா.

'அப்ப.. ஒரு உதாரணத்திற்கு வைகோவின்ரை அரசியல் சாணக்கியத்தை இதோட ஒப்பிட்டுப்பாருங்கோ... இந்தமுறையான் தமிழ்நாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலெக்சனில வை.கோ.வின்ரை அட்வைஸால, பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி சவுண்டு குடுத்துக் கொண்டிருந்த விஜயகாந்த் புஸ்வாணமாகிட்டார். விஜயகாந்த் இப்ப படத்தில நடிக்கப்போய் விட்டாராம்.. அப்பாடா.. இனி நல்ல சில கொமடி படங்கள் பாக்கலாம்." என்று கதையை மாற்றினேன்.

'போடா... நல்லவேளை.. கருணாநிதி எண்ட சுத்துமாத்து அரசியல்வாதி பதவிக்கு வரேல்ல.. ஈழத்தமிழருக்கு ஆதரவாயிருக்கத்தக்க ஜெயலலிதா பதவிக்கு வந்திட்டா எண்டுதானே எங்கட சில சனம் சொல்லுது.. ஆருக்கு தெரியும்... ஜெயலலிதா தமிழீழம் எடுத்துத் தந்தாலும் தரலாமெல்லே.." என்று தனகினார் இகுருவி ஐயா.

'ஐயோ.. ஐயோ... ஐயா..." என தலையில் அடித்துக் கொண்டேன் நான். 'கருணாநிதிக்கு ஒரு செக் வைக்கிறதுக்காகத்தான் ஈழ அரசியலை ஜெயலலிதா தன்ரை கையில் எடுத்தார். இப்ப கருணாநிதியைவிட தனக்குத்தான் தமிழக மக்களின் ஆதரவு இருக்கிறது என்பது தெரியவர தெரியவர— ஈழ ஆதரவை அவ நைஸா கைவிட்டுவிடுவா. ஜெயலலிதாவுக்கு சமயப்பற்று இருக்கும் அளவிற்கு மொழிப்பற்று இல்லை. ஆனால் கருணாநிதி அப்பிடி இல்லை... அவருக்கு மொழிப்பற்று மிக அதிகம்- மிக அதிகம்" என்றேன்.

'மொழிப்பற்று அவருக்கு இருக்கட்டும்... அதால மற்றவைக்கு என்ன பிரயோசனம்...?" என வேண்டுமென்றே கொழுவுவதுபோல மறுதலித்தார் இகுருவி ஐயா.


'உதென்ன கதை ஐயா... இண்டைக்கு 93 வயசையும் தாண்டியிருக்கும் கலைஞர் கருணாநிதி தமிழை நன்கு கற்றுணர்ந்த தமிழ் அரசியல்வாதி. அலங்காரத் தமிழ் என்று சொல்லக்கூடிய கவர்ச்சிகர மொழிநடையை சமகாலத்தில் உருவாக்கிய தமிழ் மேதை. பேச்சாலும் எழுத்தாலும் கோடிக்கணக்கான தமிழர்களை தன்பின்னால் கவர்ந்து வைத்திருந்த கலைஞர். அவருடைய இளமைக்காலத்தில— இன்றைய சீமான்போல — ஒரு தமிழ்த் தீவிரவாதியாக இருந்தவர்."

'சீமான் போலவோ??" என்றார் இகுருவி ஐயா நக்கலாக.

'ஓம் ஐயா.. ஓம். தன் அரசியல் ஆரம்ப காலத்தில் இந்தியாவில் இருந்து தமிழ்நாட்டைப் பிரிக்கும் தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கை, ஈவேரா பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை, கம்யூனிஸக் கொள்கை போன்றதீவிரகோரிக்கைகளை வைத்து இயங்கியவர்தான் கலைஞர்.. தமிழீழக் கோரிக்கையின் ஆரம்பகாலங்களில், வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றிய காலங்களில் ஈழத்தமிழருக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஒரு பெரும் ஆதரவு சக்தியாக அவர் இருந்தார்."

'அதெல்லாம் சரிதான்..."என இடைமறித்தார் இகுருவி ஐயா.

'கேளுங்கோ... ஆரம்ப காலத்தில் ஈழப்போராளிகள் அமைப்புக்கள் தமிழகத்தில் வளர அவர் செய்த உதவிகள் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழகத்திற்கு வந்த அகதிகளுக்கு கல்வி, போராளி அமைப்புக்களுக்கு உதவி என் அவர் செய்தவற்றைக்கூட ஈழத்தமிழர்கள் நாங்கள் சுலபமாக மறந்துவிட முடியாது. இலங்கையில் இருந்து அமைதிப்படை திரும்பியபோது தமிழக முதல்வராக அதிகாரத்தில் இருந்தும் அமைதிப்படையை



வரவேற்க கருணாநிதி மறுத்தது எவ்வளவு பெரிய விஷயம்."

'அதெல்லாம் பழங்கதை.."

'அதாலதான் சொல்லுறன்... ஈழத்தமிழ்ப் போராளிகளின் சகோதர யுத்தத்தை கடுமையாக கண்டித்தவர் கருணாநிதி.. எண்டாலும் எந்த ஈழப்போராளி அமைப்பின் நடவடிக்கைகளையும் அவர் தடுத்தவரும் அல்லர்! கடைசியில் ஈழத்தமிழர்களைக் காரணம் காட்டித்தான் கலைஞர் கருணாநிதியின் ஆட்சிமத்திய அரசால் கலைக்கப்பட்டது! ஒருகாலத்தில் ஜெயலலிதா இரும்புக்கரம் கொண்டு ஈழத்தமிழர்களை அடக்கி வைத்ததை நாம் இப்போது மறந்துவிட்டோம்.. ஆனால் ஏனோ இப்ப கருணாநிதியைத் திட்டுகிறோம். கருணாநிதி விரும்பியதால்தான் — அவரது ஆட்சிக் காலத்தில்தான் — சகல ஈழப்போராளி அமைப்புக்களும் தமிழகத்தில் சுதந்திரமாக இயங்கின என்பதை இன்று யாராவது மறுக்க முடியுமா?"


'போடாவிசர்க்கதை கதைக்கிறாய்.. கலைஞர் நினைத்திருந்தால் முள்ளிவாய்க்கால் சண்டையை உடனே நிறுத்தியிருக்கலாம்."

'முள்ளிவாய்க்காலில் வைத்து விடுதலைப்புலிகள் அமைப்பை நிர்மூலமாக்கிக் காணாமல் போகவைக்கும் திட்டம் அமெரிக்காவின் அனுசரணையுடன், இந்திய மத்திய அரசின் நேரடிக் கண்காணிப்பில் ஐரோப்பா, சீனா, பாகிஸ்தானின் ஆசீர்வாதத்துடன் மகிந்த—கோத்தா சகோதரர்களைக் கருவிகளாக வைத்து செய்யப்பட்ட விடயம்..!! விடுதலைப்புலிகளை அழிக்கும் அந்ததிட்டத்தைகருணாநிதி அல்ல எந்தக் கொம்பனும் தடுத்து நிறுத்திவிட முடியாத நிலைமைதான் அப்ப இருந்தது. இன்னும் சரியாச் சொன்னா யோகர் சுவாமி சொன்ன மாதிரி 'எப்பவோ முடிஞ்சுபோன காரியம்" அது. ஒருவேளை ஜெயலலிதா இருந்திருந்தாலும்.. ஏன் எம்ஜியார் இருந்திருந்தாலும்கூட போராட்டம் இப்பிடித்தான் முடிஞ் சிருக்கும்.."

'குழப்பிறாயடாப்பா.."

ஒரு குட்டிக்கதை சொல்லி திருப்பியும் அவரைக் குழப்பினேன். 'எப்பவோ படிச்ச பொலிடிகல் வன்லைனர் ஒண்டை சொல்லி முடிக்கிறன் ஐயா: அரசியல் என்பது பசியோடிருக்கிற மூன்று ஓநாய்களும் ஒரு ஆட்டுக்குட்டியும் ஒன்றாக நின்று இரவுச்சாப்பாடு எது எனத் தீர்மானிக்கிற விடயம்.."







இகுருவி நிறுவனத்தின் வெளியீடாக வல்வை.ந.அனந்தராஜ் அவர்களின் இரு கல்வியியல் நூல்களின் வெளியீட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு தாயகத்தில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் கல்லூரி மாணவர்களின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் நடைபெறவுள்ளது.

முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், உலக வங்கியின் நிபுணத்துவ ஆலோசகரும், ஆறுதல் நிறுவனத்தின் நிபுணத்துவ ஆலோகருமாகாகக் கடமையாற்றி வரும், திரு.ந.அனந்தராஜ் அவர்களின் "பாடசாலை நூர்லக முகாமைத்துவம்", தற்போதைய கல்வித் தர வீழ்சிக்கான காரணங்களை ஆய்வு ரீதியாக இனங்காணப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளை உள்ளடக்கியதாக எழுதப் பட்ட "கல்வி நிர்வாக முறைமைகள்" என்ற இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.நந்தகுமார் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுக்கான வரவேற்புரையை உடுபபிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் அதிபர் திரு.எஸ். கிருஸ்ணகுமார் நிகழ்த்தவுள்ளார். இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின செயலாளர் திரு.ப.இரவீந்திரன் அவர்கள் கலந்து கொள்கின்றார். முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறையின் செயலாளரும், ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு.சுந்தரம் டிவகலாலா அவர்கள் நூலின் வெளியீட்டு உரையையையும்நூலக முகாமைத் துவத்திற்கான நயவுரையை பிரபல எழுத்தாளர் திரு.சி.உதயகுமார் (சமரபாகு சீனாஉதயன்) அவர்களும், கல்வி நிர்வாக முறைமைகள் நூலுக்கான நயவுரையை பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களும்;. நூல்களுக் கான ஏற்புரையை நூல்களின் ஆசிரியர் திரு.ந.அனந்தராஜ் அவர்களும் நிகழ்த்த உள்ளனர

**இகுருவி 2015 ஆம் ஆண்டில் "வல்வைப் புயல்" மற்றும் "சமர் கண்ட முல்லைத்தீவு" ஆகிய இரண்டு நூல்களையும், 2016 ஆம் ஆண்டில் "ஒரு பிரதமர் உருவானார்" என்ற புகைப்பட இதழியல் நூலையும் வெளியிட்டு அமோக ஆதரவைப் பெற்றதைத் தொடர்ந்து தாயகத்தில் தமிழ் மாணவர்களின் இழந்த கல்வியை மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு ஆக்கப்பட்ட "கல்வி நிர்வாக முறைமைகள்" "பாடசாலை நுர்லக முகாமைத்துவம்" என்ற இரு நூல்களை இகுருவி தனது 4 ஆவது 5 வது வெளியீடாக வெளியிட்டு கல்விச் சமுகத்திற்கக் காணிக்கை யாக்குகின்றது. இந்நூல் திரு.வல்வை.ந.அனந்தராஜ் அவர்களின் 21 ஆவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின், இழந்த கல்வியை மீளப் பெறுவோமா?

ந.அனந்தராஜ்
B.A.(Hons.),M.A. Dip-In-Edu., Dip-In-Journalism , SLPS,SLEAS




இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக தமிழ் மொழி மூலப்பாடசாலை களின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் கற்றல்—கற்பித்தல் செயற்பாடுகள் பல்வேறு விமர்சனங் களுக்கு ஆளாகி வரும் நிலையில் இத்தகைய விமர்சனங்களில் இருந்து எவ்வாறு பாடசாலைகள் மீண்டெள முடியும்?

- யாழ்மாவட்டம் பரீட்சைப் பெறுபேற்றில் இருபத்தியேழாவது மாவட்டமாக வந்துவிட்டது
- கிளிநொச்சி வலயம் 96க்கும், தீவகம் 97 ஆவது நிலைக்கும் தள்ளப்பட்டுவிட்டது.
- கிழக்கு மாகாணம் எட்டாவதாகவும், வடமாகாணம் ஒன்பதாவதாகவும்; உள்ளது.
- கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மத்தி தவிர்ந்த ஏனைய வலயங்கள் மிகவும் குறைந்தஅடைவு நிலையைக் கொண்டுள்ளன.
- தமிழ் மொழிப்பாடத்திலான பெறுபேறுகளில் 21 சதவிகித மாணவர்கள் சித்திபெறத்தவறி விட்டனர்.
- உயர்தர வகுப்பில் கணிதம்,விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு மாணவர்கள் சேரும் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து கொண்டு போகின்றது.
- எல்லாப் பாடங்களிலும் சித்தியடையத் தவறுபவர்களின் எண்ணிக்கை மற்றைய மாவட்டங்களை விட அதிகம் என்பன போன்ற விமர்சனங்கள் அண்மைக்காலமாக கல்வியளர்களினாலும், ஊடகங்களினாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தின் கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சையின் பெறுபேறுகளில் 2005 — 2008 வரை யான ஆண்டுகளில் வடமாகாணம் முதல் 5 இடங்களுக்குள் காணப்பட்டது. 2009 ம் ஆண்டு வடமாகாணம் 2 வது இடத்திற்கு வந்துள்ளபோதும், 2009 ம் ஆண்டிற்குப் பின் யுத்தம் முடிவடைந்த பின்னர், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. 2014,2015 ஆம் ஆண்டுகளில் வடமாகாணம் 9வது இடத்தில் உள்ளது.இந்த நிலையில் மாவட்ட ரீதியாகப் பார்க்கும் போது இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும், வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களே கல்வி அடைவில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

| க.பொ.த.(சா/த) பரீட்சை 2014 | | க.பொ.த. (சா/த) பரீட்சை 2015 | |
|---|---|---|---|
| மாவட்டம் | நிலை | மாவட்டம் | நிலை |
| மன்னார் | 2 | மன்னார் | 10 |
| வவுனியா | 7 | வவுனியா | 16 |
| யாழ்ப்பாணம் | 20 | யாழ்ப்பாணம் | 21 |
| முல்லைத்தீவு | 24 | முல்லைத்தீவு | 24 |
| கிளிநொச்சி | 25 | கிளிநொச்சி | 25 |

இலங்கையில் உள்ள 98 வலயங்களில் 2015 ஆம் ஆண்டு பெறுபேறுகளில் வடமாகாணத்தில் உள்ள வலயங்கள் எல்லாமே மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுவதைப் பின்வரும் அட்டவணை யில் பார்க்கலாம்.

| க.பொ.த.(சா/த) பரீட்சை 2014 | | க.பொ.த.(சா/த) பரீட்சை 2015 | |
|---|---|---|---|
| வலயம் | நிலை | வலயம் | நிலை |
| யாழ்ப்பாணம் | 21 | யாழ்ப்பாணம் | 27 |
| மன்னார் | 6 | மன்னார் | 35 |
| வவுனியா(தெ) | 13 | வவுனியா(தெ) | 57 |
| வடமராட்சி | 46 | வடமராட்சி | 60 |
| மடு | 53 | மடு | 61 |
| வலிகாமம் | 83 | வலிகாமம் | 84 |
| தென்மராட்சி | 62 | தென்மராட்சி | 85 |
| வவுனியா (வ) | 92 | வவுனியா (வ) | 90 |
| முல்லைத்தீவு | 84 | முல்லைத்தீவு | 93 |
| துனுக்காய் | 94 | துனுக்காய் | 94 |
| கிளிநொச்சி | 93 | கிளிநொச்சி | 96 |
| தீவகம் | 97 | தீவகம் | 97 |

இவ்வாறான பின்னடைவுகளுக்கு யார் காரணம்? மாணவர்களின் அக்கறையின்மையா? அல்லது பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் அசமந்தமா? அல்லது வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதி மற்றும் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், பாடரீதியாக நேரடியாகப்பாடசாலைகளுடன் தொடர்புகளை வைத்திருக்கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டல் மற்றும் வினைத்திறன் மிக்க மேற்பார்வைகள் இன்மையா? என்பன போன்ற வினாக்களுக்கு எத்தகைய நியாயங்களைக் கூறமுடியும்.?

ஒரு தடவை நான் பாடசாலை மேற்பார்வைக்காகச் சென்றபொழுது,அவதானித்த ஒரு சம்பவம்:

வடமாகாணத்தில் உள்ள 1யுடீ பாடசாலை ஒன்றில் பல மாதங்களுக்கு மேலாக விஞ்ஞான செய்முறைகளைச் செய்யாதமை மட்டுமல்ல, அந்த மாணவர்களை ஆய்வு கூடத்திற்கு ஆசிரியர் அழைத்துச் செல்லாததற்கு அவர் கூறிய காரணம்தான் வேடிக்கையாக இருந்தது. “ஆய்வு கூடத்திற்குள் நிறைய எலிகள் இருப்பதால், உபகரணங்களை வைத்து எடுக்கமுடியவில்லை அதனால் ஆய்வு கூட்ததிற்கு மாணவர்களை அழைத்துச் செல்லவில்லைஞ்.” என்று அந்த ஆசிரியை கூறிவந்ததையே பாடசாலைக்கு வருகை தருகின்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட பெற்றோர்,பழைய மாணவர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் அனைவரிடமும் கூறிக் கொண்டு வந்துள்ளார். அவரது அந்த வார்த்தைகளை நம்பியவர்களாகவே கல்வி அதிகாரிகளும் தமது மேற்பார்வைகளையும் செய்து வந்திருக்கின்றனர்.

அவ்வாறான ஒரு 1AB பாட சாலையில் கடந்த பல வருடங்களாக 30 விழுக்காட்டிற்கும் குறைவான மாணவர்களே விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்ததால், அந்தப் பாடசாலை பாரம்பரியமாக விஞ் ஞானப் பிரிவைக் கொண்டிருந்த போதிலும், விஞ்ஞான பாடத்தில் தகைமை பெற்ற மாணவர்கள் இல்லாத காரணத்தினால், க.பொ.த.உயர்தரத்தில், விஞ்ஞானப் பிரிவைத் தொடர்ந்தும் தக்கவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுஞ்.. இதேபோன்று ஏனைய பல பாடசாலைகளில் மாணவர்களின் கற்றலுக்காகப் பயன்படுத்தவேண்டிய உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள் என்பன பயன்படுத்தப்படாமலேயே பூட்டி வைத்திருக்கப்பட்டிருக்கின்றன.

அதேநேரம், அவ்வாறான பாட சாலைகளுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விஞ்ஞான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர், குழுமேற்பார்வை மற்றும் வலயமட்டக் கண்காணிப்புக் குழு (Zonal Monitoring Panel- ZMP)என்று எத்தனை தடவைகள் வருகை தந்திருப்பார்கள்? அவர்கள் ஆய்வுகூடம், அலுவலகங்கள்;, நூலகங்கள், வகுப்பறைகள் என்பவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யமலேயே தமது குழு மேற்பார்வை களை முடித்துச் சென்றிருக்கின்றார்களா? அதேபோன்று ஆசிரியர்களின் சேவைக்காலப் பயிற்சிக் காகவும் பாடசாலைகளின் உள்ளகப் பயிற்சிக்காகவும் எவ்வளவு பணத்தைச் செலவிட்டு அந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன?

அவற்றைவிடத், தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டுப் பிள்ளையின் வளமான எதிர்காலத் தை நோக்கித் தவம் இருக்கின்ற பெற்றோர்கள், மற்றும் பழைய மாணவர்கள் கூட ஏன் இவற்றைப் பார்த்து உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளவில்லை? அவர்களுக்குச் சரியான நேரத்தில் சரியான வற்றைச் செய்யமுடியாத அளவுக்கு வேறு ஏதாவது அச்சுறுத்தல்கள் உள்ளனவா?

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையில் தமிழ் மக்களுக்கும், இந்திய, இலங்கை அரசுகளின் படைகளுக்கும் இடையிலான யுத்தம் மூண்டிருந்த காலத்தில் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியானது மிக உயர்ந்த நிலையில் இருந்தது. ஆனால் தற்பொழுது கடந்த சில ஆண்டுகளாக வடக்கும், கிழக்கும் 8 ஆம், 9 ஆம் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது என்பது துர்ப்பாக்கியமானது. 8க்கும், 9க்கும் இடையில் எந்த மாகாணம் 9 ஆம் இடத்தைக் கைப்பற்றுவது என்பதில்தான் இரண்டு மாகாணங் களுக்கும் இடையில் போட்டி நிலவுகின்றது போல் தெரிகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகம் வடக்கு கிழக்கின் பெரும்பான்மையான பகுதிகளில் இருந்தபொழுது, அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டதால், அன்று கல்வி அபிவிருத்தி உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை சிங்கள மொழிபேசும் அதிகாரிகளே இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர். அன்று இருந்தது போல் இன்று ஏன் இல்லை என்ற ஒரு கருத்துக் கணிப்பை எடுத்தபொழுது, பின்வரும் கருத்துக்கள் பொதுமக்களாலும்,பொது அமைப்புக்களாலும், பெயர் குறிப்பிட விரும்பாத கல்வி அதிகாரிகளினாலும் முன்வைக்கப்பட்டன. இங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் எழுமாற்றாகவே பெறப்பட்ட பொழுது, தெரிவு செய்யப்பட்ட கல்வித் துறைசார்ந்த அறிஞர்களிடம், “தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் குறிப்பாகப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தியானது உச்ச நிலையில் இருந்தமைக்கான காரணங்கள் எவை? என்ற வினாவைக் கொண்ட வினாக்கொத்து வழங்கித் திரட்டப்பட்ட தகவல்களில் பெரும்பாலானோர் தெரிவித்த கருத்துக்கள் பின்வருமாறு இருந்தது. அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

1. புலிகளின் இறுக்கமான நிர்வாக நடவடிக்கைகள் காரணமாக போதை வஸ்து பாவனை, மதுபானசாலைகள், பாலியல் வக்கிரங்கள் என்பன கட்டுப்படுத்தப் பட்டிருந்தன. இதனால் இன்று காணப்படுவது போல் பாடசாலைகளில் இவை இல்லாதிருந்தன. புலிகளின் எச்சரிக்கையையும் மீறி எவராவது போதை வஸ்து கடத்தலிலோ அல்லது பெண்களின் மீதான பாலியல் வக்கிரங்களைப் புரிந்தாலோ அவர்ளுக்கு உடனடியாக மரண தண்டனை வழங்கப்பட்டதால், இத்தகைய தீய செயல்களில் எவருமே ஈடுபட முன்வரவில்லை.
2. பெண்களுக்கான 100% பாதுகாப்பு இருந்தது. இது பற்றி ஒரு பெற்றார் கருத்துக் கூறும் பொழுது, பாரதி கண்ட கனவு போல்.. மகாத்மா காந்தி தெரிவித்தது போல் “எப்பொழுது தன்னந்தனியளாக ஒரு பெண் நடுநிசியில் அச்சமின்றி நடந்து போகின்றாளோ,அப்பொழுது தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கருதமுடியும்” என்பதைக் குறிப்பிட்டு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், நள்ளிரவில் கூட இளம் பெண்கள் சுதந்திரமாக நடமாடித் திரிந்ததை அவர் பெருமையுடன் நினைவு கூறினார். இந்தச் சூழல் கற்பதற்கான ஒரு நல்ல மனோநிலையையும் உருவாக்கியிருந்தது.
3. தமது இயக்கத்திற்கு ஆட்களைச் சேர்க்கவேண்டிய நிலையில் விடுதலைப் புலிகள் இருந்தபோதும்,கல்வி கற்பதற்கான தடைகளையோ அல்லது பாடசாலைகளின் மீதான கட்டுப்பாடுகளையோ விதிக்கவில்லை.பாடசாலைகளை சுயமாக இயங்கச் செய்வதற்கான அனைத்து வசதிகளையும் செய்திருந்தனர்.
4. பாடசாலைகளில் கற்றலுக்கான உள்ளீடுகள் பொருளாதாரத் தடைகளினால் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலும், ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகள் உன்னத நிலையிலேயே இருந்தன. வரம்பு மீறிச் செயற்படுகின்ற அல்லது தமது கடமைகளைச் சரிவரச் செய்யாது காலத்தைக் கடத்துகின்ற அதிபர், ஆசிரியர்கள் மீதான கண்காணிப்பு எப்பொழுதும் இருந்தது. இவ்வாறானவர்கள் மீது சில சந்தர்ப்பங்களில் விடுதலைப்புலிகள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் கூட எடுத்திருக்கின்றார்கள்.

5. கல்வி அபிவிருத்தி தொடர்பாக செயலமர்வுகள், வழிகாட்டல் கருத்தரங்குகள், பயிற்சிப் பரீட்சைகள் என்பவற்றை நடத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் "தமிழீழ கல்விக் கழகம்" "கல்வி மேம்பாட்டுப் பேரவை" போன்ற கல்விசார் அமைப்புக்களை உருவாக்கி அவற்றில் புகழ் பெற்ற கல்வியாளர்களையும், கல்வி அதிகாரிகளையும், ஆற்றல் உள்ள அதிபர், ஆசிரியர்களையும் இணைத்து; பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

6. மிகச் சிறந்த பெறுபேறு களையும், கல்வியில் உயர்ந்த அடைவு மட்டத்தையும் காட்டுகின்ற மாணவர்களையும், ஆசிரியர்களையும், அதிபர்களையும் ஊக்குவிக்கும் வகையில் வருடா வருடம் பாராட்டு விழாக்களையும், விருது வழங்கும் நிகழ்வுகளையும் ஒழுங்கு செய்து வந்ததால் மாணவர்களும், ஆசிரியர்களும் ஊக்குவிக்கப்பட்டனர். அன்று அவர்களுடைய நல்லாசிரியர், நல்ல அதிபர் தெரிவுகள் சரியான முறையில் அகவயத் தன்மையற்ற முறையில் இருந்ததால் அவற்றை எல்லோருமே ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

7. பாடசாலை நேரங்களிலும் கிழமை நாட்களில் காலையிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்குவதைத் தடை செய்ததுடன், அவற்றின் செயற்பாடுகளின் மீது பலமான கட்டுப்பாடு களையும் விதித்திருந்ததால், பாடசாலைக் கல்விக்கு அனைத்துத் தரப்பினராலும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

8. மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் படைப்பாற்றலையும் வாசிப்புத் திறனையும் மேம்படுத் துவதற்காக மாணவர்களுக்காக "சாளரம்" அறிவியல் சஞ்சிகையையும், ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை மேம்படுத்துவதற்காக "விளக்கு" என்ற சஞ்சிகையையும் வெளியிட்டு வந்தனர். இதனூடாக மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் வாசிப்புத் திறன் மேம்படுத்தப் பட்டுவந்தது.

9. புலம்பெயர்ந்த ஐரோப்பிய நாடுகளில் இடம்பெயர்ந்து வேற்று மொழிகளில் கற்கும் தமிழ் பிள்ளைகளின் தமிழ் மொழி அறிவை வளர்ப்பதற்கு உதவும் வகையில் "தமிழ் வழி வளர்நிலை1, தமிழ் வழி வளர்நிலை2" போன்ற தரமான நூல்களையும்,பயிற்சி நூல் களையும், இறுவட்டுக்களையும் வெளியிட்டு புலம்பெயர்ந்த மாணவர்கள் மத்தியிலும் தமிழ் மொழிக் கல்வியை வளர்க்க உதவி செய்தமை.இதற்காக இங்கிருந்து ஐரோப்பிய நாடு களுக்குச் சில கல்வியாளர்களைத் தமது செலவில் அனுப்பி, அங்குள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளையும் வழங்கியிருந்தனர்.

10. அவர்களால் கட்டாயக் கல்வித் திட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதனால் 5 வயது தொடக்கம் 14 வயது வரையான பிள்ளைகள் எவரும் பாடசாலை செல்லாது இருந்ததில்லை.

11. தமிழ் மொழித்திறன் போட்டிகளை நடத்தி பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி தமிழ் மொழிக் கல்வியை ஊக்குவித்தனர்.

12. ஆசிரியர் பற்றாக்குறை மோசமாக நிலவிய பல கிராமப்புறப் பாடசாலைகளில் "தமிழீழ கல்விக்கழகத்தினூடாக ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு கற்பித்தல் பயிற்சிகளும் வழங்கப் பட்டு அதன்பின்னர் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர். இதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கிராமப்புறங்களிலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

13. தற்போதைய கல்வி முறையில் எங்கு பார்த்தாலும் அரசியல்வாதிகளின் மேலாதிக்கம் இருந்து வருவதால் அவர்களின் விருப்பங்களுக்கோ அல்லது அச்சுறுத்தல்களுக்கோ கட்டுப்படவேண்டிய நிலையில் கல்விச் சமூகம் இருந்து வருகின்றது. ஆனால் இன்று கல்வியில் அரசியல்வாதிகளின் தலையீடுகளும், ஆதிக்கமும் மேலோங்கி நிற்பதால் கல்வித்துறை சார்ந்த அதிகாரிகள் சுதந்திரமாகச் செயற்பட முடியாதபடி அவர்களது கரங்கள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளது. இதனால், இன்றைய கல்வித் தரவீழ்ச்சிக்கு அரசியல்வாதிகளே பொறுப்புக் கூறுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆனால், விடுதலைப் புலிகளின் காலத்தில் அரசியல்வாதிகள் எவரினதும் தேவையற்ற தலையீடுகள்; இல்லாத ஒரு ஆரோக்கியமான சூழல் நிலவியது. இதனால், பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் சுயமாகச் சிந்தித்து முடிவெடுத்ததால் ஆசிரியர் இடமாற்றங்கள், நியமனங்கள், வளப்பங்கீடுகள் மற்றும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன நியாயமான முறையில் இருந்ததுடன், அவை எல்லாமே வெளிப்படைத் தன்மையுடையனவாகவும் இருந்தன.

14. பாடசாலைகள், கல்வித் திணைக்களங்கள், போன்றவற்றில் எவரேனும் நிதிக் கையாடல்களிலோ அல்லது இலஞ்சம், பாலியல் போன்ற மோசடி நடவடிக்கைகளிலோ ஈடுபட முடியாத அளவுக்கு, விடுதலைப் புலிகளின் கல்விப் பிரிவு விழிப்புடன் இருந்தது. இதனால், கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி முழுவதும் பிள்ளைகளுக்கே பயன்படுத்தப்பட்டதுடன், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பாலியல் துஸ்பிரயோகங்களோ, வாள்வெட்டுச் சம்பவங்களோ எதுவும் நடைபெறவில்லை. அவர்களுடைய காலத்தில் இத்தகைய துர் நடத்தைகளில் எவரேனும் ஈடுபட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளை எல்லோருமே அறிந்திருந்தனர்.

இவ்வாறு ஒரு சாதகமான

> புலம் பெயர்ந்த உறவுகளும், அவர்களால் நடத்தப்படுகின்ற சமூக சேவை அமைப்புக்களும் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்விப் பெறுபேற்றை உயர்த்துவதற்கான தமது பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்.

சூழ்நிலை நிலவிய காலத்தில் இருந்த கல்வித்தரமானது, 2009 யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து ஒரு பெரும் சரிவை ஏன் சந்தித்து வருகின்றது என்பதற்கான காரணங்களை அறிந்து அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டிய பொறுப்பு இன்றைய கல்விச் சமூகத்திடம் உள்ளது.வடமாகாணத்தில் மாகாண சபை நிர்வாகமானது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பொழுது, அன்றைய யாழ்ப்பாணப் பத்திரிகைகள் சில "தமிழீழ அரசு மலர்ந்தது" என்று தலைப்புச் செய்தியைப் பிரசுரித்தபொழுது, தமிழ் மக்களும் ஏதோ சுதந்திரம் கிடைத்ததாகவே குதூகலித்து மகிழ்ந்தனர்.

அன்று தமிழீழவிடுதலைப் புலிகளும் வடக்கு கிழக்கு முழுவதும் ஒருஅரசையேகொண்டிருந்தபொழுது, அவர்களுடைய நிர்வாகத்தில் சிறப்பாகத் தமது கடமைகளைச் செய்த அதிபர் ஆசிரியர்கள், கல்வி அலுவலர்களினால்; தற்பொழுது, ஏன் அவ்வாறு செய்யமுடியாதுள்ளது என்ற கேள்வியையும் எழுப்பி யுள்ளனர். அந்த வகையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் போன்று இன்றுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளினால், ஏன் செய்ய முடியாமல் இருக்கின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளமையும் நியாயமானதுதானே.!

> தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகம் வடக்கு கிழக்கின் பெரும்பான்மையான பகுதிகளில் இருந்தபொழுது, அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைத்து அதிகாரிகளும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டதால், அன்று கல்வி அபிவிருத்தி உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை சிங்கள மொழிபேசும் அதிகாரிகளே இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறான பாரிய பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருந்த வேளையில் அவற்றிற்கான பரிகார நடவடிக்கைகள் பற்றி அரசியல் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் வட மாகாணசபையோ அல்லது கல்வி அமைச்சோ, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களோ சிந்திக்காது இருந்த நிலையில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகத் தற்போது கடமையாற்றிவரும், திரு.இ.இரவீந்திரன் அவர்கள் வட மாகாணக் கல்வி நிலை தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்காக இலண்டனுக்கு அழைக்கப்பட்டிருந்த பொழுது, அங்கே அவர் ஆற்றிய உரை, புலம் பெயர்ந்த தமிழ் மக்களையும் சிந்திக்க வைத்துள்ளது. எதிர்காலத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பாக அவரால் எடுக்கப்படுகின்ற முயற்சிகள் அனைத்துக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக பிரித்தானியாவில் இயங்கும் "வடஇலங்கையின் கல்வி அபிவிருத்தி அமையம்" (Education Development of North Sri Lanka Organisation – EDNS) என்ற அமைப்பைச் சேர்ந்த புலம் பெயர்ந்த உறவுகள் உறுதியளித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக கல்வி அபிவிருத்தியில் பல ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்து வரும் இரு பெரும் நிறுவனங்களான ஆறுதல் நிறுவனம், மற்றும் தொண்வீடைமானாறு வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன், வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடியபொழுது, துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டிய குறுங்காலச் செயல்திட்டங்களைத் தயாரித்து வழங்குவதுடன், ஆறுதல் நிறுவனத்தின் வளவாளர்களினால், தயாரித்து வழங்கப்படும் கற்றல் ஊக்கிகளை (Stimulation Papers) அனைத்துப் பாடசாலைகளும் பெற்றுப் பயனடையவேண்டும் என்றும் அதிபர்களைக் கேட்டிருக்கின்றார். ஒரு ஆசிரியராகத், தனது சேவையை ஆற்றத் தொடங்கி, கல்விச் செயலாளர் என்ற பதவிக்கு படிப்படியாக உயர்ந்து வந்ததால், தான் பெற்றுக் கொண்ட அனுபவம் காரணமாக வடமாகாண மாணவர்களின் கல்விப் பின்னவடைவு தொடர்பான வலியை உணர்ந்திருக்கின்றார். அந்த வகையில், மாணவர்களின் கல்விப் பின்னடைவுக்கான காரணங்களை இனங்கண்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்காகக் களத்தில் இறங்கியுள்ள செயலாளரின் கரங்களைத் தாயகத்தில் உள்ளவர்கள் மட்டுமல்லாது, புலம்பெயர்ந்து வாழும் கல்விச் சமூகமும் ஒன்றிணைந்து பலப்படுத்திக் கொள்ளவேண்டும். அவரது முயற்சிகள் வெற்றி பெற்றால் 2016 ஆம் ஆண்டில் வடமாகாணம் மீண்டும் தனது இழந்த நிலையை அடைந்து கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அதேபோன்று கிழக்கு மாகாணத்தின் செயலாளர் ஒரு சிங்கள இனத்தவராக இருந்த போதிலும் மூவின மாணவர்களும் சமமான தொகையில் கல்வி கற்கும் ஒரு மாகாணம் என்ற வகையில், வடக்கு மாகாணத்தைப் பின்பற்றிக் கல்விப் பெறுபேற்றை உயர்த் முன்வரவேண்டும்.

எனவே எமது பாடசாலைக் கல்வி நிர்வாக முறைமையில் வாய்ப்பாக உள்ள பலங்களையும், கிடைக்கின்ற வாய்ப்புக்களையும், பலவீனங்களையும், அச்சுறுத்தல் களையும் பகுப்பாய்வு செய்து பார்க்கும் பொழுது சரியானவற்றைச் சரியான நேரத்தில் செய்து முடிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகள் ஒவ்வொருவராலும் இனங்காணப்படவேண்டும். அவற்றைக்கொண்டு குறுங்காலச் செயல்திட்டங்களை வகுத்து துரிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது, ஒரு பாடசாலையையோ அல்லது ஒரு வீட்டையோ அல்லது ஒரு நிறுவனத்தையோ மிகக் குறுகிய காலத்தினுள் உயர் நிலைக்குக் கொண்டு வரலாம்.

இத்தகையஒருபின்னணியில்புலம் பெயர்ந்த உறவுகளும்,அவர்களால் நடத்தப்படுகின்ற சமூகசேவை அமைப்புக்களும் வடக்குக் கிழக்கு மாகாணத்தின் கல்விப் பெறுபேற்றை உயர்த்துவதற்கான தமது பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும். அதேவேளை தாயகப் பிரதசங்களில் கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படும் தொண்டைமானாறு வெளிக்களநிலையம் ஊடாகஉயர்தரக் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தல். ஆறுதல் நிறுவனத்தின் ஊடாக, கற்றல் ஊக்கிகளை வழங்குதல், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சிகளை வழங்குதல், செயற்பாட்டு நூல்களை வெளியிடுதல், மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களின் வாண்மை விருத்திக்காக "ஆறுதல்" சஞ்சிகை, முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளித் தாய்மார்களுக்காக "வடலிகள்" சஞ்சிகை ஆகியவற்றை வெளியிடுதல் போன்ற கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதுடன், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார முயற்சிகள், போராளிகளின் மறுவாழ்வு, உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆலோசனை வழிகாட்டல் மற்றும் வீட்டுக்கு ஒரு மரத்தை நடுதல் என்ற வேலைத் திட்டங்களினூடாக மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவே வியாதி, உணவே மருந்து

கிழக்குப் பல்கலைக்கழக, சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட பீடாதிபதியும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணருமான, வைத்திய கலாநிதி K.T. சுந்தரேசன் உடனான மருத்துவ நேர்காணல்.

### நீரிழிவு: நீங்கள் அறிய வேண்டியவை

உலகில் 347 மில்லியன் மக்களும், இலங்கையில் 2 மில்லியன் மக்களும் நீரிழிவினால் (Diabetes) பீடிக்கப்பட்டுள்ளதோடு, இலங்கையில் 2 மில்லியன் மக்கள் முன் நீரிழிவினால் (Prediabetes) பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த 10 ஆண்டுகளில், நீரிழிவினால் எற்படுகின்ற இறப்புக்கள் 50% க்கும் அதிகமாகவும், நீரிழிவானது 2030ஆம் ஆண்டில், மனித இறப்புக்கான 7ஆவது காரணியாக அமையுமெனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

முதலாம் வகை நீரிழிவு, இன்சுலின் சுரப்புக் குறைபாட்டினாலும், இரண்டாம் வகை நீரிழிவு வினைத்திறனற்ற இன்சுலின் பயன்பாட்டினாலும் ஏற்படுகின்றது.

இரண்டாம் வகை நீரிழிவு (90%), முதலாம் வகையை (10%) விடவும் கணிசமான அளவில் அதிகரித்திருப்பதாக குறிப்பிடப்படுகிறது. சாதாரண குருதிக் குளுக்கோஸ் மட்டத்தை விட உயர்ந்தும், நீரிழிவு நோய் கணிப்பு குளுக்கோஸ் மட்டத்தை விடக் குறைந்தும்;, கர்ப்ப காலத்தில் நிலவுகின்ற அசாதாரண குருதிக் குளுக்கோஸ் நிலை கர்ப்பகால நீரிழிவு எனவும் குறிப்பிடப்படுகிறது. 80 சதவீதமான நீரிழிவு மரணங்கள், குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளிலேயே நிகழ்கிறது.

முறையான நீரிழிவு கட்டுப்பாட்டு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறுகின்ற நோயாளிகளில், பக்கவாதம், மாரடைப்பு, சிறுநீரக மற்றும் நரம்புக் கோளாறுகள், பார்வையிழத்தல் மற்றும் உடலுறுப்பிழத்தல் போன்ற தீவிரமான பக்க விளைவுச் சிக்கல்கள் ஏற்படும். நாளாந்த 30நிமிட மத்திய தர உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கிய உணவுப் பழக்க வழக்கங்கள், நீரிழிவினால் பீடிக்கப்படுவதை, கணிசமான அளவிலே தடுக்கின்றன.

### நீரிழிவு என்றால் என்ன?

8 மணி நேர உணவு தவிர்ப்பின் பின்னர் எடுக்கப்படுகின்ற இரத்த மாதிரியில், குளுக்கோசின் அளவு 126 mg/dlக்கு அதிகமாகவும், நீரிழிவின் பொதுவான அறிகுறிகளான, அடிக்கடி அதிகளவில் சிறுநீர் கழித்தல், அதிக தாகம் மற்றும் பசி, கடுமையான சோர்வு மற்றும் உடல் எடை இழப்பு போன்றவற்றையுடைய நிலை. அல்லது, எழுந்தமானமாக எடுக்கப்படுகின்ற இரத்த மாதிரியில், குளுக்கோசின் அளவு 200 மி.கி/டெ.லீ இற்கு அதிகமாகவும், நீரிழிவின் பொதுவான அறிகுறிகளையும் கொண்டிருக்கும் நிலை.

அல்லது, எவ்வித நீரிழிவு அறிகுறிகள் அற்ற நிலையிலும், உணவு தவிர்ப்பின் பின்னர், இரு வேறு நாட்களில் எடுக்கப்படுகின்ற இரத்த மாதிரியில் குளுக்கோசின் அளவு 126 mg/dl க்கு அதிகமாக இருக்கின்ற நிலை.

### உணவில் காணப்படுகின்ற குளுக்கோஸ், உடலுக்கு உகந்ததாக இருக்கையில், எவ்வாறு பிரச்சினையாக மாறுகிறது?

மனித உடலின் அனேகமான உறுப்புக்கள் புரதம் மற்றும் கொழுப்பினை சக்தி மூலங்களாகப் பயன்படுத்துகின்ற போதிலும், மூளை மற்றும் இரத்த சிவப்பணுக்கள் குளுக்கோசை மாத்திரமே சக்தி மூலமாகப் பயன்படுத்தும். உட்கொள்ளப்படும் மேலதிகக் குளுக்கோசானது இன்சுலினால், ஈரலில் கிளைக்கோஜன் என்ற பதார்த்தமாக மாற்றப்பட்டு சேமிக்கப்படும். நீரிழிவு நோயாளிகளில், இன்சுலின் சுரப்பு மற்றும் பயன்படுத்தல் குறைபாடு காணப்படும்.

இந்நிலையில், பொதுவாக நுண்ணிய இரத்தக் குழாய்கள் பாதிப்புக்குள்ளாவதோடு, அப்பாதிப்புக்களின் வெளிப்பாடுகள் கண் மற்றும் சிறுநீரகங்களின் தொழிற்பாடுகளை வெகுவாக பாதிக்கும்.

பொதுவாக நீரிழிவு நோயாளிகளின், வினைத்திறனற்ற உணவுக்கட்டுப்பாடு 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழியினைப் போன்று மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

### நீரிழிவு நோயாளிகள், பாதப் பராமரிப்புப் பற்றி அதிக அக்கறை கொள்ள வேண்டியதன் அவசியம்?

நீரிழிவு நோயாளிகள், முகத்துக்குக் கொடுக்கும் அளவிலான முக்கியத்துவத்தை பாதப்பராமரிப்பிலும் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும். ஏனெனில், நீரிழிவுப் பாதிப்புக்கு முதலில் முகங் கொடுக்கும் உடல் உறுப்பு பாதமாகும்;.

மேலும், பாதத்திலிருக்கும் நரம்புகளும், இரத்தக் குழாய்களும், உணர்திறன் மற்றும் செயற்பாட்டு பின்னடைவுகளை எதிர் நோக்குவதால், பாதங்களில் ஏற்படுகின்ற காயங்களின் வலிகளை உணர்வதிலும், காயங்கள் மாறுவதிலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அத்தோடு நோயெதிர்ப்புச் சக்தி குறைவினால், காயங்கள் நுண்ணங்கி தொற்றுக்குள்ளாகி அழுகல் நிலையடையும்.

### நீரிழிவு நோயாளியின் நிம்மதியான வாழ்க்கைக்கான மருத்துவ பரிசோதனைகள்?

வைத்திய ஆலோசனையுடனான பின்வரும் மருத்துவ பரிசோதனைகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாதமும் 12மணி நேர உணவுத் தவிர்ப்புக்குப் பின்னரும் அதனைத் தொடர்ந்து உணவு உள்ளெடுத்து 2 மணித்தியாலயங்களுக்குப் பின்னரான குருதிக் குளுக்கோசு பரிசோதனைகள்.

ஆறுமாதத்துக்கொரு முறை குருதி கொழுப்பு, ஹீமோகுளோபின்கி1C, மின் இதய வரைபு (ECG) பரிசோதனைகள்.

ஒவ்வொரு வருடமும் கண் பார்வை சரியாக இருந்த போதிலும் கண் பரிசோதனை, ஈரல், சிறுநீரகம் மற்றும் பாதப் பரிசோதனைகள்.

### நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டில், நேர்த்தியான உணவின் முக்கியத்துவம்?

ஆரோக்கிய உணவுக் கட்டுப்பாட்டு முறைதான், நீரிழிவுத் தாக்க விடுதலையின் மிகவும் முக்கியமான முதற்படியாகும். இது 'முள்ளை முள்ளால் எடுப்பது போன்றது'. உணவே பிரச்சினையாகின்ற போது அதற்குரிய தீர்வும் பொருத்தமான உணவாகத்தான் இருக்க முடியும்.

மருந்து மாத்திரைகளால் மாத்திரம் நீரிழிவைக் கட்டுப்படுத்துவது சவாலான விடயமாக இருப்பதோடு, அவற்றினால் ஏற்படுத்தப்படுகின்ற பக்கவிளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதும் சிரமமாகும்.

### நீரிழிவு நோயாளிகளுக்கான, உணவுத் தெரிவுகளின் மருத்துவப் பின்னணி?

ஒப்பீட்டளவில் விலங்குணவுகளை விடவும் தாவர உணவுகளே, கணிசமான அளவில் மனித ஆரோக்கிய முன்னேற்றத்துக்குப் பங்களிப்பதாக, பல்வேறு மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. தாவர உணவுகளில் காணப்படும் பல் வேறு வகை விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் தாவர ஊட்டச் சத்துக்கள் (Phyto nutrients) என்பன மனித உடற் கலங்களின் மீதான நச்சு இரசாயனத் தாக்கங்களைத் தடுக்கின்ற கருவிகளாக செயற்படுவதோடு, சில தாக்கங்களினால் விளைந்த பாதிப்புகளையும் பழுது பார்த்து, அக்குறிப்பிட்ட உடற் பகுதிகளை மீள் கட்டுமாணம் செய்யும்.

### நீரிழிவு உணவுக் கட்டுப்பாட்டில், முழுமையான தானிய உணவுகளின் ஆரோக்கிய முக்கியத்துவம்?

சிவப்பரிசி, தினை, வாற்கோதுமை என்பன முழுத் தானியங்களாகவும், வெள்ளை அரிசி மற்றும் வெள்ளைப் பாண் என்பன தீட்டிய தானியங்களாகவுமிருக்கும். தீட்டிய தானியங்களில், பெருமளவிலான விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் நச்சுத்தன்மை நீக்கிகள் (Antioxidant) என்பன அதிக அளவிலே அகற்றப்பட்டிருப்பதால், அது ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

### நீரிழிவு நோயாளிகள், கொழுப்பு உணவுகளை உட்கொள்வது பற்றி உங்களது பார்வை?

பொதுவாக கொழுப்புணவுகளைத் தவிர்ப்பதே ஆரோக்கியமானது. நீரிழிவு நோயாளிகளிடத்தில் காணப்படும் தவறானதொரு எண்ணம் என்னவெனில், பொரித்த உணவுகளான பருப்பு வடை, பயறு மற்றும் கடலை போன்றவற்றில் மாப்பொருள் மிக அரிது என்பதால், அவற்றின் மீதான அவர்களுடைய நாட்டத்தை அதிகரிக்கின்றனர். ஆனாலும் இவற்றில் காணப்படுகின்ற தீய கொழுப்புக்கள் உடற் கலங்களுக்குள் படிந்துவிடுவதனால், கலங்களுக்குள் உள்ளீர்க்கப்படும் குளுக்கோசைக் குறைத்து, குருதியில் குளுக்கோசு மட்டம் உயர்வதற்கான ஏதுவாக அமைந்துவிடுகின்றன.

### ஆரோக்கியத்துக்கு அபாயகரமான கொழுப்பு உணவுகள் பற்றி?

பெரும்பாலான இறைச்சிகள் மற்றும் வெண்ணெய் (Butter) போன்றவற்றிலுள்ள நிரம்பிய கொழுப்புக்கள், செயற்கை வெண்ணெய் (Margarine) போன்றவற்றில் காணப்படும் ஐதரசன் ஏற்றப்பட்ட கொழுப்புக்கள், பொரித்த உணவுகளில் காணப்படும் மாறுபக்கக் கொழுப்புக்கள் என்பன மனித ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிப்பனவாகும்.

### நீரிழிவானது வருமுன் தடுக்கப்படக்கூடிய வியாதியா?

நிச்சயமாக, முக்கியமான சில ஆரோக்கிய வாழ்க்கை முறை மாற்றங்களைப் பின்பற்றுகின்ற போது, ஒரு மனிதனை நீரிழிவுத் தீண்டலில் இருந்து முற்று முழுதாகப் பாதுகாத்துக் கொள்வது மிக எளிது.

### நீரிழிவிலிருந்து முற்று முழுதான விடுதலை பெற முடியுமா?

நீரிழிவு என்பது கட்டுப்பாட்டுமுறைகளைச் சரியாகப் பின்பற்றாதவிடத்து, முன்னகர்ந்து பாரிய பக்கவிளைவுச் சிக்கல்களை உருவாக்கும். இருந்த போதிலும் சரியான கட்டுப்பாட்டு முறைகளை ஒழுங்காக பேணுமிடத்து இலகுவாக பின்னகர்த்தலாம்.

குறிப்பாக இப்பின்னகர்த்தல் புதிதாக இனங்காணப்பட்ட நீரிழிவு நோயாளிகளில் இலகுவாக இருப்பதோடு, மருத்துவ ஆலோசனையுடனான அனைத்துக் கட்டுப்பாட்டு முறைகளையும், குறிப்பாக உணவுக்கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றிய நாட்பட்ட நோயாளிகளையும் பெருமளவில் குணப்படுத்தியிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆகமொத்தத்தில் உணவினால் உருவாக்கப்பட்ட ஒரு பிரச்சினைக்கு உணவேதான் தீர்வாக முடியும் என்ற உண்மையை மருத்துவ ஆய்வுகளே நிரூபித்திருக்கின்றன.


Dr.கார்த்திகேசு கார்த்தீபன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shan Thayaparan



"Helping you is what we do"


**Shan Thayaparan**
Sales Representative
*"Long Name, Amazing Results"*
**Dir: 416-567-7675**
**Email:info@shan123.com**

RE/MAX®
COMMUNITY
Realty Inc., Brokerage
Independently Owned and Operated.

**1265 Morningside Ave, Unit 203**
**Toronto, ON M1B 3V9**
**Tel: 416 287 2222**
**Fax: 416 282 4488**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JUNE16 - JULY16 CALENDER

**15**

7:00 AM

**Suresh Joachim-250**
hours-deejaying
சுரேஷ் ஜோசிம் 250
மணித்தியால வானலை
தொகுப்பு
CMR Radio
306 Rexdale Blvd
Toronto, ON




**17**

6:00 PM

**Sandiyan Audio Launch**
**சண்டியன்**
**திரைப்பட பாடல்**
**வெளியீடு**

JC's Banquet & Catering
1686 Ellesmere Rd.
Toronto, ON




**19**

Prima Dance School's Annual BBQ 11am to 5pm

**22**

CTCC's Ninth Annual Golf Classic Tournament
10 am to 6.00 Pm
Deer Creek Golf & Banquet Facility
2700 Audley Rd. N., Ajax, Ontario L1Z 1T7




**24**

**RA Rhythms Nite 2016**
5.30PM




**10th Annual Vasantha Vizha 2016**

at 6:30 PM - 10:30 PM
Blessed Cardinal Newman Catholic High School




**25**

**Coconut Carnival Markham Fair**
@ Markham Fairgrounds

5:00 PM

**Poopalam-2016 பூபாளம்–2016**
நட்சத்திரா இசைக்குழு
கனடா பெரிய சிவன் கோவில்
Bellamy & Ellesmere
1148 Bellamy Road North, Scarborough, M1H 2X4
Toronto, ON
Tel. (647)519-9186




வேர்களுக்காக
Walk-A-Thon 2016

John Daniels Park
7060 Markham Rd,
Markham, ON L3S 4M7,
Canada
satuday 10am




**01**

9:00 AM

**வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையின்**
**தமிழ் விழா** 2016
Patriots Theater at the War Memorial
1 Memorial Dr, Trenton, NJ 08608,
United States
Trenton,


**02**

2016 9:00 AM
**வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையின்**
**தமிழ் விழா** 2016




**08**

Event Launch and Press Meet of Journey
**A glimpse into Tamil Cinima**
6.30PM
3001 Markham Road Unit 10 Toronto




**09**

**Kothu Festival**

Markham, Ontario




**Submit Your Event @ Ekuruvi**
**Print - Online - Social -Mobile - Local**




» Event Promotion
» Event Coverage
» publicity
» Online Marketing
» Social Media Marketing

**To Learn More Call**
**416 272 8543**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

**Pradarshana**
fairview Library Theatre
35 Fairview Mall Dr, North York

நெடுந்தீவு ஒன்றியம் ஒன்று கூடல் 2016
Thomson Memorial Park Area D
1005 Brimley Road , Toronto
Call Panchan 416 629 4040




**Tholkaappiyam Seminar 3**
தொல்காப்பியக் கருத்தரங்குத் தொடர் 3
Toronto Tamil Sangam - 5637 Finch Ave. East., Unit 3A - Toronto, ON - 416-546-1394

**International Day of Yoga**
Venue: Brampton Soccer Centre - 1495 Sandalwood Pkwy E, Brampton, ON L6R 0K2
Date: June 18, 2016 - Time: 10:00 am to 10:00 pm

18

விருட்சம் கலைவிழா 2016
6.00PM
ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம்

பாசையூர் புனித அந்தோனியார் திருவிழாவும் ஒன்றுகூடலும்
Passalyoor ST.Anthony's Feast and Get Together
Mary Lake Shrine
13760 Keele Steet
King City




25

**JHLC OGA 25th Annual Dinner Nite**
( Jaffna Hindu Ladies' College OGA(canada)
6.00 PM Donation :$40
Kennedy Convention Centre Banquet Hall
1199 kennedy road, Toronto, Ontario M1P 2L2




26

**"Muthuvenil"-Seniors Fair**
JC's Banquet & Catering
1686 Ellesmere Rd.,
Toronto, Ontario
M1H2V5




# Event Marketing tips Call

# 416 272 8543

09

வல்வெட்டித்துறை ஒன்றுகூடல் 2016
Earl Bales Park
4169 Bathurst St, Toronto

---

தொண்டமானாறு ஒன்றுகூடல் 2016
Northwood Park
140 Stilecroft Dr , North York

17

**thaalam - the Ultimate Gaana Competition**
16.30 PM to 23.00PM
1 Theatre Ln, Brampton, ON L6V 0A3, Canada







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE KENNEDYS
CONDOMINIUMS

RE/MAX®
COMMUNITY
Realty Inc., Brokerage
Independently Owned and Operated.

Kennedy's Condos at KENNEDY AND HIGHWAY 401 !

Starting from Low $200's and 2 bedrooms from Low $300's !

Agincourt GO and Midland TTC Station 5 minutes away !



Located at Kennedy and Highway 401
2035 Kennedy Road,Scarborough

- STEPS TO SCARBOROUGH TOWN CENTRE
- STEPS TO PUBLIC TRANSIT
- MINUTES TO HIGHWAY 401/404
- Agincourt GO and Midland TTC Station are under 5 minute commute away
- 2 minute drive to Agincourt Mall - home to a Walmart, No Frills, LCBO, Shopper Drug Mart and restaurants
- Big box stores (Sears Home, Metro, Chapters and Michaels) are a stone's throw away
- Walking distance to Glamorgan Park - complete with baseball diamond, playground and splash pad
- Surrounded by public, private and Montessori.



**Thipan Raj**
Sales Rep.
**Cell : 416-629-2444**

1265 Morningside Ave, Suite 203 Toronto, ON. M1B 3V9 | Office: 416-287-2222 | Fax: 416-282-4488

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பொருளாதாரம்:

# தங்கமே தங்கம்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ



அரிசி விலை உயர்வில் அரசியல் இல்லை என்று யாராவது சொல்லமுடியுமா, அவ்வாறே, உலகப் பொருளாதாரத்தைத் தீர்மானிப்பது உலக அரசியலல்ல எனச் சொல்லமுடியாது. உலகப் பொருளாதார முடிவுகள் பல பொருளாதாரத் தேவைகட்காகவல்லாது,

அப்பொருளாதாரஞ் சார்ந்த அரசியற் காரணங்கட்காகவே எடுக்கப்படுகின்றன. உலக அரசியலே பொருளாதாரத்தைத் தீர்மானிக்கிறது. எண்ணெய் விலை தொட்டு உணவுப் பொருட்கள் வரை யாவும் அரசியல் நோக்கங் கருதியவை. பொருட்களின் கிடைக்குந் தன்மையைத் தீர்மானிப்பது உற்பத்தியல்ல. அதனாலேயே பல கோடிக்கணக்கானோர் பட்டினியில் கிடக்கையில் தொன்கணக்கான கோதுமை கடலில் கொட்டப்படுகிறது.

சில வாரங்கட்கு முன், ஜேர்மனியின் மிகப்பெரிய வங்கியான Deutsche Bank ஏனைய மேற்குலக வங்கிகளுடனும் அமெரிக்க வர்த்தக நிறுவனங்களுடனும் இணைந்து தங்கத்தை மதிப்பிறக்கக் கூட்டுச்சதி செய்ததை அமெரிக்க நீதிமன்றில் ஒப்புக்கொண்டது. உலகின் முன்னணி வங்கிகளான HSBC, Barclays, UBS போன்ற பிரபல வங்கிகளும் சதியிற் பெயரிடப்பட்டன. இது தங்கத்தை மதிப்பிறக்குவதனூடு அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து, அமெரிக்க டொலர்கள் உள்ளிட்ட உலகின் முக்கிய அந்நியச் செலாவணிகளின் முக்கியத்துவத்தைத் தக்கவைக்கும் முயற்சியைக் கோடு காட்டியுள்ளது. தங்கத்தின் மீது ஏன் இவ்வளவு அக்கறை, தங்கம் இன்று உலகப் பொருளாதாரத்தையே புரட்டிப்போடும் ஒன்றாகிறது. இம் மாற்றம் திடீரென நடக்கவில்லை.

2008ஆம் ஆண்டு உலகை உலுக்கிய பொருளாதார நெருக்கடி, இன்னமும் முற்றாக முடியவில்லை. நச்சுச் சுழல் போல ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கும், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கும் கண்டம் விட்டுக் கண்டத்துக்கும் எனப் பரவி, இன்று கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தைநெருங்குகையிலும் உலக மக்கள் அதன் தீய விளைவுகளை எதிர்நோக்குகின்றனர். இந்நெருக்கடி அரசியல் சார்ந்த பல்வேறு மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. இலாபம் குறைகையில் பல்தேசியக் கம்பெனிகளும் பெருநிறுவனங்களும் இலாபத்துக்கான புதிய வழிகளைத் தேடுகின்றன. அரசாங்கங்கள் அதை வசதிப்படுத்தக் கடப்பட்டுள்ளன. எனவே, போர்கள், ஆக்கிரமிப்புகள், ஆட்சிக்கவிழ்ப்புகள் எனப் பலவழிகளில் நாடுகளின் வளங்களைச் சுரண்டும் ஏற்பாடுகள் நடக்கின்றன. அரசியல் அறம் பிறழ்ந்து முற்றிலும் இலாபஞ் சார்ந்ததாகிறது.

தங்கம், இன்று முக்கிய பேசுபொருளாயுள்ளது. தங்கத்துக்கான கேள்வி இவ்வாண்டு முன்னில்லாதளவு உயர்ந்துள்ளது. உலக நாடுகள் தங்கத்தை வாங்கிச் சேமிக்கத் தொடங்கியுள்ளன. உலகின் அதி பெறுமதியான சேமிப்பாகத் தங்கம் கருதப்படுகிறது. ஐந்து ஆண்டுகட்கு முன் தங்கத்தின் முக்கியமும் அதன் தேவையும் முடிந்து விட்டன, தங்கம் இனி உலகின் முக்கியமான ஒரு சொத்தாகக் கருதப்படாது என உலகின் பெரும் வங்கிகள் கட்டியங்கூறித் தங்கத்தின் சாவை உறுதிகூறிச் சமாதி கட்டின. ஆனால், இன்று அதன் மீளுயிர்ப்பும் அதற்கப்பால் உலகப் பொருளாதாரத்திலும் அரசியலிலும் அது கொண்டுள்ள மிக முக்கிய இடமும் வலுவான ஒரு செய்தியை மீள எடுத்துரைக்கின்றன. தங்கம் உலக நாடுகளின் நாணயங்கள் போல கடதாசியல்ல. அது மிக விசேடமான[illegible] முறையில் தங்கத்தின் பெறுமதியையும் நம்பகத்தையும் உலகின் எந்த நாணயமும் பெற முடியாது.

சர்வதேச நாணயங்களை மையமாகக் கொண்டுள்ள உலகப் பொருளாதாரம், இன்று நெருக்கடியிற் சிக்கித் தவிக்கிறது. அதன் முக்கிய அம்சமான சர்வதேச வர்த்தகம் பாரிய சரிவைக் கண்டுள்ளது. வேகமாகச் சரியும் எண்ணெய் விலைகளின் காரணமாகச்சிக்கலைஎதிர்நோக்கும் பெட்ரோ—டொலர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார நெருக்கடி, பருவ மாற்றங்களால் விளைந்த உற்பத்திப் பற்றாக்குறை ஆகியவற்றால் வீழ்ச்சியைச் சந்தித்துள்ள உலகின் பிரதான அந்நியச் செலாவணியான அமெரிக்கடொலரின் ஸ்திரமின்மை, டொலரின் சரிவால் அதனுடன் பிணைந்துள்ள ஏனைய அந்நியச் செலாவணிகளின் வீழ்ச்சி என ஒன்றோடொன்று தொடர்புடைய கவலைக்கிடமான பொருளாதார நிலை, அந்நியச் செலாவணி மீதான நம்பிக்கையை முற்றாகச் சிதைத்துள்ளது. எந்த நாட்டு நாணயமும் உறுதியாயில்லாததால், நம்பிக்கையான காப்பீட்டைத் தரும் ஒன்றை எல்லோரும் தேடுகின்றனர். இலாபம் வராவிட்டாலும் முதலுக்கு மோசம் வராமையை எல்லோரும் விரும்புகின்றார்கள். எனவே பாதுகாப்பான காப்புறுதியை வழங்கக்கூடியதும் நாணயத்துக்கு மாற்றான நம்பிக்கையான பொருளாகத் தங்கம் தனி இடத்தைப் பிடித்துள்ளது.

உலகப் பொருளாதாரத்துக்கும் தங்கத்துக்குமிடையிலான உறவு மிக நீண்டது. பண்டைக் காலப் பண்டமாற்று முறையின் போதே பொருட்களை வாங்கவும் விற்கவும் வசதியான உலோகமாக வெள்ளியும் பின்னர் தங்கமும் அமைந்தன. காலப்போக்கில் தங்கத்தின் அளவை மையப்படுத்திய கொடுக்கல் [illegible] அமைந்தன. நவீன தேச அரசுகளின் தோற்றத்தின் பின், தங்கம் பொருளாதார வலிமையின் குறிகாட்டியாயிற்று. காலப்போக்கில், குறிப்பாக 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தங்கம் அவ்வந் நாட்டு நாணயங்களுடன் பற்றிறுக்கம் பெற்றது. ஒரு நாட்டின் திறைசேரியில் உள்ள தங்கத்தின் பெறுமதிக்கு நிகராக அந்நாட்டு நாணயங்களை அடிக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. தங்கமே ஒரு நாட்டின் அந்நியச் செலாவணியின் அளவுகோலாகியது. இதன் பயனாக ஒருவர் தன்னிடம் இருந்த தங்கத்தை வங்கியில் கொடுத்து அதன் பெறுமதிக்கு நிகரான குறித்த நாட்டு நாணயத்தைப் பெற முடிந்தது.

முதலாம் உலக யுத்தத்தில், பிரித்தானியாவின் இழப்புக்கள் பாரிய பொருளாதாரப் பின்னடைவை உருவாக்கின. தங்கத்துடன் பிணைந்த பிரித்தானியச் செலாவணி மூலம் தொடர்ந்தும் பிரித்தானியாவால் தனது பொருளாதாரத்தைத் தக்கவைக்க இயலவில்லை. போரினால் ஒருபுறம் மக்கள் மடிகையில், பிரித்தானிய அரசாங்கம் சிதையும் பொருளாதாரத்தை எவ்வாறேனுந் தக்கவைக்கப் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தது. அதற்குத் தீர்வாக, பிரித்தானிய நாணயத்தைத் தங்கத்துடன் பிணைத்திருக்கும் முறையை 1914இல் நீக்கிய இங்கிலாந்து வங்கி, நாணயத் தாள்களை வரையற்று அச்சிட்டுப் பொருளாதாரத்தைத் தக்கவைக்க முயன்றது. இவ்வாறு, தங்கத்தைக் கொடுத்து அதற்கு நிகரான அந்நியச் செலாவணியைப்பெறும்முறையைப் பிரித்தானியா நீக்கியது. இதன் வழி, நாடுகளின் நாணயங்களைப் பொருளாதாரத்தின் மையப்புள்ளியாக்கும் பணி தொடங்கியது.

அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், எவரும் தங்கத்தை வைத்திருப்பதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனைக்குரிய குற்றமாக 1933இல் அறிவித்தார். அதன்மூலம் அமெரிக்காவில் தனியார் கைகளில் இருந்த அனைத்துத் தங்கத்தையும் பறித்து அமெரிக்க சமஷ்டி ஒதுக்ககத்தில் (Federal Reserve) வைத்து, அமெரிக்க டொலரை முதன்மைக்குக் கொண்டுவந்தார். அப்போது, தனது நாணயத்தை உலகின் பிரதானமான நாணயமாற்றுச் செலாவணியாக்கும் வாய்ப்பு இருப்பதாக அமெரிக்கா கருதியது. அதேவேளை, உலக வர்த்தகத்தின் மைய நாணயமாக அமெரிக்க டொலரை நிறுவுவதனூடு உலகப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தலாம் என அமெரிக்கா எதிர்பார்த்தது.

1939இல் தொடங்கிய இரண்டாம் உலக யுத்தம் அமெரிக்காவுக்கு வாய்ப்பானது. முதலாம் உலக யுத்தத்தில் எப்பாதிப்புக்குமுட்படாத நாடும் போரின் மையமான ஐரோப்பாவுக்கு வெகு தொலைவில் இருந்த நாடுமென்ற வகையில், தங்கள் சேமிப்புக்களைப் பத்திரமாக வைக்க உகந்த இடமாக, அமெரிக்காவை உலக நாடுகள் கருதின. எனவே பல ஐரோப்பிய நாடுகள் தங்கள் சேமிப்பில் இருந்த தங்கத்தை அமெரிக்க வங்கிகளில் வைப்பில் இட்டன. இரண்டாம் உலகப் போரின் முடிவில் உலகின் முக்கிய வல்லரசாக அமெரிக்காவின் தோற்றமும் உலகின் முதன்மை நாணயமாக, அமெரிக்க டொலரின் விருத்தியும் தங்கத்தின் தனிப்பெரும் இடத்தைப் புறந்தள்ளி அங்கு அமெரிக்க டொலரை இருத்தின. அதன் மூலம், அமெரிக்காவில் வைப்பில் இட்ட தங்கத்தை மீளக் கொடாது அதற்கு ஈடான அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு அமெரிக்கா தனது நாணயத்தை முன்தள்ளியதன் மூலம் ஒருபுறம் தங்கத்தை உலகளாவிய ரீதியில் முக்கியமற்றதாக்கும் பணியில் இறங்கியதோடு, மறுபுறம் தங்கத்தை வாங்கிப் பதுக்கியது. சர்வதேச சந்தையில் தங்கத்தை ஒட்டுமொத்தமாக வாங்குவதன் மூலம் அதைச் சந்தையில் இருந்து அகற்றி அதன் முழு ஏகபோகத்தைக் கைப்பற்ற முனைந்தது. ஆனால், அமெரிக்காவுக்கு மாற்றுச் சக்தியாக உருவான சோவியத் யூனியனும் நட்பு நாடுகளும் அமெரிக்காவின் திட்டம் வெல்வதற்குப் பெருந் தடையாகின.

1970களில் சோவியத் யூனியனின் பொருளாதாரச் சரிவு புலனான போது, அமெரிக்க ஜனாதிபதி ரிச்சட் நிக்சன், அமெரிக்காவில் உற்பத்தியாகும் தங்கத்தை அமெரிக்க டொலர்கட்கு வாங்கும் நடைமுறையை 1971இல் நிறுத்தினார். எனவே அமெரிக்க டொலர்களைக் கொடுத்துத் தங்கத்தை வாங்க நாடுகட்கு இயலவில்லை. அந்நடைமுறை தற்காலிகமானது என நிக்சன் அறிவித்தாலும் 45 ஆண்டுகளுக்குப் பின்னும் இந்நடைமுறை விலக்கப்படாது இன்றும் நடைமுறையில் உள்ளது.

தங்கத்துக்கு நிகரான பெறுமதியுடைய நாணயத்தை மத்திய வங்கிகள் அச்சிடுதல் தேவையற்றது என ஜி—7 நாடுகள் 1973இல் முடிவெடுத்தன. சர்வதேச நாணய நிதியமும் தங்கம் விஷேசமான ஒரு சரக்கல்ல. அதுவும் ஏனைய சரக்குகள் போன்றதே என அறிவித்துத் தங்கத்தின் சாவுக்குச் சாசனமெழுதியது.

இன்று உலக நாடுகள் தங்கத்தை வாங்கப் போட்டி போடுகின்றன. உலகின் முக்கிய தங்க உற்பத்தியாளராக ஏகபோகத்தைக் கொண்டிருந்த அமெரிக்காவினும் அதிகமாகத் தங்கத்தை உற்பத்தி செய்யும் நாடுகளாகச் சீனாவும் ரஷ்யாவும் அமைந்தமை தங்க விலையைக் கட்டுப்படுத்தும் அமெரிக்க ஏகபோகத்துக்கு முடிவுகட்டியது.

இன்று அமெரிக்க டொலர் பாதுகாப்பற்ற நாணயமாகக் கருதப்படுகிறது. எந்த உலக நாட்டு நாணயமும் உலகப் பொருளாதார அதிர்வுகளால் மோசமான நிலையை அடையலாமென எல்லோரும் அறிவர். எனவே, பாதுகாப்பான சேமிப்பு முறையாகத் தங்கம் கருதப்படுகிறது. கடந்த சில மாதங்களில் ரஷ்யா அதிகளவான தங்கத்தை வாங்கியது. தனது தங்க இருப்பை அதிகரிப்பதாக அது வெளிப்படையாக அறிவித்துள்ளது. சீனாவும் தனது தங்க இருப்பைப் படிப்படியாக அதிகரிப்பதோடு டொலர் சார்ந்த பொருளாதாரத்திலிருந்து தங்கத்தை மையப்படுத்திய பொருளாதாரமாகத் தன்னைத் தரமுயர்த்துகிறது. டொலரிலிருந்து விடுபட்ட வர்த்தகத்தில் இறங்கவும் டொலரில்லாத உலகுக்கு வழிகாட்டியாகவும் அது முயல்கிறது.

ஐரோப்பாவின் பொருளாதார வல்லரசான ஜேர்மனி அமெரிக்க, பிரித்தானிய வங்கிகளில் வைப்பிலுள்ள தனது தங்கத்தை முற்றாக மீளப்பெற்று ஜேர்மனிய வங்கிகளில் முதலிடும் செயற்றிட்டத்தைவெளியிட்டுள்ளது. அதன் முதற்படியாகக் கடந்தாண்டு மட்டும் 120 தொன் தங்கம் மீளப்பெறப்பட்டு ஜேர்மனிய வங்கிகளில் வைப்பானதோடு 2020ஆம் ஆண்டளவில் உலகெங்கும் வைப்பிடப்பட்டுள்ள ஜேர்மனிக்குரிய 674 தொன் தங்கமும் மீள ஜேர்மனிக்குக் கொண்டு வரப்படும் என ஜேர்மன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இன்று, அமெரிக்க டொலரும் தங்கமும் எதிரெதிர் திசைகளிற் பயணிக்கின்றன. பொருளாதார வல்லுனர்களிடமும் வர்த்தக ஆலோசகர்களிடமும் இன்று கேட்கப்படும் கேள்வி ஒன்றே: எனது பணத்தை நான் எங்கு பத்திரமாக வைத்திருக்கலாம்? உலகப் பொருளாதாரத்தின் சரிவும் நிதியியல் நிறுவனங்களின் தோல்வியும் மக்கள் மத்தியில் நியாயமான அச்சங்களையும் ஐயங்களையும் உருவாக்கியுள்ளன.


உலகப் பொருளாதாரத்தில் தங்கத்தின் இன்றைய புத்துயிர்ப்பு இயல்பாக நிகழவில்லை. சர்வதேச நிதி நிறுவனமோ, உலக வங்கியோ தங்கத்தின் வருகையை விரும்பவில்லை. ஆனால் நிலைமைகள் அவைக்குச் சாதகமாயில்லை.

அமெரிக்க டொலரை, உலகப் பொருளாதாரத்தின் மையத் தானத்திலிருந்து புறந்தள்ளி தனக்குரிய அவ்விடத்தை மீளப்பெறுவதை தங்கத்தின் மீள்வரவு அறிவிக்கிறது. சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் டொலரிலிருந்து விடுபடும் தமது முயற்சியில் நல்லதொரு கூட்டாளியாகத் தங்கத்தை இணைக்கின்றனர்.

இருபத்தோராம் நூற்றாண்டின் நிதியியல் யுத்தத்தின் ஆயுதமாகத் தங்கம் உருப்பெறுகிறது

DEBT FREE CREDIT SOLUTION
SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY
Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)
Cell. 416.834.7227

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B3C6
Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7
Tel. 416.434.1522
Fax. 1.877.800.789
freedebt.toro@gmail.com
www.TotalDebtFree.ca


ஆதி சிலம்பம்
தமிழர் தற்காப்புக்கலை
Aathi Silambam
Tamil Martial Arts
Bamboo staff based Martial Art
ASAAN ஆசான் V.Pathman 416-556-6130
151 Nashdene Road, Unit 33, Markham, ON M1V 4C3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்தேங்காய்களும் தெருத்தெய்வங்களும்



Peace begins with a smile.

இந்திரன் ரவீந்திரன்

"மச்சான் வன்னியிலை போராலை பாதிக்கப்பட்ட கொஞ்ச பிள்ளையளுக்கு படிப்புச் செலவுக்கு உதவிகள் செய்துகொண்டு இருக்கிறன். உன்னாலை முடிஞ்ச உதவி ஏதாவது செய் மச்சான். சனம் எல்லாம் சரியான கஸ்ரப்படுதுகள்.. பாவம்." என்ற வேண்டுகோளை ஏற்று நண்பன் ஒருவன் குறிப்பிட்ட தொகை பணம் அனுப்புகிறார்.

சில நாட்களில் "போரால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினார்" என படங்களுடன் செய்தி வருகிறது. அதில் பணம் அனுப்பியவரின் பெயர் விபரம் எதுவும் இல்லை. தானே தன்னுடைய பணத்தில் வழங்கியதுபோல அந்த ஒருங்கிணைப்பாளர்.? செய்தி வடிவமைத்திருக்கிறார்.

மீண்டும் இதே போல் வேறு நண்பர்களிடமும் அந்த ஒருங்கிணைப் பாளர் உதவி கேட்கிறார். பின்னர் தான் உதவி வழங்கியதுபோலவே செய்தித்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் விளம்பரப்படுத்தி வருகிறார்.

மேலே சொன்னது ஒரு சிறு உதாரணம். இப்படி உதவி செய்வதும், உதவிக்கு பணம் திரட்டுவதும், பின்னர் அதை தங்கள் சுய இலாபங்களுக்காக விளம்பரப் படுத்துவதும் பலவகைகளில் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

முதல்நாள் உதவிசெய்தோம் என்ற புகைப்பட விளம்பரங்களும் மறுநாள் தங்கள் குடும்ப விளம்பரங்களும் சமூக வலைத்தளங்களில் "குப்பையாக" பரவிக் கிடக்கின்றது.

முதல்நாள் மக்களோடு மக்களாக நின்று அவர்களின் துன்ப துயரங்களில் பங்கெடுத்துவிட்டு மறுநாள் களியாட்ட மனநிலையில் பதிவிடுவது அருவருப்பானது. அன்னை தெரேசா அளவுக்கு இல்லாவிட்டாலும் ஒரு சமூக சேவையாளருக்கு இருக்கவேண்டிய குறைந்த பட்ச பண்புகளைக்கூட இவர்களிடம் காணமுடிவதில்லை. அல்லது கடைப்பிடிப்பதில்லை. இவ்வாறானவர்கள் உண்மையில் சமூக சேவையாளர்கள் என்ற போர்வையில் உலவும் சுய விளம்பரப் பேர்வழிகள்தான் தாங்கள் என்பதை தங்கள் செயல்பாட்டின்மூலமும் பதிவுகளின்மூலமும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரம் எந்த உதவியை எப்போது செய்யவேண்டும் என சத்தமின்றி செய்யும் பல தன்னார்வலர்களையும் சிறு தொண்டு நிறுவனங்ளையும் இந்த விளம்பரச் செய்திகளில் நாம் காண்பது அரிது. அல்லது அவர்கள் தாம் செய்யும் உதவிளை இவ்வாறு மலினமாக விளம்பரப்படுத்துவதில்லை.

எல்லோருமே நாங்கள் இரண்டு பிள்ளைகளை பார்க்கிறம் நாலு பிள்ளைகளைப் பார்க்கிறம் என்பதுதான் பேச்சு. அப்படி சொல்லப்படும் தொகையை கூட்டிப்பார்த்தால் அது போரால் பாதிக்கப்பட்ட மக்களின் தொகையைவிட அதிகமாக இருக்கும்.

அப்படியானால் இன்னமும் உதவி கிடைக்கவில்லை, உதவி தேவை போன்ற குரல்கள் ஏன் வருகின்றன என்பது பற்றி நாம் சிந்திக்கவேண்டும்.

ஒருவர் உதவி செய்வதும் செய்யாமல் விடுவதும் விளம்பரப் படுத்துவதும் அவர்களது உரிமை, சுதந்திரம் என்பது மறுப்பதற்கில்லை. அத்துடன் இவ்வாறாவது ஒரு சிலர் செய்கிறார்களே அதை விமர்சிப்பதன்மூலம் அதுவும் இல்லாமல் போய்விடும் என்ற சிலரின் ஆதங்கங்களிலும் நியாயம் இருக்கலாம்.

தனிமனிதர்களை விமர்சிப்பதும் குறைகூறுவதும் இப்பத்தியின் நோக்கம் அல்ல. மாறாக தொடர்ந்து அதிகரித்துவரும் இவ்வாறான தனிமனித அதிரடி விளம்பரப்படுத்தல்கள் போரால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் ஏற்படுத்திய ஏற்படுத்த இருக்கின்ற ஆரோக்கியமற்ற விளைவுகளை பரிசீலனை செய்வதற்கும் எதிர்காலத்தில் ஆரோக்கியமான செயல்பாடுகளைமுன்னெடுப்பதற்கும் உதவுவதே இப்பத்தியின் நோக்கம்.

நெறிப்படுத்தப்படாத உதவிகளும் சிலர் தங்களின் சுயவிளம்பரத்திற்காக செய்யும் உதவிகளும் உதவி பெறும் மக்களையும் உண்மையாக உதவி வழங்கும் மக்களையும் ஒருவித பொருளாதார மற்றும் உளவியல் சிக்கலுக்குள் இழுத்துச் சென்றுகொண்டிருப்பதை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

ஒரு மாபெரும் போரை தோள்களில் தாங்கிய சமூகத்தை நெறிப்படுத்தப்படாத உதவிகள்மூலம் தங்கிவாழும் சோம்பேறிச் சமூகமாக உருவாக்குவதும் சுய விளம்பர போலி தூதர்களால் அடிக்கடி அவர்களின் துன்ப துயரங்கள் உண்மைக்கும் அதிகமாக விளம்பரப்படுத்தப்பட்டு அவர்களை ஒரு அநாதைச் சமூகமாக சித்தரித்து மோசடி செய்வதும் தவிர்க்கப்படவேண்டும். குறிப்பாக அற்ப உதவிக்காக அவர்களைக் காட்சிப்பொருளாக்குவது மிகப்பெரிய அயோக்கியத்தனம்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின் (பொய்யாக) சேவைநோக்கமாக அணுகுவதற்குப் பதிலாக (உண்மையாக) இலாப நோக்கமாக அணுகியிருந்தால் இன்றும் "உதவி தேவை" "உதவி கிடைக்கவில்லை" "நாங்களும் உதவி செய்கிறோம்" என்ற அவலமும் அசிங்கமும் தொடர்ந்துகொண்டிருக்காது.

சுருக்கமாகச் சொன்னால் போரால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஒரு பொருளாதாரச் சிந்தனையான பயன் தருமே அன்றி சேவை நோக்கம் அல்ல. ஏனெனில் இன்றைய கால கட்டத்தில் சேவை நோக்கம் என்பது உலகின் பெரும்பாலான விடயங்களில் பெயரளவில் சுய இலாபங்களுக்காகத்தான் செய்யப்படுகின்றது. அதில் நாம் மட்டும் எப்படி விதிவிலக்காக இருந்துவிட முடியும். (இங்கு குறிப்பிட்ட மிகச்சொற்ப உண்மையான சேவை நோக்கம் கொணடவர்களை தவிர்த்துப் பார்க்கவும்)

"நாங்கள் மற்றவர்கள் பார்த்து பரிதாபப்படுபவர்களாக இருக்க விரும்பவில்லை. அப்படி இருப்பதால் எமக்கு தேவையானதை அவர்களால் என்றுமே தரமுடியாது" என்று தலைவர் பிரபாகரன் சொன்னதை நடைமுறையில் கண்டுவருகிறோம்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ மண்ணுக்கோ சேவகர்கள்தான் தேவையே தவிர (விளம்பரத்) தூதுவர்கள் அல்ல. இத்தனைகாலமும் அந்த மண்ணும் மக்களும் தூதுவர்களால் துவண்டது போதும். இத்தனை காலமும் அந்த மண்ணுக்கும் மக்களுக்கும் உதவிசெய்கிறோம் எனச்சொல்லி சுய இலாபம் அடைந்தது போதும்.

இன்னும் எத்தனைகாலம் சென்றாலும் நாம் பார்த்து பரிதாபப்படுபவர்களாகநமதுமக்களை வைத்திருக்கும்வரை அவர்களுக்கு வேண்டியதை எங்களால் நிறைவாக கொடுத்துவிடமுடியாது. அதே போல் மற்றவர்கள் பார்த்து பரிதாபப்படும் சமூகமாக நாம் இருக்கும்வரை அவர்களால் எங்களுக்கு வேண்டியதை தந்துவிடவும் முடியாது.

முதலில் நமது பொருளாதார பங்காளிகளாக நமது மக்களை மாற்றுவதன்மூலம் அவர்களுக்கு வேண்டியதை நாம் முழுமையாக கொடுக்கமுடியும். பின்னர் மற்றவர்களின் பொருளாதார பங்காளிகளாக நாம் மாறுவதன்மூலம் நமக்கு வேண்டியதை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு முதலில் உதவி தேவைப் படுபவர்களின் தரவுகள் முறையாக ஒருங்கிணைக்கப்படவேண்டும்.

அடுத்தது உண்மையாகவே அத்தியாவசிய உதவி தேவைப்படுபவர்களுக்கு தொடர்ந்து உதவிக்கொண்டிருக்கும் தன்னார்வலர்களும் சிறு சிறு தொண்டு நிறுவனங்களும் (பெரும்பாலும் புலம் பெயர்ந்த தேசங்களில் உள்ளோர்) ஒரு கூட்டுச் சக்தியாக (குறைந்தபட்சம் தகவல் பரிமாற்றத்துடன்) இயங்கவேண்டும். உதவி பெறுபவர்கள் உண்மையில் பயன்பெறுவதை உறுதிப்படுத்துவதுடன் இடைத்தரகர்கள் சுரண்டுவதையும் தங்களின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதையும் உதவி பெறுபவர்கள் உதவிகளை துஸ்பிரயோகம் செய்வதையும் தடுக்கவேண்டும்.

சுய விளம்பரத்திற்காகவும் சுரண்டலுக்காகவும் கிளம்பியிருக்கும் " போலிச் சமூக சேவகர்களை அடையாளம் கண்டு; எச்சரிக்கையும் செய்யவேண்டும் எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும்.

இறுதியாக உதவி தேவைப்படுபவர்களில் பெரும்பாலானவர்களை சேவை மனநோக்கத்துடன் அணுகுவதற்குப் பதிலாக வர்த்தக பங்காளிகளாக அணுகவேண்டும் அல்லது மாற்றிக்கொள்ள வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பொருட்கள் சேவைகளில் மூதலீடு செய்வதன்மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, தன்னிறைவு, ஏற்றுமதி, வருமானம் என முதலீட்டாளர்களும் பங்காளிகள் அல்லது தொழிலாளர்களும் பயன் பெறுவது பற்றி திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

போரின் பின் எவ்வளவு விரைவாக ஒரு சமூகம் பொருளாதார ரீதியாக மேம்பட்டு நிற்கிறதோ அவ்வளவு விரைவாக அது உளவியல் வலிமை பெறும். அதனூடாக அது தன்னை தற்காத்துக்கொள்ளவும் தனது விடுதலைக்காக தொடர்ந்து போராடவும் முடியும்.

எமது மக்களுக்கு இப்போது தேவை பொருளாதார நண்பர்களே அன்றி உதவிசெய்யவரும் தேவதூதர்கள் அல்ல. எமது மக்கள் மற்றவர்கள் பார்த்து பரிதாபப்படுபவர்களாக இருக்கமுடியாது. அப்படி இருப்பதால் அவர்களுக்குத் தேவையானதை மற்றவர்களால் என்றுமே கொடுக்கமுடியாது என்பதை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ONTARIO NDP

# உங்கள் தெரிவு

இருபதாண்டுகளுக்கு மேலாக சமூக, கலாசார, மற்றும் அரசியல் பணிகளில் எங்களுடன் பயணிப்பவர்.

ஐந்தாண்டு காலம் (மார்க்கம் மற்றும் ஸ்காபரோ பகுதிக-ளில்) கல்விச்சபை உறுப்பினராக (Public School Board Trustee) அனுபவம் பெற்றவர்.

BSc (Hons.), B.Ed, M.Ed ஆகிய மூன்று பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்ற பட்டதாரி.
கல்வித் துறையில் பல ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்தவர்.

கொள்கைத் தெளிவு, கடின உழைப்பு, விடா முயற்சி, பாரிய சவால்களைத் துணிவுடன் சந்திக்கும் திறன் போன்றவற்றிற்கு முன்னுதாரணமாக விளங்குபவர்.

பல ஆண்டுகளாக ஸ்காபரோ ரூஜ் றிவர் பகுதியில் தொழிலாற்றுவதுடன், அப்பகுதியிலேயே தனது மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வருபவர்.

எங்களின் நம்பிக்கையைப் பெற்று அரசியலில் பல மட்டங்களில் எங்களுக்காகக் குரல் கொடுத்து வருபவர்.

எதிர்வரும் ஸ்காபரோ ரூஜ் றிவர் (Scarborough Rouge River) மாகாண சபைக்கான இடைத்தேர்தலில் ஒன்ராரியோ புதிய சனநாயகக் கட்சி (Ontario NDP) வேட்பாளராகப் போட்டியிடும் நீதனுக்கு முன்பு போலவே தொடர்ந்தும் எங்கள் ஆதரவை வழங்கி இம்முறையும் அவரை வெற்றியடையச் செய்வோம்.



# நீதன் சண்முகராஜா (சண்)

## A Fighter for Scarborough

Authorized by the CFO for the Ontario NDP

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## "When it comes to lending, we make it happen"

- 2nd Mortgages
- Bad Credit, No Problem
- No Income, No Problem
- Consolidate Debts
- Tax & Mortgage Arrears
- Pay Off High Interest Credit Cards
- Renovations
- Private Mortgages

We specializes in private mortgage lending with unlimited funds. Satisfaction is guaranteed and we will get you on the road of financial freedom and peace of mind.

GGC Good Grade Capital Incorporated
FSCO Admin. Lic. #:12577
www.ggcapitalinc.com
akila@ggcapitalinc.com

- New Immigrants Welcome
- Bad Credit
- Self Employed
- Open Mortgage
- Pre Approval
- Non-residents

## MORTGAGE APPROVED... I AM HERE TO FIND THE RIGHT PRODUCT FOR YOU....

- 1ST AND 2ND MORTGAGES
- PURCHASES, REFINANCES AND RENEWALS
- COMMERCIAL LOAN
- BUSINESS OPERATING LINE
- CONSTRUCTION LOAN
- OWN PRIVATE FUNDING
- EQUIPMENT LEASING & FINANCING
- WE OFFER CONSTRUCTION DRAW MORTGAGES...
- CONSUMER PROPOSALS AND BANKRUPTCIES
- HOME EQUITY TAKE OUT
- CREDIT SETTLEMENTS

GOOD GRADE MORTGAGES
Your Mortgage Architects
www.goodgrademortgages.ca
Akila@goodgrademortgages.com

**Akila Senthil**, AMP
CEO, Principal Broker
Broker Licence #: M08002166
C: 416-895-4321
T: 905-366-4322, F: 905-366-4326
2600 Skymark Ave, Building 10, Unit 104A, Mississauga ON L4W 5B2
2761 Markham Road, Unit A3, Toronto ON M1X 0A4



# Meta Networks

For All Your Electric & Electronic Needs

வீட்டுக்கு உள்ளும் வெளியிலும் Pot Light & Spot Light பொருத்துவதற்கு இப்போது 25% கழிவு வழங்கப்படுகிறது.
குறிப்பு: இச்சலுகை குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே







<< We Are Experts In fixing Pot Lights & Designing >>

தரமான, விரைவான, நிறைவான சேவை

**Call Us For Free Estimate 416 300 9964**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியத்தின் உண்மையான அமைதி முகம் குத்துச்சண்டை வீரர் முகமது அலி

எஸ் ஆர் ராஜபாலன்

அமெரிக்காவில் முஸ்லிம்கள் வெறுப்பையும் தடையையும் எதிர்கொண்டிருக்கும் இந்த வேளையில் இஸ்லாமியத்தின் உண்மையான அமைதியின் முகமாக இருந்த மறைந்த குத்துச்சண்டை வீரர் முகமது அலியை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என அவர் வசித்துவந்த நகரத்தில் வசிப்பவர்கள் கூறுகின்றனர்.

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் முகமது அலி யூன் மாதம் மூன்றாம் திகதி மரணமடைந்த செய்தி அவரது ரசியர்களை ஆழ்ந்த துக்கத்துக்குள்ளாக்கியுள்ளது. அதிக எடைப்பிரிவில் மூன்று முறை உலகப்பட்டங்களை வென்றவர் முகமது அலி. 1984ஆம் ஆண்டு பார்கின்சன்ஸ் நோயினால் அவர் பாதிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. அதன் பின்னர் 4 ஆண்டுகள் கழித்து அவர் ஓய்வு பெற்றார். அமெரிக்காவின் தென் பகுதி மாகாணமான கென்டக்கியில் முகமது அலி பிறந்தார். அவருடைய இயற் பெயர் காசியஸ் க்ளே. தனது 18 வயதில் குத்துசண்டை களத்தில் இறங்கிய முகமது அலி 1964ஆம் ஆண்டில் தனது முதல் உலக பட்டத்தை வென்றவுடன் இஸ்லாத்திற்கு மதம் மாறினார். குத்துச்சண்டை களத்தில் மட்டுமின்றி அமெரிக்காவில் அக்காலத்தில் தீவிரமாக பரவியிருந்த இனவெறிக்கு எதிராகவும் அவர் போராடினார். அவர் குவிக்கும் வெற்றிகள் கறுப்பின மக்களிடையே புதிய எழுச்சியை ஏற்படுத்தின.

அவரது மறைவின் பின்னர் லூயிஸ்வில்லில் இருக்கும் அவரது குழந்தைப் பருவ வீட்டின் முன்பு நூற்றுக்கணக்கான மக்கள் கூடி அஞ்சலி செலுத்தினர். அவரது வாழ்க்கையை கௌரவிக்கும் விதமாக வும் அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக வும் அந்த வீடு இப்போது அருங்காட்சியகமாக மாற்றமடையவுள்ளது. அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தியவர்கள் மலர்கள் உட்பட பிற பரிசு பொருட்களை இவரது குழந்தைப் பருவ இல்லத்தில் விட்டுச் சென்றனர். அதேசமயம் அவரைப் பற்றியும் அவரது இஸ்லாமிய நம்பிக்கை பற்றியும் அவரது உதாரணம் இஸ்லாமியம் பற்றிய ஒரே மாதிரியான உணர்வுக்கு எப்படி உதவும் என்பது பற்றியும் உரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளன.

சர்வதேச ரீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சம்பவங்களினால் பெரும்பாலான நேரம் ஊடகம் மூலமாக முஸ்லிம்கள் பற்றிய ஒரு மோசமான கருத்து வெளியாகும் நிலையில் முகமது அலியில் மரணம் ஊடாக ஆரம்பமாகியுள்ள இந்த கலந்துரையாடல் உண்மையான இஸ்லாம் குறித்த புரிந்துணர்வை பலருக்கும் ஏற்படுத்தும். நிச்சயமாக முகமது அலி அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக மாத்திரமல்லாது உண்மையான இஸ்லாமியம் என்றால் என்ன என்பதை சித்தரிக்கும் வகையில் அமைவார் என்ற நம்பிக்கை பலர் மத்தியில் உள்ளது.

குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால் டிரம்ப் அனைத்து முஸ்லிம்களும் அமெரிக்காவில் நுழைய தற்காலிக தடைக்கு பரிந்துரைத்த போது அது சிற்றத்தை உண்டாக்கியது. தங்களை பிரபலப்படுத்திக்கொள்ள இஸ்லாமியத்தை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக நாம் துணிந்து நிற்க வேண்டும் என டிரம்ப்பின் பேச்சிற்கு தனது கூர்மையான கண்டனத்தை அப்போதே முகமது அலி வெளிப்படுத்தியிருந்தார். இஸ்லாமிய ஜிஹாதிகள் என அழைக்கப்படும் இரக்கமற்ற வன்முறையாளர்கள் நம்முடைய மதத்தின் சித்தாந்தங்களுக்கு எதிராக செல்கிறார்கள் என்பது உண்மையான முஸ்லிம்களுக்குத் தெரியும் எனவும் அந்தச் சந்தர்பபத்தில் கூறியவர் முகமது அலி.




முகமது அலியின் நினைவாக இஸ்லாமிய மையங்கள் உட்பட பல்வேறு இடங்களிலும் மதநல்லிணக்க பிரார்த்தனை சேவை நடத்தப்படுவது அவர் அனைத்து தரப்பினராலும் எவ்வாறு நேசிக்கப்படுகின்றார் என்பதை எடுத்துரைக்கின்றது. உலகின் மிக சக்தி வாய்ந்த நிலையை அடையவிருக்கும் ஒரு வேட்பாளர் மத ரீதியாக வேறுபட்டுள்ள பிற மக்களுக்கு எதிராக செயல்பட தீர்மானித்திருக்கும் வேளையில் முகமது அலியின் ஆதரவான சக்திவாய்ந்த குரல் வேண்டும் என கிறிஸ்துவ தேவாலயத்தில் நடைபெற்ற இவ்வாறானதொரு நிகழ்வில் பாதியார் ஒருவர் கூறியது குறிப்பிடப்படவேண்டியது.

பாக்கிஸ்தானில் இருந்து இந்தோனேஷியா வரை சவூதி அரேபியாவில் இருந்து மலேஷியா மற்றும் ஆப்பிரிக்கா என முஸ்லீம் உலகம் முழுவதும் தனது ஆதரவு மற்றும் உயரிய கொள்கைகளினால் முகமது அலி மதிக்கப்பட்டவர். 2001 செப்டம்பர் 11இல் நடைபெற்ற நியூயார்க் மற்றும் வாஷிங்டன் மீதான தாக்குதல்களுக்குப் பின்னர் அனைத்து முஸ்லிம்களையும் தீவிரவாதிகள் என வகைப்படுத்திய அமெரிக்கர்களுக்கு எதிராக முகமது அலி கண்டனம் தெரிவித்திருந்தார். இஸ்லாமியம் அமைதியின் மார்க்கம். அது பயங்கரவாதத்தையோ அல்லது மக்களைக் கொல்வதையோ ஊக்குவிப்பது இல்லை என்பது முகமது அலியின் கண்டனத்தின் அடிநாதமாக இருந்தது. நாச வேலைகளில் ஈடுபடும் ஒரு குறிப்பிட்ட இஸ்லாமிய சமூகத்தினர் உண்மையில் முஸ்லிம்களே இல்லை. அவர்கள் ஆயிரக்கணக்கான கொலைகளை அனுமதித்து தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொள்ளும் இனவாத வெறியர்கள் எனவும் செப்டம்பர் 11 தாக்குதலின் பின்னர் முகமது அலி கருத்துரைத்தவர்.


1960ல் இருந்து 1981 வரை முகமது அலி குத்துச்சண்டை உலகின் முடிசூடா மன்னனாக இருந்தார். 61 தொழில்முறை குத்துச்சண்டை போட்டிகளில் 56ல் வெற்றி பெற்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். இதில் 37 போட்டிகளில் நாக் அவுட் முறையில் வென்றதால் 'நாக் அவுட் நாயகன்' என்று அழைக்கப்பட்டார். 3 முறை உலக குத்துச்சண்டை சாம்பியன் பட்டத்தை வென்றார்.

முகமது அலியின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களின் பட்டியல் அவர் எவ்வாறெல்லாம் நேசிக்கப்பட்டார் என்பதை உலகிற்கு பறைசாற்றியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org